இந்தியாவிலேயே மிக அதிகமாக விற்பனையாகும் மாத நாவல்

# க்ரைம் நாவல்

ரூ.10 9/2009

250

# இப்படிக்கு ஓர் இந்தியன்



## ராஜேஷ்குமார்

250-ஐ தாண்டி 500-ஐ நோக்கி செல்வதற்கு எங்களுக்கு
ஊக்கமும் உற்சாகமும் தரும் வாசக தெய்வங்களுக்கு
என்றும் நன்றியுடன் - க்ரைம் நாவல்

எத்தனையோ பிரபல பத்திரிகைகள் 'எங்களுக்கும், அசோகனுக்குத் தருவது போல் மாதம் ஒரு புதுநாவல் தாருங்கள் - பணம் எவ்வளவு வேண்டுமானாலும் தருகிறோம்' - எனக் கேட்டுள்ளார்கள். அதற்கு, 'தம்பி அசோகன் எனக்கு உயிரையும் தருவார். நீங்க 'இன்று வரும் நாளை போகும்' பணத்தை மட்டும் தருவீர்கள். ஆண்டவனின் அருளால் எனக்குப் பணம் இருக்கிறது. அன்புத் தம்பி அசோகன் இருக்கார்' - என ராஜேஷ்குமார் அண்ணன் பதில் கூறியிருக்கார். இதற்காகவே அந்த பிரபல பத்திரிகைகளின் பொறுப்பாசிரியர்கள் அண்ணன் மீது இன்னும் வெறுப்பாக இருக்கிறார்கள். இப்படி பல உதாரணங்களைக் கூறிக் கொண்டே இருக்கலாம்.

"சார்... நான் தான் டி.டி.பி. கணேஷ், ஞாபகம் இருக்கா...?"

"என்னங்க கணேஷ் இப்படி சொல்லிட்டீங்களே... அதிபுத்திசாலி வாசகர்களில் நீங்களும் ஒருவர். சொல்லுங்க கணேஷ்... என்ன விஷயம்?"

"சார்... நான் முதல் இதழ் க்ரைம் நாவலில் இருந்து இன்று வரை சேர்த்து வைத்துள்ளேன். அதே நேரம் ராஜேஷ்குமார் சார் நாவல் வருகிற மற்ற நாவல்களையும் பார்த்துட்டேன். அண்ணனின் நாவலும், நம்ம க்ரைம் நாவலில் வருவதுதான் நல்லா இருக்கு. அதே மாதிரி நம்ம க்ரைம் நாவலின் தயாரிப்பு தரம் வேறு எந்த நாவலுக்கும் கிடையாது. 250-ஆவது இதழை ஆவலுடன் எதிர்பார்க்கிறேன். இதே மாதிரி ராஜேஷ்குமார் - ஜி.அசோகன் வெற்றி தயாரிப்பில் 500 ஆவது இதழும் பாராட்டும்படி தரமாக இருக்கும் - பாராட்டுக்கள் சார்."

"நன்றி கணேஷ்..."

இந்த வாக்குறுதி கணேஷின் வாக்குறுதி மட்டுமல்ல... உங்களின் வாக்குறுதியும்தான் என்று எனக்குத் தெரியும்.

என்றும் உங்களின் அன்புடனும், ஆசியுடனும்,

**ஜி.அசோகன்.**

# கோயமுத்தூரிலிருந்து டிரங்க்கால்

அன்பார்ந்த வாசக நெஞ்சங்களே!

வணக்கம்.

காலையில் கண் விழித்து படுக்கையினின்றும் எழுந்து உட்கார்ந்ததுமே நாட்டில் உள்ள பிரச்னைகள் நம்மை பயமுறுத்த ஆரம்பித்து விடுகின்றன. பன்றிக்காய்ச்சலிலிருந்து பருப்புவிலை உயர்வு வரை க்யூ வரிசையில் பிரச்னைகள். இந்தப் பிரச்சனைகளையெல்லாம் பார்த்து மலைத்துப் போவது மக்கள்தான். நாட்டை ஆள்பவர்களோ... அரசியல்வாதிகளோ அல்ல. ஆட்சி கை மாறி விடக் கூடாது என்பதுதான் அவர்களுடைய பிரச்னையே...!

சமீபத்தில் தமிழ்நாட்டில் 5 தொகுதிகளில் இடைத்தேர்தல் நடந்து முடிந்தது. பொதுத் தேர்தலுக்கு இன்னமும் 1 3/4 வருடமே இருக்கும் இந்த நிலைமையில் இடைத் தேர்தல்களை நடத்த வேண்டிய அவசியமே இல்லை. ஆனாலும் தேர்தல் நடத்தப்பட்டது. இந்த இடைத் தேர்தல்களுக்காக கோடிக்கணக்கான ரூபாய்கள் செலவிடப்பட்டது. இந்தப் பணம் முழுவதும் மக்களின் வரிப்பணம். தேர்தல் ஆணையமும் அரசாங்கமும் தேர்தல்கள் நடத்தப்பட்டதற்கான காரணத்தை சொல்லும் பொழுது அது ஜனநாயகக் கடமைகளில் ஒன்று என்று வாதம் செய்யலாம்.

இடைத் தேர்தல்கள் நடத்தப்பட வேண்டியது தான்! அது எப்போது, எந்த சூழ்நிலையில் நடத்தப்பட வேண்டும் என்பதற்கு ஒரு வரைமுறை இருக்கிறது அல்லவா? ஒரு தொகுதியின் எம்.எல்.ஏ. திடீரென்று இறந்து போனால் அந்த தொகுதியின் பிரச்னைகளைக் கவனிக்க ஒரு எம்.எல்.ஏ. வேண்டும். அதற்காக தேர்தலை நடத்தலாம். ஆனால் இப்போது இடைத் தேர்தல் எதற்காக நடக்கிறது? ஒரு தொகுதியின்



எம்.எல்.ஏ.வுக்கு தான் சார்ந்து இருக்கும் கட்சியின் தலைமை பிடிக்காமல் போனால் உடனே எம்.எல்.ஏ. பதவியை ராஜினாமா செய்துவிட்டு அரசியல் ஆதாயம் கருதி வேறு கட்சிக்குப் போய்விடுவதால் இடைத்தேர்தல் நடத்த வேண்டிய கட்டாயம் தேர்தல் ஆணையத்திற்கு ஏற்படுகிறது. அதாவது ஒரு எம்.எல்.ஏ. வின் கோபத்துக்காக ஒரு இடைத்தேர்தல். இது எந்த வகையில் நியாயமானது? ஒரு தொகுதியில் மறுபடியும் தேர்தலை நடத்துவது என்பது பல்லைத் தேய்த்து வாயைக் கொப்பளிக்கிற மாதிரி விஷயமா? அதற்காக சில கோடிகளைக் கொட்ட வேண்டும். ஆயிரக்கணக்கான அரசு ஊழியர்களைத் தேர்தல் பணியாளர்களாக நியமனம் செய்ய வேண்டும். வோட்டு போட வருகிற லட்சக்கணக்கான மக்களின் மதிப்புமிக்க மனித நேரங்கள் விரயமாக்கப்பட வேண்டும். இது தவிர கட்சித் தொண்டர்களிடையே மோதல் ஏற்பட்டு கத்திக்குத்து சம்பவங்கள் நடந்து சில உயிர்கள் பலியாகவும் கூடும்.

தேர்தல் ஆணையம் இந்த இடைத்தேர்தல் நடத்தும் விஷயத்தில் சில கட்டுப்பாடுகளையும் விதிமுறைகளையும் கொண்டு வரவேண்டும். அப்போதுதான் மக்களின் வரிப்பணம் காப்பாற்றப்பட்டு லட்சக்கணக்கான மனித நேரங்கள் மிச்சமாகும்.

**இதோ! எனக்குத் தெரிந்த சில விதிமுறைகள்:**

1. ஒரு தொகுதியின் எம்.எல்.ஏ. மரணமடைந்தால் மட்டுமே அந்தத் தொகுதியில் இடைத் தேர்தல் நடத்தப்பட வேண்டும்.

2. அப்படி அவர் மரணம் அடையும் பொழுது பொதுத் தேர்தலுக்கு இரண்டு வருடமாவது மீதி இருக்க வேண்டும்.

3. ஒரு தொகுதியின் எம்.எல்.ஏ. கட்சி மாறுவதற்காக தன்னுடைய எம்.எல்.ஏ. பதவியை ராஜினாமா செய்தால் அந்தத் தொகுதிக்கு இடைத் தேர்தல் நடத்தக்கூடாது. அதற்குப்பதிலாக ராஜினாமா செய்த எம்.எல்.ஏ. வுக்கு அடுத்தபடியாய் சென்ற தேர்தலில் எந்தக் கட்சியின் வேட்பாளர் அதிக வோட்டு வாங்கினாரோ அவர் அந்தத் தொகுதியின் எம்.எல்.ஏ. என்று தேர்தல் ஆணையம்



அறிவிக்க வேண்டும். இப்படி செய்வதின் மூலம் இடைத்தேர்தல் என்கிற தண்டச் செலவு தேவையற்றதாகிவிடும்.

4. பொதுத் தேர்தலுக்கு ஒரு வருடம் இருக்கும் பொழுது ஒரு எம்.எல்.ஏ. மரணமடைந்து விட்டால் அந்தத் தொகுதியின் பணிகளை மாவட்ட கலெக்டர் கவனிக்க வேண்டும்.

"ஸார்..! நீங்க சொல்றதெல்லாம் சரிதான்...! ஆனா இதையெல்லாம் தேர்தல் ஆணையம் நடைமுறைக்குக் கொண்டு வருமா?"

"க்ராஸ்டாக்ல யாருங்க..?"

"துடியலூர் கண்ணன் ஸார்."

"கண்ணன், எப்படியிருக்கீங்க..?"

"ஃபைன் ஸார்.. போன க்ரைம் நாவலில் வெளிவந்த உங்க '**பொய், பொய்யைத் தவிர வேறொன்றுமில்லை**' நாவல் மெய்யாலும் நல்லாயிருந்தது ஸார், சுருக்கமா சொல்லப் போனா மெய் மறந்துட்டேன்!"

"உங்க பாராட்டுக்கு நன்றி கண்ணன்! இப்ப உங்க கையில் இருக்கிற க்ரைம்நாவல் 250 - வது க்ரைம் நாவல். விவேக்கும் விஷ்ணுவும் கலக்கும் இந்த நாவலைப் படிங்க..! படிச்சதும்... பாராட்டுவீங்க... பாராட்டுவீங்க... பாராட்டிக்கிட்டே இருப்பீங்க..."

"இதோ! இப்பவே நாவலைப் படிக்க ஆரம்பிச்சுடறேன். அதுக்கு முந்தி..."

"புரியுது புரியுது..! அடுத்த மாத க்ரைம் நாவலோட தலைப்பை உங்ககிட்டே சொல்லணும்"

"அதே... அதே...!"

"**23 - வது ஜன்னல்!**"

"என்ன ஸார் தலைப்பே வித்தியாசமாய் இருக்கு?"

"கதையும் வித்தியாசம்தான்! அடுத்த மாதம் வரைக்கும் வெயிட் பண்ணுங்க கண்ணன்!"

டொக்!

மிக்க அன்புடன்

**ராஜேஷ்குமார்**

# ராஜேஷ்குமாரிடம் கேளுங்கள்

★ சென்னையில் சர்வக்ஞர் சிலை, பெங்களூருவில் திருவள்ளுவர் சிலை. இது ஒரு நல்ல ஆரம்பம்தானே..?

(த. ஜெயகாந்தன், புன்செய்புளியம்பட்டி.)

★ ★ நல்ல ஆரம்பம்தான்..! நம் முதல்வர் எடியூரப்பாவும் ஒரே மேடையில் உட்கார்ந்து சிரித்துப் பேசுவதைப் பார்த்தபோது மனசுக்குள் ஒரு சந்தோஷம் எட்டிப்பார்க்கத்தான் செய்தது. இருந்தாலும் அதையும் மீறி ஒரு பயம் அடிவயிற்றிலிருந்து எட்டிப்பார்க்காமல் இல்லை. காவிரி நீர் பங்கீடு சம்பந்தமாய் நாம் எதைப் பேசினாலும் கன்னடர்களால் அதைப் பொறுத்துக்கொள்ள முடியாது. 'சுப்ரீம் கோர்ட் தீர்ப்பின்படி எங்களுக்குக் கொடுக்க வேண்டிய தண்ணீரைக் கொடுங்கள்' என்று கேட்டாலும்கூட அவர்களுக்குக் கோபம் வந்துவிடும். அந்தக் கோபத்தை மேலும் தூண்டிவிட அங்குள்ள எதிர்க்கட்சிகள் 24 மணி நேரமும் தயாராகவே இருக்கின்றன. இத்தனை நாட்களும் நாம் தண்ணீர் கேட்டால் கன்னடர்களின் கோபம் அங்கே வாழ்ந்து கொண்டு இருந்த தமிழர்கள் மேல் பாய்ந்து கொண்டு இருந்தது. இனிமேல் அவர்களின் கோபம் ஒரு பாவமும் அறியா திருவள்ளுவர் சிலை மீது திரும்பும். திருவள்ளுவர் சிலை சேதப்படுத்தப்பட்டால் பதிலுக்கு நம்மவர்கள் சர்வக்ஞர் சிலையை சேதப்படுத்த நினைப்பார்கள். இது மேலும் பிரச்சனையைப் பெரிதாக்கும். இருந்தாலும் கொஞ்சம் பயத்தோடும், கொஞ்சம் சந்தோஷத்தோடும் இந்த சிலைகள் திறப்பு முயற்சியை வரவேற்று வைப்போம்.

★ நியூமராலஜியை நம்பலாமா...?

(எஸ். ஆனந்த், கோவை - 2 )

★ ★ தாராளமாய் நம்பலாம். நியூமராலஜியில் 543210 என்ற எண்கள் ஒவ்வொரு ஆணின் வாழ்க்கையிலும் இடம் பிடிக்க வேண்டும். அந்த எண்களில் அப்படி என்ன இருக்கிறது என்று கேட்கிறீர்களா? வாழ்க்கையின் எல்லா சந்தோஷங்களும் அந்த எண்களில்தான் இருக்கின்றன. ஒரு ஆண் படித்து முடித்ததும் அவனுக்கு 5 இலக்க எண்களில் சம்பளம் கிடைக்க வேண்டும். ஒரு 4 சக்கர வாகனம் இருக்கவேண்டும். 3 அறைகள் கொண்ட ஒரு ஃப்ளாட்டோ வீடோ இருக்க வேண்டும். 2 அழகான குழந்தைகளுக்கு அப்பாவாக இருக்க வேண்டும். 1



மனைவி மட்டுமே சொந்தமான ஏகபத்தினி விரதனாக இருக்க வேண்டும். 0 என்ற எண்ணிக்கையில் எதிரிகள் இருக்க வேண்டும். (இப்ப சொல்லுங்க... நியூமராலஜி வேண்டுமா... வேண்டாமா..?)

★ சர்தார்ஜி ஜோக்குகள் போல் வெளிநாட்டிலும் ஒரு குறிப்பிட்ட பிரிவினரைக் கேலி செய்யும் ஜோக்குகள் உண்டா..?

(வி. செல்வபாரதி, கோவைப்புதூர்.)

★ ★ உண்டு. நம்ம ஊர் சர்தார்ஜிகள் போல் அங்கே மாட்டிக் கொண்டவர்கள் பிரிட்டிஷ்காரர்கள். இதோ ஒரு ஜோக்!

ஒரு பிரிட்டிஷ்காரன் 13 - வது மாடியில் இருந்த தன்னுடைய ஆபீஸில் உட்கார்ந்து வடை சாப்பிட்டுக் கொண்டிருந்தான். அப்போது ஒரு மனிதன் உள்ளே வந்து பதட்டத்தோடு சொன்னான். "பீட்டர்! உன்னுடைய மகள் ரோஸி ஒரு வாகன விபத்தில் இறந்து விட்டதாக செய்தி..! நீ உடனே கிளம்பு..!"

பிரிட்டிஷ்காரனுக்கு அதிர்ச்சியில் என்ன செய்வது என்று தெரியவில்லை. சீக்கிரமாக புறப்பட்டுப் போக வேண்டும் என்ற எண்ணத்தில் தன்னுடைய ஆபீஸின் ஜன்னல் வழியாக வெளியே குதித்துவிட்டான். 13 - வது மாடியில் இருந்து குதித்தவனுக்கு 10 - வது மாடிக்குப் பக்கமாய் வந்த போதுதான் அவனுக்கு ஞாபகம் வந்தது - தனக்கு மகள் யாரும் இல்லையே என்று! 5 - வது மாடிக்குப் பக்கமாய் வந்தபோது சட்டென்று ஞாபகத்துக்கு வந்தது - தனக்கு இன்னும் கல்யாணம் ஆகவில்லை என்று! கீழ தரையில் மோதப் போகும் சமயத்தில்தான் அவனுக்கு இன்னொரு விஷயமும் ஞாபகத்துக்கு வந்தது - தான் பீட்டர் இல்லை என்பது!

★ காங்கிரஸார் சொல்வது போல் காமராஜர் ஆட்சி உண்மையிலேயே பொற்கால ஆட்சியாக இருந்ததா..?

(பா. தெய்வசீலன், விருதுநகர்.)

★ ★ இந்த சம்பவத்தைப் படியுங்கள்:

முதலமைச்சர் காமராஜர் மதுரையில் ஒரு நிகழ்ச்சியை முடித்துக் கொண்டு மதிய வேளையில் ஒரு கிராமத்தின் வழியாக காரில் போய்க் கொண்டிருந்தார். வயலில் ஆண்களும், பெண்களும் வேலை செய்து கொண்டிருக்க அவர்களுக்கு உதவியாக சில சிறுவர்களும், சில சிறுமிகளும் வயலில் இருந்தனர். அதைப் பார்த்துவிட்டு காமராசர் காரை நிறுத்தினார். அந்தக் குழந்தைகளைக் கூப்பிட்டார்.

"உங்களுக்கு இங்கே என்ன வேலை..? ஏன் பள்ளிக்கூடத்துக்குப் போகலை?"

அந்தக் குழந்தைகள் சொன்னார்கள்! "காலையில் பள்ளிக்கூடத்துக்குப் போனோம். மத்தியானம் வீட்டுக்கு சாப்பிட வந்தோம். அப்பா அம்மா வேலை செய்யச் சொன்னாங்க... அதுதான் செய்யறோம்"

"மத்தியானம் பள்ளிக்கூடத்திலேயே சாப்பாடு போட்டா

வீட்டுக்கு வரமாட்டீங்களா?"

"வரமாட்டோம். எங்களுக்கு படிக்கத்தான் ஆசை!"

உடனே காமராஜர் தனக்குப் பக்கத்தில் இருந்த தலைமைச் செயலாளரைக் கூப்பிட்டார். "படிக்கிற எல்லாப் பிள்ளைகளுக்கும் மத்தியான சாப்பாடு நம்ம அரசாங்கம் போடணும். போட்டா என்ன ஆகும்..?"

அதற்கு அந்த தலைமைச் செயலாளர் தயக்கத்தோடு "கஜானா காலியாகும்" என்றார். ஆனாலும் காமராஜர் அந்த வார்த்தையை பொருட்படுத்தாமல் சென்னை திரும்பியதும் எல்லா மாவட்ட கலெக்டர்களையும் கோட்டைக்கு வரவழைத்தார். "படிக்கிற எல்லாக் குழந்தைகளுக்கும் மத்தியானம் சாப்பாடு போடணும். என்ன செலவாகும்?" என்று கேட்டார். கலெக்டர்கள் கணக்கு போட்டுப் பார்த்து விட்டு "ஒரு மாணவனுக்கு ஒரு ரூபாய்" (அந்தக்கால விலைவாசிப்படி) என்று சொல்லியிருக்கிறார்கள்.

உடனே காமராஜர் "ஒரு ரூபாயில் 50 பைசா அரசாங்கம் கொடுக்கட்டும். 25 பைசா உள்ளூர் பஞ்சாயத்துக்கள் கொடுக்கட்டும். 15 பைசா தொண்டு நிறுவனங்கள் கொடுக்கட்டும் 10 பைசா அந்தப் பிள்ளையைப் பெற்ற அப்பன் வரியாய் செலுத்தட்டும்." என்று சொல்லி உடனே முடிவு எடுத்து மதிய உணவுத்திட்டத்தை நடைமுறைக்குக் கொண்டு வந்தார். அரிய பெரிய திட்டங்களையெல்லாம் அரை நிமிட நேரத்துக்குள் முடிவு எடுத்து அமல்படுத்தியவர் காமராஜர். இப்போது சொல்லுங்கள். அது பொற்காலமா? இல்லையா?

**★ நண்பனின் கை, காதலியின் கை - இந்த இரண்டில் எது ஒன்று ஒரு மனிதனுக்கு ஆதரவாய் இருக்கும்?**

**(பி. மதிமாறன், திருச்சி (கண்டோன்)**

★ ★ வெற்றியின் போது குலுக்கப்படும் கையைக் காட்டிலும், தோல்வியின் போது கண்ணீரைத் துடைக்கும் கையே மேலானது. அது நண்பனின் கையாக இருந்தாலும் சரி, காதலியின் கையாக இருந்தாலும் சரி!

**★ ஒரு சீரியஸான ஜோக்கை சொல்லுங்களேன்!**

**(தேனி மைந்தன், பாண்டிச்சேரி.)**

★ ★ நண்பா! அரசாங்கம் அவசரச்சட்டம் ஒண்ணு போட்டிருங்காங்க. அழகா இருக்கிற எல்லோரும் நாட்டை விட்டு உடனே வெளியேறணுமாம். நல்லவேளை... நீ தப்பிச்சிட்டே! நான்தான் எங்கே போறதுன்னு தெரியாமே முழிச்சிட்டு இருக்கேன்.

## பரிசுக்குரிய கேள்வி

**★ பெரிய ஹீரோக்கள் நடித்த திரைப்படங்கள் தோல்வியடைவதும், புதுமுக நடிகர்கள் நடித்த திரைப்படங்கள் வெற்றியடைவதும் எதைக் காட்டுகிறது?**

(பா.க. ராஜன், போரூர்.)



★ ★ ஒரு படத்தின் உண்மையான ஹீரோ கதைதான் என்பதை! கோடிக்கணக்கில் பணத்தைக் கொட்டி எடுக்கப்படும் பெரிய நடிகர்களின் படம் ஒரு வாரம் ஓடுவதற்குள் மூச்சுத்திணறிவிடுகிறது. காரணம் திரைக்கதை. ஒரே மாதிரியான ஃபார்முலாவில் எடுக்கப்படும் படங்கள் 10 நாள் ஓடுவதற்கு முன் மரணப்படுக்கைக்குப் போய்விடுகிறது. படம் எடுத்தவர்க்கும் நஷ்டம்; வாங்கியவர்க்கும் நஷ்டம். அண்மையில் வெளிவந்த மிகப்பெரிய பட்ஜெட் படத்திற்கு 'ஆனந்தவிகடன்' பத்திரிகை என்ன விமர்சனம் எழுதியிருந்தது தெரியுமோ..?

**ஒரே டிக்கெட்டில் நான்கைந்து பழைய படம் பார்த்த மாதிரியான உணர்வு ஏற்படுகிறது.**

ஒரு படத்தைத் தயாரிப்பதற்கு முன் திரைக்கதையை தயார் செய்ய, ஐந்து நட்சத்திர ஹோட்டல்களில் ரூம் போட்டுக் கொண்டு, மணிக்கணக்காய் பேசுபவர்கள், ஏற்கெனவே வெற்றி பெற்ற படங்களை மனதில் வைத்துக் கொண்டு அதிலிருந்து காட்சிகளை உருவி அதற்கு மூலாம் பூசுகிறார்கள். இப்படிப்பட்ட காட்சிகள் இருந்தால்தான் படம் ஓடும் என்று தப்புக்கணக்கு போட்டுக் கொண்டு ஏமாந்து போகிறார்கள். படம் பார்க்க வருபவர்கள் எல்லோருமே புத்திசாலிகள் என்று எந்த டைரக்டர் நினைக்கிறாரோ அவரால் மட்டுமே வெற்றிப் படத்தைக் கொடுக்க முடியும். அப்படிப்பட்ட டைரக்டர்கள் தற்போதைய தமிழ் திரையுலகில் இருக்கத்தான் செய்கிறார்கள். அவர்கள் மட்டுமே இப்போது வெற்றிப்படங்களைக் கொடுத்துக் கொண்டு இருக்கிறார்கள்.

**★ காதலில் தோல்வியடைவது ஆண்களா... பெண்களா?**

**(எஸ். கமலகுமார், உறையூர்.)**

★ ★ இந்தக் கவிதையைப் படியுங்கள்

**அவள் அழகின் ரகசியம்**
**இப்போதுதான் புரிகிறது.**
**எத்தனை முறை குளித்தாளோ**
**பல ஆண்களின் கண்ணீரில்?**

**★ விலைவாசி உயர்வு இப்படியே உயர்ந்து கொண்டு போனால் எதிர்காலத்தில் நிலைமை எப்படி இருக்கும்?**

**(வி. வேதா விநாயகம், திருப்பூர்.)**

★ ★ எப்போதோ... எங்கேயோ படித்த ஒரு கதை

திண்ணைக்கு வருகிறது. மன்னர் மந்திரியிடம் கேட்கிறார்.

"அமைச்சரே..! நம் உணவுக்கிடங்கில் எல்லாவிதமான உணவு தானியங்களும் போதுமான அளவில் இருப்பு இருக்கிறதா?"

"இருக்கிறது மன்னா!"

"நாட்டில் போதுமான அளவு மழை பெய்யவில்லையே?"

"மழை பெய்யாமல் வானம் பொய்த்துப் போனாலும் உணவு இருப்பு நிலைமை திருப்தியாக உள்ளது மன்னா! இன்னமும் மூன்று வருடகாலத்துக்குக் கவலையில்லை."

"அரிசி, பருப்புக்கு கொஞ்சம் தட்டுப்பாடு இருந்த மாதிரி போன மாதம் சொன்னீர்களே!"

"சொன்னேன்..! இப்போது நிலைமை சீராகிவிட்டது, மன்னா..! தானிய வகைகளுக்கு எந்தத் தட்டுப்பாடும் இல்லை."

"சரி... குடிநீர் நிலவரம் எப்படியுள்ளது?"

"அதுதான் மன்னா கவலையளிக்கிறது. நாட்டில் உள்ள ஏரிகளும் குளங்களும் வறண்டு போய்விட்டன. இன்னும் ஓராண்டுக்கு மட்டும் தாக்குப் பிடிக்கலாம். பிறகு சிரமம்..."

"குடிநீர்த் தட்டுப்பாடு இந்த அளவுக்கு மோசமாய் இருக்கும்போது அரிசி, பருப்பு போன்ற தானிய வகைகள் மட்டும் எப்படி விளைந்து போதுமான அளவில் இருப்பு உள்ளது?"

"மன்னா! நான் சொன்னதை நீங்கள் தவறாகப் புரிந்து கொண்டு விட்டீர்கள். நம் உணவுக் கிடங்கில் உள்ள அரிசி, பருப்பு போன்ற தானிய வகைகள் இன்னமும் மூன்று வருட காலத்துக்கு வரும் என்று சொன்னது, நம் இரண்டு பேரின் குடும்பங்களுக்கு மட்டுமே..! பொது மக்களுக்கு அல்ல."

இந்தப் பகுதிக்கு கேள்விகளை அனுப்ப
வேண்டிய முகவரி:-

## ராஜேஷ்குமாரிடம் கேளுங்கள்

**க்ரைம் நாவல்,**
**ஜீயே பப்ளிகேஷன்ஸ்,**
**352, திருவல்லிக்கேணி நெடுஞ்சாலை,**
**சென்னை - 5.**



## க்ரைம் நாவல் 250-ஆவது இதழ்
## சிறப்புக் கவிதை

### ஒரு கம்பார்ட்மெண்ட்டும் சில மனிதர்களும்

உறவுகள் உதிர்ந்தமனைவை
மஞ்சள் குருவி, பூநாகம்,
நிறமில்லாத புறவை,
நொண்டிக் குதிரை - போதி மரம்
நிறம் மாறும் வானவில்லின் வேள்வி.
கோடி ஆசைகள் கனம்..
நெஞ்சமெல்லாம் ஒரு தவிப்பு!
நிழலின் நிழல் புரியாத புதிர்.
தினம் தினம் தீவுத்தமனை
பூக்கள் எங்கும் பூக்கும்.
ஜன்னலோர சொர்க்கம் வேண்டும்!

-ஸ்ரீநிவாஸ் பிரபு.

இந்தக் கவிதையில் ஒரு பெரிய சுவாரஸ்யம் இருக்கிறது. கவிதை (தலைப்பு & வரிகள்) அனைத்தும் ராஜேஷ்குமார் அவர்கள் எழுதிய சிறுகதைகளின் தலைப்பை வைத்தே எழுதப்பட்டிருக்கிறது!

### ஹைக்கூ போட்டி

கத்தி......................
குத்து......................,
ரத்தம்......................

விடுபட்ட இடங்களில் வார்த்தைகள் போட்டு ஹைக்கூ கவிதை ஆக்குங்கள்.

ஜில்லென்று உறைய வைக்கும் சூப்பர் ஹைக்கூவிற்கு...'நச்' சென்று பரிசு தரப்படும்....ச்சே... கொடுக்கப்படும்!

போட்டிக் கவிதைகளை அனுப்ப வேண்டிய முகவரி:

**ஹைக்கூ போட்டி**

**க்ரைம் நாவல்,**
**ஜீயே பப்ளிகேஷன்ஸ்,**
352, திருவல்லிக்கேணி நெடுஞ்சாலை,
சென்னை - 5.

# அர்த்தமுள்ள அரட்டை

விவேக்கும் ரூபலாவும் மும்பையில் உள்ள ஒரு நண்பரின் வீட்டுத் திருமணத்தில் கலந்து கொண்டுவிட்டு சென்னை திரும்பினார்கள்.

மீனம்பாக்கம் ஏர்போட்டின் லௌஞ்சுக்குள் நுழைந்ததுமே விமான சிப்பந்தி ஒருவர் எதிர்பட்டார். இரண்டு பச்சை நிற முகக் கவசங்களை நீட்டினார். ''இதை அணிந்து கொண்டு தெர்மல் ஸ்கேனர்க்கு வாருங்கள். அதோ... அந்த அறைதான்..!'' சொல்லிவிட்டு அவர் போய்விட ரூபலா விவேக்கை திகைப்போடு பார்த்தாள்.

''என்னங்க இது..?''

''உனக்கும் எனக்கும் பன்றிக்காய்ச்சல் இருக்கான்னு சோதனை பண்ணப் போறாங்க. கவசத்தை மாட்டிக்க...''

''அவர் என்னமோ 'ஸ்கேன்'னு சொன்னாரே?''

**- ராஜேஷ்குமார்**

''தெர்மல் ஸ்கேன்! வெளிநாடுகளிலிருந்து விமானப் பயணத்தை மேற்கொள்கிறவர்களுக்கு பன்றிக் காய்ச்சல் அறிகுறி இருக்கிறதா என்பதைக் கண்டுபிடிக்க விமான நிலையங்களில் 'தெர்மல் ஸ்கேனர்' என்ற கருவி பயன்படுத்தப்பட்டு வருது.''

''அந்த ஸ்கேனர் எப்படி கண்டு பிடிக்கும்?''

''அதை இப்பத்தான் பார்க்கப் போறோமே?''

''அது எப்படி வேலை செய்யும்னு உங்களுக்குத் தெரியுமா தெரியாதா?''

''தெரியும்...''

''அப்ப சொல்லுங்க...''

''ரூபி..! அந்த ரூம்ல வைக்கப்பட்டு இருக்கிற ஸ்கேனர் கருவிக்கு முன்னாடி நாம சும்மா நடந்து போனா போதும். அது உடனே நம் தோலின் வெப்பநிலை எவ்வளவுன்னு கண்டுபிடிச்சு அந்த வெப்ப நிலைக்கு ஏற்றமாதிரி ஸ்கேனர் திரையில் நிறத்தை மாற்றிக் காட்டும். அதாவது உடலில் இருந்து வெளிப்படும் வெப்ப கதிர்வீச்சின் அளவை இந்த தெர்மல் ஸ்கேனர் கண்டுபிடிக்கிறது. வழக்கமான உடலின் வெப்ப நிலையைவிட இந்த வெப்ப கதிர்வீச்சின் அளவு அதிகமாக இருந்தால் அதை இந்தக் கருவி காட்டிக் கொடுத்துவிடும். ஒருவர்க்கு காய்ச்சல் இருந்தால் அவரோட உடலின் வெப்பம் வழக்கமான உடல் வெப்பத்தின் அளவான 37 டிகிரி செல்சியஸை அதாவது 98.6 டிகிரி பாரன் ஹீட்டை விட அதிகமாய் இருக்கும். அந்த நபர் தெர்மல் ஸ்கேனரைக் கடந்து செல்லும் போது ஸ்கேனரின் திரையில் குறிப்பிட்ட நிறம் அதிகமாகத்தான் தெரியும். ஆனால் அதை மட்டும் வைத்துக் கொண்டு



ஒருத்தர்க்கு பன்றிக்காய்ச்சல் இருக்குன்னு சொல்லிட முடியாது. பன்றிக்காய்ச்சல் அறிகுறி இருக்கா இல்லையான்னு ஓரளவுக்குத்தான் சொல்ல முடியும். அதை உறுதி செய்ய டாக்டர்கள் அடுத்த கட்ட சோதனையை ஆரம்பிப்பாங்க.''

ரூபலா பெருமூச்சுவிட்டாள்.

'' 'தெர்மல் ஸ்கேனர்' இவ்வளவுதானா..? நான் ஏதோ பெரிய அளவில் சோதனை பண்ணிக்க வேண்டியிருக்கும்னு நினைச்சேன். 'பாம் டிடெக்டர்' மாதிரின்னு சொல்லுங்க...''

''அதேதான்..!''

இருவரும் 'தெர்மல் ஸ்கேனர்' சோதனையை முடித்துக் கொண்டு கால்டாக்ஸியில் வீடு திரும்பிக் கொண்டிருந்த பொழுது ரூபலா கேட்டாள்.

''அது என்னங்க பன்றிக்காய்ச்சல்? பன்றிக்கும் இதுக்கும் என்ன சம்பந்தம்..?''

''இன்புளுயன்சா எச்.1 என்.1 என்ற விஷக்கிருமிகள்தான் பன்றிக்காய்ச்சலுக்கு காரணகர்த்தாக்கள். இந்தக் கிருமி கடந்த ஏப்ரல் மாதம் தென் அமெரிக்க நாடான மெக்ஸிகோவில் கண்டுபிடிக்கப்பட்டது. வட அமெரிக்காவில் உள்ள பன்றிகளில் காணப்படும் விஷக்கிருமி போல் இந்த எச்- 1 என் - 1 வைரஸ் இருப்பதால் இதற்கு 'ஸ்வைன் ப்ளூ' என்று நாமகரணம் சூட்டி அழைக்க ஆரம்பித்தார்கள். உண்மையில் பன்றிக்கும் இந்த காய்ச்சலுக்கும் ஒரு சம்பந்தமும் இல்லை. பறவைக் காய்ச்சல் பறவைகள் மூலம் மனிதனுக்கு பரவும். ஆனால் பன்றிக்காய்ச்சல் பன்றியிலிருந்து மனிதனுக்கு பரவுவது இல்லை. மனிதனிடமிருந்து மனிதனுக்குப் பரவுகிறது இந்த நோய்.''

''இந்த நோயோட அறிகுறிகள் என்ன?''

''காய்ச்சல், இருமல், தொண்டைவலி, தலைவலி, உடல்வலி ஆகியவைதான் பன்றிக்காய்ச்சலின் முக்கிய அறிகுறி. சிலர்க்கு வாந்தியும் வயிற்றுப் போக்கும் இருக்கும்... இந்த அறிகுறிகள் 3 முதல் 5 நாட்கள் வரை இருக்கும். பன்றிக் காய்ச்சலை உண்டாக்கும் வைரஸ் ஒருவரிடமிருந்து மற்றொருவர்க்கு எளிதில் பரவும் தன்மை கொண்டது. மேலும் இந்த வைரஸ்கள் குளிர் பிரதேசங்களிலும், மிதமான வெப்ப நிலை கொண்ட பகுதிகளிலும்தான் வேகமாய்ப் பரவும். அதிக வெப்பநிலையில் இந்த வைரஸ்கள் உயிர் வாழ முடியாது என்பதால் வேகமாகப் பரவாது.''

''அதிகமான வெப்பநிலைன்னா எவ்வளவு?''

''தமிழ்நாட்டில் சென்னையிலும், மதுரை, திருச்சி, சேலம், வேலூர் போன்ற நகரங்களிலும் சாதாரணமாக வெப்பநிலை 100 டிகிரிக்கும் அதிகமாய் உள்ளது. இந்த ஊர்களில் வெய்யில் வறுத்து எடுப்பதால் பன்றிக்காய்ச்சல் வேகமாய் பரவாது. தற்போது உள்ள வெப்பநிலையில் எச்.1 என். 1 வைரஸ்கள் 2 முதல் 4 மணி நேரம்தான் உயிரோடு

இருக்கும் என்பது மருத்துவ வல்லுநர்களின் ரிப்போர்ட்..."

"இந்த நோய் வந்துட்டா குணப்படுத்த முடியுமா?"

"இது குணப்படுத்தக் கூடிய நோய்தான். டாக்டர்களின் யோசனைப்படி 'டேமிபுளூ,' 'ரெலன்சா' என்ற இருவகை மாத்திரைகளை சாப்பிட்டால் நோயை முற்றிலுமாய் குணப்படுத்திவிட முடியும். மேலும் இந்த நோய் பரவுவதைத் தடுக்க உடலை சுத்தமாகத் வைத்துக் கொள்ள வேண்டும். சாப்பிடும் முன் கையை நன்றாய் கழுவ வேண்டும். அதாவது 10 விநாடிகளாவது கையைக் கழுவவேண்டும்..."

"இந்த நோய் இப்போது இந்தியாவில் மட்டும்தானா?"

"அது சரி... பன்றிக்காய்ச்சல் நோய் இப்போது உலகையே மிரட்டிக்கொண்டு இருக்கிறது. இந்த நோய் அமெரிக்கா, மெக்ஸிகோ, ஆஸ்திரேலியா, கனடா, சீனா என்று 76 நாடுகளைக் கதிகலங்க வைத்துக் கொண்டு இருக்கிறது. பன்றிக்காய்ச்சல் நோய்க்கு சரியானபடி ட்ரீட்மெண்ட் எடுத்துக் கொள்ளப்படாவிட்டால் மிகவும் ஆபத்தான நோய் என்பதால் - அதன் தாக்கத்தை கருத்தில் கொண்டு இதை **'உலக கொள்ளை நோய்'** என்று உலக சுகாதார நிறுவனம் அறிவித்துள்ளது. கடந்த 1968 - ம் ஆண்டு ஏற்பட்ட **'ஹாங்காங் ப்ளூ'** என்ற நோயை உலக கொள்ளை நோயாக உலக சுகாதார நிறுவனம் அறிவித்தது. அப்போது அந்த நோய்க்கு 10 லட்சம் பேர் பலியானார்கள். அதன் பிறகு 41 ஆண்டுகள் கழித்து இப்போது பன்றிக்காய்ச்சலை **உலக கொள்ளை நோயாக** அறிவித்து இருக்கிறார்கள்."

"இந்த நோய் முதன் முதலில் எந்த ஆண்டு கண்டுபிடிக்கப்பட்டது..?"

"1918 - ம் ஆண்டில் முதல் முறையாக இந்த நோயைப் பற்றி விஞ்ஞானிகள் வெளியுலகுக்கு எடுத்துச் சொன்னார்கள். அப்போது சரியான மருந்துகள் கண்டுபிடிக்கப்படாத காரணத்தால் உலகம் முழுவதும் 5 கோடி மக்கள் பலியானார்கள். அந்தக் கட்டத்திலதான் முதல் உலகப்போர் முடிந்திருக்கிறது. நாளடைவில் இந்த நோய் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டது. 58 வருடங்கள் கழித்து 1976 - ம் ஆண்டு மீண்டும் பன்றிக்காய்ச்சல் தலைகாட்டியது. பெரும்பாலான நோய்களுக்குக் காரணமாக இருப்பவை பன்றிகளாகும். அவை சாக்கடைகளில் வசிப்பதால் அவற்றின் உடலில் புதியவகை கிருமிகள் உற்பத்தியாகிவிடுகின்றன. இவற்றுடன் பழகுவதின் மூலமோ அல்லது இதன் மாமிசத்தை உண்பதின் மூலமோ அந்த வைரஸ்கள் மனிதர்களின் உடம்பில் இடம் பிடித்து விடுகின்றன. ஆனால் பன்றிக்காய்ச்சல் வருவதற்கு காரணம் பன்றிகளின் மூக்கிலிருந்து வெளியாகும் சளி மூலமே கிருமிகள் வெளியேறுகின்றன. அதனால் அந்த வைரஸ்கள் காற்றில் பறந்து பக்கத்தில் உள்ளவர்களைத் தொற்றிக் கொள்கின்றன. பொதுவாக வைரஸ்களால் தனியான வெட்ட வெளியில் இனப்பெருக்கம் செய்ய முடியாது. இந்த பூமியில்



எல்லா இடங்களிலும் வைரஸ்கள் பரவிக் கொண்டிருக்கும். ஆனால் ஏதாவது ஓர் உயிரினத்தின் உடலுக்குள் புகுந்து அதன் திசுக்களுடன் ஒட்டி கொண்ட பிறகுதான் அதன் செல்கள் பிரிந்து இனப் பெருக்கம் அடைகின்றன. அந்த வகையில் வைரஸ்கள் ஓர் ஒட்டுண்ணிகள் ஆகும்" விவேக் சொல்லிக் கொண்டிருக்கும் போதே நிறைய பேர் - வாகனங்களில் செல்பவர்கள் - முகங்களுக்கு பச்சைக் கவசம் அணிந்து செல்வதைப் பார்த்த ரூபலா கேட்டாள்.

"என்னங்க! முகத்துக்கு பச்சைக் கவசம் போட்டுகிட்டா பன்றிக்காய்ச்சல் தாக்காதா..?"

"அது ஒரு முன்னெச்சரிக்கை. அவ்வளவுதான்... நோய் எதிர்ப்பு சக்தி இல்லாதவர்களை இந்த நோய் எளிதில் தாக்கும். அது சரி; அந்த பச்சைநிற முகக் கவசத்துக்கு என்ன பெயர் தெரியுமா?"

விவேக் கேட்ட கேள்விக்கு ரூபலா பதில் சொல்வதற்குள் - வாசகர்களே! உங்களுக்கு பதில் தெரியுமா?

தெரிந்தால் ஒரு தபால் கார்டு எடுத்து பதில் எழுதி கீழ்க்கண்ட முகவரிக்கு 05-10-2009 தேதிக்கு முன்பாக அனுப்பி வையுங்கள். சரியான பதில் எழுதும் 5 பேர்க்கு புத்தகங்கள் பரிசாக அனுப்பி வைக்கப்படும்.

அனுப்ப வேண்டிய முகவரி:

**அர்த்தமுள்ள அரட்டை,**
**க்ரைம் நாவல்,**
**ஜீயே பப்ளிகேஷன்ஸ்,**
352, திருவல்லிக்கேணி நெடுஞ்சாலை,
சென்னை - 600 005.

**இனி சென்ற மாத 'அர்த்தமுள்ள அரட்டை'யில் கேட்கப்பட்ட கேள்வியும் அதற்கான பதிலும்:**

**கேள்வி:** கடலுக்குள் விழுந்து மூழ்கிய கறுப்புப் பெட்டியின் செயல்பாடுகள் எத்தனை நாளைக்கு துடிப்போடு இருக்கும்?

**பதில்:** 30 நாட்கள்.

**சரியான விடை எழுதிய 5 வாசகர்கள்**

1. ஜி. வடிவேலு - திண்டுக்கல்.2
2. சுதா ராமநாதன் - மைசூர்.7
3. எம். பழனியப்பன் - திருப்பத்தூர் .1
4. இப். ஸைமதீன் - பெண்ணாகரம்.
5. ஏ. விஸ்வநாதன் - மே. மாம்பலம், சென்னை - 23.




# 1

**செ**ன்னையின் அண்ணாசாலை. மே மாதம் மத்தியானம் பன்னிரண்டு மணி. அமிலமாய் கொட்டுகிற வெய்யில். வியர்வையில் நனைந்து கொண்டே பிரச்னைகளோடு நடக்கும் மக்கள். கோடிக்கணக்கில் பணத்தை செலவு செய்த மகிழ்ச்சியில் உயர்ந்து நிற்கும் ராட்சஸ கட்டிடங்கள். சாலைகளில் நகரும் ஏ.ஸி. கார்கள். ஜனங்களை லக்கேஜ்களைப் போல் ஏற்றிக்கொண்டு மூச்சுத் திணற நகரும் அரசு பஸ்கள். ரோட்டோர பீஸா கடைகளில் எதிர்கால பயம் இல்லாத இளைஞர்கள். கோன் ஐஸ்க்ரீம்களை கையில் வைத்துக் கொண்டு நுனி நாக்கில் ஆங்கிலம் பேசும் கல்லூரி மாணவிகள். போக்குவரத்து போலீஸார்க்கு பயந்து வியாபாரம் செய்யும் பழ வண்டிகள். சிக்னலில் சிவப்பு விளக்கு விழுந்தால் பிச்சை எடுக்கும் கைக்குழந்தைப் பெண்கள். அவர்களைப் பார்வையாலேயே துரத்தும் வாகன ஓட்டிகள்.

''பாஸ்...!'' தன் ஜென் காரை ஓட்டிக் கொண்டிருந்த விவேக்கை பக்கத்தில் உட்கார்ந்திருந்த விஷ்ணு கூப்பிட்டான்.

''என்னடா?''

''சென்னை எப்பவுமே இப்படித்தான் இருக்குமா?''

''இப்படியிருந்தாத்தான் சென்னை...''

''மாறணும்... பாஸ்...''

''எது...?''

''சென்னை...''

''சென்னை மாறாது... நாமதான் மாறணும். பார்! ரெட் எரியுது... டூவிலர் ஒருத்தன் அதை பொருட்படுத்தாமே எவ்வளவு வேகமாய் போறான் பாரு? ஆக்ஸிடெண்ட் ஆச்சுன்னு வை... அவனோட மொத்த குடும்பமும் ஒரே நாளல நடுத்தெருவுக்கு வந்துடும். ஒரு நிமிஷம் நின்னு போனா என்ன?''

''இந்த இடத்துல நான் ஒரு தத்துவம் சொல்லலாமா பாஸ்...?''

''அது தத்து பித்துன்னு இல்லாம இருந்தா சரி! சொல்லு!'' விஷ்ணு சொன்னான், ''நீ யோசிக்காமல் செய்யும் ஒவ்வொரு செயலும் உன்னை ஒவ்வொரு நிமிடமும் யோசிக்க வைக்கும்...!''

"அட... நல்லாயிருக்கே...! இதை எங்கிருந்துடா சுட்டே...?"

"என்ன பாஸ்..! எனக்கென்னமோ மூளை என்கிற வஸ்துவே இல்லாத மாதிரி பேசறீங்க...? எனக்கு சில சமயத்துல தோணும் பாஸ். நேத்து ராத்திரி மொட்டை மாடியில் படுத்துகிட்டு குஜிலிகள் நினைப்பு இல்லாமே மூளையை ஒட்டடை அடிச்சு சுத்தம் பண்ணிட்டு கொஞ்சம் புது மாதிரியாய் யோசிச்சேன். அப்படியே அருவியாய் கொட்டுது பாஸ். அப்படி கொட்டினதுல ஒண்ணுதான் நான் கொஞ்ச நேரத்துக்கு முன்னாடி சொன்ன ஒரு அர்த்தமுள்ள தத்துவம்...!"

"நான் அந்த காலத்து மன்னனாய் இருந்திருந்தா உனக்கு உடனடியாய் நூறு பொற்காசுகள் கொடுத்து இருப்பேன். சரி... பரவாயில்லை. உனக்கு முன்னாடி இருக்கிற கார் டேஷ் போர்டைத் திற!"

"எதுக்கு பாஸ்...! நீங்க பரிசு தர்ற அளவுக்கு நான் பெரிசா எதையும் சொல்லிடலை பாஸ்...! ஏதோ என்னோட சின்ன அறிவுக்குப் பட்டதை சொல்லி வெச்சேன். நீங்க இவ்வளவு எமோஷனல் ஆவீங்கன்னு எனக்குத் தெரியாது."

"டேய்...! மொதல்ல அந்த டேஷ் போர்டைத் திற."

விஷ்ணு திறந்தான்.

"உள்ளே சின்னதாய் கைக்கு அடக்கமாய் ஒரு புக் இருக்கு. தெரியுதா?"

"தெரியுது பாஸ்."

"அதை எடுடா..."

விஷ்ணு எடுத்தான்.

"அது என்ன புக்குன்னு தெரியுதா?"

"விவேகானந்தர் பொன்மொழிகள்ன்னு போட்டிருக்கு பாஸ்."

"அதுல 23 - ம் பக்கம் எடுத்து அங்கே என்ன பொன்மொழி போட்டிருக்குன்னு வாய்விட்டு படி..."

விஷ்ணு அந்தப் புத்தகத்தின் 23 - ம் பக்கத்தைப் பிரித்து பார்த்து விட்டு அமைதியாய் இருந்தான்.

"என்னடா பேச்சையே காணோம்?"

"அது வந்து பாஸ்..."

"என்ன... சொல்லு...!"

"நான் இப்ப சொன்ன 'நீ யோசிக்காமல் செய்யும் ஒவ்வொரு செயலும் உன்னை ஒவ்வொரு நிமிடமும் யோசிக்கவைக்கும்' என்கிற பொன் மொழியை விவேகானந்தர் காப்பியடிச்சு எனக்கு முன்னாடியே சொல்லிட்டுப் போயிருக்கார்! என்ன பாஸ் முறைக்கறீங்க...?"



"இல்லே உன்னை டி.வி.எஸ். பஸ் ஸ்டாப்ல இறக்கி விடலாமா... இல்லை ஜெமினி ஃப்ளை ஓவர் பக்கத்துல இறக்கிவிடலாமான்னு யோசனை பண்ணிட்டிருக்கேன்."

"எதுக்கு பாஸ்...?"

"பஸ் பிடிச்சு ஆபீஸ் வந்து சேரத்தான்..."

"அய்யோ... வேண்டாம் பாஸ்...! இந்த வெய்யில்ல நான் இறங்கி பத்து நிமிஷம் நடந்தா போதும் 'பாப்கார்ன்' தான்..."

"என்ன சொன்னே? பாப்கார்னா?"

"ஆமா... பாஸ்... இன்னிக்கு சென்னையோட உச்சபட்ச வெய்யில் எவ்வளவு தெரியுமா?"

"எவ்வளவு...?"

"109 டிகிரி..."

"இந்த வெய்யிலைப் பார்த்து நீ பயப்படறே...! அங்கே ஒருத்தனைப் பார்த்தியா?"

விவேக் கைகாட்டிய பக்கம் பார்த்தான் விஷ்ணு.

ரோட்டை இரண்டாகப் பிரித்த டிவைடரின் மேல் ஒருவன் குப்புறப்படுத்து இருந்தான். உடம்பு முழுவதும் சேர்க்கப்பட்ட காகிதத் தாள்கள்.

"யாரோ பைத்தியக்காரன் பாஸ்... ஏதோ சித்ரா பௌர்ணமி நிலா வெளிச்சத்துல படுத்துட்டு இருக்கிற மாதிரி நினைப்பு..."

விவேக் காரின் வேகத்தைக் குறைத்தான்.

"என்ன பாஸ்?!"

"விஷ்ணு...! அவன் உடம்பு மேல இருக்கிற பேப்பர் தாள்களைப் பார்த்தியா...? ஏதோ லெட்டர்ஸ் மாதிரி தெரியலை?"

விஷ்ணு உற்றுப் பார்த்தான். "அட...! ஆமா பாஸ், பெரும்பாலும் ஸ்கெட்ச் பேனாவால் எழுதப்பட்ட லெட்டர்ஸ்."

"நான் காரை ஓரமாய் பார்க் பண்றேன். நீ போய் அவனைப் பக்கத்துல பார்த்துட்டு வா... சம்திங் டிஃபரண்ட்..."

"பாஸ்...! இது நமக்கு தேவையா...? நாம இப்போ ஒரு கேஸ் விஷயமாய் நுங்கம்பாக்கம் போயிட்டு இருக்கோம்."

"இப்ப... நீ போறியா... இல்ல... நான் போகட்டுமா?"

"நானே போறேன் பாஸ்...! காலையில் கண் விழிக்கும் போதே நமீதாவோட ஞாபகம் வந்தது. இன்னிக்கு பொழுது நல்லபடியாய் இருக்கும்ன்னு நினைச்சேன். விபரீதமா போயிட்டிருக்கு... படுத்து கிடக்கிறவன் யாரோ? எங்கிருந்து வந்து இருக்

காணோ...? ஆளவந்தான் கமல் மாதிரி மனிதன் பாதி மிருகம் பாதி டைப்பாய் இருந்து தொலைச்சுட டான்னா... நான் தொலைஞ்சேன்"

"பயப்படாமே போயிட்டு வாடா...! உன்மேல பாய்ந்து அவன் கடிச்சு கிடிச்சு வெச்சான்னா நான் சும்மாயிருப்பேனா?

"என்னை அவன் கடிச்ச பின்னாடி நீங்க என்ன பண்ணமுடியும் பாஸ்...? என்னோட குலதெய்வமான காணாடு காத்தான் கருப்பண்ண சுவாமியை நினைச்சுகிட்டே போய்ப் பார்க்கிறேன்."

விஷ்ணு ரோட்டைக் கடந்து போக்கு வரத்தில் நடந்து சாலையின் டிவைடரில் படுத்து இருந்த அந்த நபரை நெருங்கிறான்.

புழுதி படிந்து அழுக்கேறியிருந்த அந்த இளைஞனின் நிர்வாண உடம்பை ஸ்கெட்ச்சால் எழுதிய லெட்டர்களும், பேனாவால் எழுதப்பட்ட லெட்டர்களும் ஆடையாய் மாறி மானத்தைக் காத்திருந்தன. முகம் ஒரு பக்கம் திரும்பியிருந்தது. அடர்த்தியான தாடி மீசை. மூடிய கண்கள். அசையும் புருவங்கள்.

விஷ்ணு குனிந்து குரல் கொடுத்தான்.

"இந்தாப்பா... உன்னைத்தான்!"

விஷ்ணு குரல கொடுத்துக் கொண்டே டிவைடரின் மேல் ஏறி நின்று அவனுடைய முகத்தை தெளிவாய்ப் பார்க்க முயன்றான்.

முடியவில்லை.

விஷ்ணு குத்துக்காலிட்டு உட்கார்ந்து அவன் உடம்பில் இருந்த ஒரு ஏ.4* சைஸ் லெட்டரில் பார்வையைப் போட்டான். பெரிய பெரிய எழுத்துக்கள்.

*அன்புள்ள நந்தா*

சந்தோஷமாக வாழ முயற்சி செய்யாதே! நிம்மதியாக வாழ முயற்சி செய். உன் வாழ்க்கை முழுவதும் சந்தோஷமாக இருக்கும். பதட்டம் வேண்டாம். பொறுமையாக இரு.

இப்படிக்கு
**உன் சுகிர்தா.**

**வி**ஷ்ணு இன்னொரு ஏ.4 சைஸ் லெட்டரை எடுத்துப் பார்த்தான். அதில் ஒரு கவிதையின் வரிகள்.

**அவளின் விரல் பட்ட**
**பரவசத்தில்**
**வாசலிலேயே**



**படுத்துக் கிடக்கிறது**
**கோலம்.**

விஷ்ணு அந்தக் கவிதையைப் படித்துவிட்டு விவேக்கைத் பார்த்தான். குரல் கொடுத்தான்.

"பாஸ்...! ஒரு நிமிஷம் வர்றீங்களா?"

"என்னடா... ஏதாவது பிரச்னையா?"

"வந்து பாருங்க பாஸ்."

விவேக் காரினின்றும் இறங்கி விஷ்ணுவை நோக்கி வந்தான். விஷ்ணு கண்ணைச் சிமிட்டினான். "பாஸ்...! இவன் ஒரு பெரிய கவிஞனாய் இருப்பான் போலிருக்கு. பக்கத்துல வந்து பாருங்க. எல்லா லெட்டரும் கவிதை மாதிரி இருக்கு... ஏதோ லவ் ஃபெயிலியர் கேஸ்... பாஸ்."

விவேக் அந்த இளைஞனுக்குப் பக்கத்தில் வந்து அவன் உடம்பின் மேல் இருந்த ஒரு லெட்டரைக் குனிந்து படித்தான்.

**அவன் நேசித்தான்.**
**அவள் நேசிக்கவில்லை**
**இன்று அவள்**
**நேசிக்கிறாள் - ஆனால்**
**அவனோ**
**சுவாசிக்கவில்லை.**

விவேக் இன்னொரு லெட்டரின் மேல் பார்வையைப் போட்டான்.

**வெற்றியைத் தேடி அலைந்த போது**
**வீண்முயற்சி என்றவர்கள்**
**வெற்றி கிடைத்ததும்**
**'விடா முயற்சி' என்றார்கள்**
**இதுதான் உலகம்.**

"பாஸ் இந்த லெட்டர்களையெல்லாம் தொகுத்து ஒரு புக்காய் போட்டா நல்லா சேல்ஸ் ஆகும் போலிருக்கு..."

"விஷ்ணு...! ஆள் கொஞ்சம் வித்தியாசமாய் இருக்கான். தட்டி எழுப்பு...!"

விஷ்ணு அவனுடைய காதருகே குனிந்து பலமாய் குரல் கொடுத்தான். "இந்தாப்பா... உன்னைத்தான்...!"

உடம்பு லேசாய் அசைந்தது.

"நல்லவேளை! உயிரோடு இருக்கான். போஸ்ட் மார்ட்டத்துக்கு அனுப்ப வேண்டியிருக்குமோன்னு நினைச்சேன் பாஸ்"

விஷ்ணு சொல்லிக் கொண்டிருக்கும்போதே அந்த ட்ராஃபிக் கான்ஸ்டபிள் வேக வேகமாய்ப் பக்கத்தில் வந்தார்.

"யார்... ஸார்... நீங்க...? அந்த ஆளுக்கு வேண்டியவரா?" கேட்டுக் கொண்டே விஷ்ணுவின் முகத்தையும் விவேக்கின் முகத்தையும் பார்த்த ட்ராஃபிக் கான்ஸ்டபிள் அந்த இருவரையும் அடையாளம் புரிந்து கொண்டு சட்டென்று அட்டென்ஷனுக்கு வந்து சல்யூட் அடித்தார்.

"ஸாரி...ஸார்... நான் யாரோன்னு நினைச்சுட்டேன்..."

விவேக் ட்ராஃபிக் கான்ஸ்டபிளை ஏறிட்டான்.

"அது இருக்கட்டும்...! நெருப்பாட்டம் கொதிக்கிற வெய்யிலில் நடு ரோட்ல டிவைடர்ல ஒருத்தன் இப்படி படுத்துக் கிடக்கிறது உங்க மனசுக்கு நெருடலாய் படலையா?"

"பட்டது ஸார்...! போய் எழுப்பிப் பார்த்தேன். ஆள் புரண்டு படுக்கிறானே தவிர எழுந்திரிக்கிற மாதிரி தெரியலை. ஆள் மென்ட்டல் மாதிரி தெரியறான் ஸார்... அதான் மென்ட்டல் ஹாஸ்பிட்டலுக்கு போன் பண்ணினேன். அவங்க வர்றேன்னு சொன்னவங்க இன்னமும் வரலை..." ட்ராஃபிக் கான்ஸ்டபிள் சொல்லிக் கொண்டு இருக்கும்போதே விஷ்ணு பதற்றமாய் குரல் கொடுத்தான்.

"பாஸ்...! இவனை உடனடியாய் ஜி.ஹெச். கொண்டு போகணும்...!"

"ஏண்டா...?"

"அவனோட கழுத்துப் பாகத்தில் இருக்கிற லெட்டரைப் படிச்சுப் பாருங்க...!"

விவேக்கின் பார்வை அந்த இளைஞனின் கழுத்தில் இருந்த லெட்டர்க்குப் போயிற்று.

சிவப்பு ஸ்கெட்ச் பேனாவால் பளிச்சென்று எழுதப்பட்ட வாசகங்கள் கண்ணில் அறைந்தன.

**சகி!**

**இரண்டு வருடங்களுக்கு முன்னால் இதே இடத்தில் சாலையைக் கடக்கும்போதுதான் உன்னை நான் முதன் முதலாய்ப் பார்த்தேன். நீயும் நானும் போக்குவரத்து விதிகளைப் புறம் தள்ளிவிட்டு ஒரு அவசரத்துக்காக சாலையைக் கடக்க முயன்றோம். அப்போது வேகமாய் வந்த ஒரு கார் உன் மீது மோத இருந்தது. நான் உடனே உன் இடுப்பில் கை வைத்து இழுத்துக் காப்பாற்றினேன். நான் உன்னைத் தொட்டதற்காக நீ ஒரு விநாடி கோபப்பட்டாலும் அடுத்த விநாடியே நன்றி சொன்னாய். அந்த நன்றி**



**நாளடைவில் காதல் என்ற வார்த்தையாய் மாறியது. இந்த இரண்டு வருட காலத்தில் காதல் என்ற வார்த்தையை கல்யாணம் என்ற வார்த்தையாக மாற்ற எவ்வளவோ முயற்சிகள் எடுத்துக் கொண்டோம். முடியவில்லை. திடீரென்று நீ என்னை வெறுக்க ஆரம்பித்தாய். காரணம் எனக்குப் புரியவில்லை. காரணம் புரியாமல் நான் வாழவும் விரும்பவில்லை. எனவே இரண்டு வருடங்களுக்கு முன்னால் இதே தேதியில் எந்த இடத்தில் நாம் முதன் முதலாய் சந்தித்தோமோ அந்த இடத்திலேயே என் உயிரை விடத் தீர்மானித்து விஷம் குடித்துவிட்டேன்.**

**இப்படிக்கு**
**உன்னை மறக்க முடியாமல்**
**மரணத்தை தழுவும் நந்தா.**

பி.கு: *என் உடம்பை போஸ்ட்மார்ட்டம் செய்யும் டாக்டர்களுக்கு ஒரு அன்பான வேண்டுகோள்! என் உடம்பின் உறுப்புகளில் எதை வேண்டுமானாலும் எடுத்துக் கொள்ளுங்கள். ஆனால் - என் இதயத்தை மட்டும் சோதனை என்ற பெயரில் கூறு போட்டு விட வேண்டாம். ஏனென்றால் என் இதயத்துக்குள் என் சகி நிரந்தர வாசம் செய்கிறாள்.*

"விஷ்ணு...!"

"பாஸ்"

"ஆம்புலன்ஸுக்கு போன் பண்ணு."

## 2

நம்பிக்கை இல்லாத மனிதன் முட்கள் இல்லாத கடிகாரம் போன்றவன். அது நின்றாலும் பயனில்லை, ஓடினாலும் பயனில்லை.

ஒவ்வொரு இந்தியனும் நம் இந்திய நாட்டை வல்லரசாக மாற்றும் முயற்சியில் நம்பிக்கையோடு ஈடுபட்டால் அந்த நம்பிக்கை நிச்சயம் வெற்றி பெறும்.

இப்படிக்கு,
ஓர் இந்தியன்.

**போ**லீஸ் கண்ட்ரோல் ரூம்.

மதிய உணவைச் சாப்பிட்டுக் கொண்டிருந்த கண்ட்ரோல் ரூம் ஆபீஸர் பத்மநாபன் டெலிபோன் ஒலிக்கும் சத்தம் கேட்டு ரிஸீவரை எடுத்தார். மறுமுனையில் ஒரு ஆண்குரல் கேட்டது.

"கண்ட்ரோல் ரூம்."

"நான் பப்ளிக் பிராஸிக்யூட்டர் வெற்றிவேலவன் பேசறேன்."

"ஓ... நீங்களா... குட் ஆஃப்டர்நூன் ஸார்."

"ஒரு முக்கியமான - விபரீதமான விஷயத்தை கன்வே பண்ணத்தான் இப்ப உங்களுக்கு போன் பண்ணினேன்."

"சொல்லுங்க ஸார்... என்ன விஷயம்?"

"மயிலாப்பூரிலிருந்து மந்தவெளிக்குப் போற வழியில் அலர்மேல் மங்கை நகர் பஸ் ஸ்டாப் ஒண்ணு இருக்கு..."

"தெரியும் சொல்லுங்க..."

"அந்த பஸ் ஸ்டாப் ஷெல்டரைச் சுற்றி நிறைய விளம்பர போர்டுகள் இருக்கும். சித்த வைத்தியத்திலிருந்து செல்போன் சர்வீஸ் வரைக்கும் எல்லா விஷயங்களும் அந்த விளம்பர போர்டுகளில் இருக்கும்... பார்த்து இருக்கீங்களா...?"

"ம்... பார்த்திருக்கேன்"

"கொஞ்ச நேரத்துக்கு முந்தி அந்த விளம்பர போர்டுகளுக்கு நடுவில் ஒரு விபரீதமான ப்ளாக்ஸ் போர்டைப் பார்த்தேன். அதில் இருக்கிற வாசகங்களைப் படிக்கும் போது மனசுக்குள்ளே லேசா பயம் வருது."

"அந்த போர்டில் அப்படியென்ன வாசகங்கள் இருக்கு ஸார்?"

"இப்ப நான் அந்த பஸ் ஸ்டாப் ஷெல்டர்க்கு எதிரே என்னோட காரை நிறுத்திட்டுத்தான் பேசிட்டிருக்கேன். பஸ்ஸுக்கு சில பேர் வெயிட் பண்ணிட்டு இருக்காங்க... ஆனா அவங்கள்ல யாருமே அந்த போர்டை கவனிக்கலை. நீங்க உடனடியாய் இந்த ஏரியா இன்ஸ்பெக்டர்க்கு தகவல் கொடுத்து அவரை பார்க்கச் சொல்லுங்க. நான் இதே இடத்துல அவருக்காக வெயிட் பண்றேன்..."

"உடனே தகவல் கொடுத்துடறேன் ஸார். அந்த



ஏரியா இன்ஸ்பெக்டரோட பேர் ருத்ரமூர்த்தி. ஒரு பத்து நிமிஷத்துக்குள்ளே அவர் அங்கே இருப்பார். ஹி...வில்...டேக்... இம்மீடியட் அண்ட் நெசசரி ஸ்டெப்ஸ் ஸார்."

"ஓ.கே... தேங்க்யூ...!"

கண்ட்ரோல் ஆபீஸர் பத்மநாபன் மதிய உணவை மறந்தவராய் இன்ஸ்பெக்டர் ருத்ரமூர்த்தியை தொடர்பு கொண்டார். விஷயத்தை சொன்னதும் மறுமுனையில் அவர் பதட்டப்பட்டார்.

"அந்த ப்ளக்ஸ் போர்டில் இருந்த வாசகங்கள் என்னான்னு நீங்க கேட்கலையா... மிஸ்டர் பத்மநாபன்?"

"கேட்டேன்...! அவர் சொல்லலை. நீங்க உடனே ஸ்பாட்டுக்குப் போங்க... அவர் வெயிட் பண்ணிட்டிருக்கார்."

"இதோ கிளம்பிட்டேன்...!"

# 3

**த**ன்னுடைய சுதந்திர தின உரையில் நம் பாரதப் பிரதமர் மேற்கொண்டு பேசும்போது, "நாட்டில் தற்போது உணவு உற்பத்தி முன்பு இருந்ததைக் காட்டிலும் நான்கு மடங்கு அதிகரித்து இருப்பதால் விலைவாசிகள் வேகமாய் வீழ்ந்து வருகிறது என்றும் உபரி விளைபொருள்களையும் தானியங்களையும் பிற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்ய அரசு முடிவு எடுத்துள்ளது" என்றும் குறிப்பிட்டார்.

இப்படி ஒரு உரையை எந்த ஒரு பாரதப் பிரதமராவது நிகழ்த்துவாரா என்ற எதிர்பார்ப்போடு -

இப்படிக்கு
ஓர் இந்தியன்

"**வி**ஷ்ணு!" ஜி.ஹெச்சில் ஐ.ஸி.யூனிட்டில் நடைபோட்டுக் கொண்டிருந்தான் விவேக்.

"பாஸ்..."

"அவன் பேர் என்ன?"

"நந்தா... பாஸ்"

"ஆள் பொழைப்பாளா?"

விஷ்ணு எதிரில் வந்து கொண்டிருந்த ஒரு ஹவுஸ்சர்ஜன் பெண் டாக்டரைப் பார்த்து

"ஸ்ரேயா மாதிரியே இருக்கா்ளே!" என்று ஆச்சர்யப்பட, விவேக் அவனுடைய பின்னந் தலையில் ஒரு தட்டு தட்டினான்.

"டேய்ய்..."

"ஸாரி... பாஸ்... அந்த லேடி ஹவுஸ்சர்ஜன் டாக்டரை போன ஜென்மத்தில் பார்த்த மாதிரி இருந்தது. அதான் ஒரு ஃப்ளாஷ்பேக்குடன் போயிட்டேன். நீங்க என்ன கேட்டீங்க பாஸ்...?"

"அந்த நந்தா பொழைப்பனா?"

"எனக்கு ஹோப் இல்ல பாஸ்... அவனோட காதலி ஏற்கெனவே அவனை மனசளவில கொன்னுட்டா. இப்போ விஷத்தை வேற முழுங்கியிருக்கான். ஐ.ஸி. யூனிட்டிலிருந்து டாக்டர் வெளியே வர்ற போது தமிழ் சினிமாவில் வர்ற டாக்டர் மாதிரி கண்ணாடியைக் கழட்டி கையில் வெச்சிகிட்டு உதட்டைப் பிதுக்கி தலையை ஆட்டப் போறார்."

"ஒரு பொண்ணு தன்னை மறந்துட்டா என்கிற காரணத்துக்காக இப்படி அவ எழுதின லெட்டர்ஸையெல்லாம் ஒரு ட்ரஸ் மாதிரி தெச்சு போட்டுகிட்டு ரெண்டு வருஷத்துக்கு முந்தி அவளை முதல் முதலாய் எந்த இடத்துல சந்திச்சானோ அதே இடத்துல விஷம் குடிச்சு செத்துப் போக நினைச்சது எவ்வளவு பெரிய முட்டாள்தனம்...?"

"பாஸ்...! காதல்ங்கிறது சில பேர்க்கு லாட்ஜ்ல ரூம் போடற சமாச்சாரம். சிலர்க்கு தாஜ்மஹால் கட்டற விவகாரம். இந்த நந்தா தாஜ்மஹால் கட்டற ஜாதி. அதான் காதல் கடிதங்களை எல்லாம் கோவணமாய் கட்டிகிட்டு உயிரைத் தியாகம் பண்ண முயற்சி செஞ்சிருக்கான். பாஸ்...! ரெண்டு நாளைக்கு முன்னாடி நான் ஒரு காதல் கவிதை எழுதினேன். அந்தக் கவிதையைப் படிச்சுட்டு எனக்கே ஆச்சர்யம் தாங்க முடியலை. கண்ணதாசனோட ஆவி என் உடம்புக்குள்ளே பூந்துடுச்சோன்னு நினைச்சு என்னை நானே பாராட்டிகிட்டு ஒரு மாலையையும் வாங்கி போட்டுகிட்டேன்.

"அப்படி என்னடா கவிதை?"

**"காதல் என்பது ஒரு**
**அழகான காடு!**
**அங்கே புலிகள்**



**மான்களால்**
**தோற்கடிக்கப்படுகின்றன"**

"அட... பரவாயில்லையே...!" விவேக் ஆச்சர்யப்பட்டான்.

"பார்த்தீங்களா பாஸ்...! நீங்களே பாராட்டிட்டீங்க. இது மாதிரி கைவசம் நிறைய காதல் கவிதைகள் இருக்கு பாஸ்"

"எங்கே இன்னொரு கவிதை சொல்லு"

**மாமா பொண்ணை**
**முறைப் பொண்ணுன்னு**
**சொல்லலாம்.**
**ஆனால்**
**முறைக்கிற பொண்ணை**
**மாமா பொண்ணுன்னு**
**சொல்ல முடியுமா?"**

விவேக் விஷ்ணுவை ஆச்சர்யமாய்ப் பார்த்தான்.

"டேய்...! எப்டறா... இதெல்லாம்?"

"கண்ணு வெக்காதீங்க பாஸ்... இதெல்லாம் ஞானப்பழம் சாப்பிடறதால கிடைக்கிற அருள்... வாங்க... அப்படி போய் உட்காரலாம். என் கைவசம் நிறைய கவிதைகள் ஸ்டாக் இருக்கு."

விஷ்ணு சொல்லிக் கொண்டிருக்கும்போதே-

பின் பக்கம் - பெண் குரல் கேட்டது. குரலில் க்ரீம் பிஸ்கட் வெண்ணெய்யின் கலவை.

"ஸார்..."

உட்காரப் போன இருவரும் திரும்பிப் பார்த்தார்கள்.

இருபத்தைந்து வயதில் அழகான அந்தப் பெண் தெரிந்தாள். கவலை முகம். கலங்கிய கண்கள். அழுகையில் துடிக்கும் உதடுகள். கலைந்த தலைமுடி. படபடத்தாள்.

"ஸார்...! இங்கே விஷம் சாப்பிட்டு தற்கொலை பண்ணிக்க முயற்சி செஞ்ச நந்தான்னு ஒருத்தர் எங்கே அட்மிட்டாகியிருக்கார்?"

அவளை எதிட்ட விவேக் கேட்டான்.

"நீ யாரு...?"

"என் பேர் சுகிர்தா ஸார்... நானும் நந்தாவும் கடந்த ரெண்டு வருஷகாலமாய் உயிர்க்கு உயிராய் விரும்பிட்டு இருந்தோம்...! நடுவில் எனக்கு கொஞ்சம் பர்சனல் ப்ராப்ளம். அதனால அவரோடு என்னால சரியா பேச முடியலை. அதை அவர் தப்பாய் புரிஞ்சுகிட்டார். நான் அவரை ஒதுக்கறதாய் நினைச்சு செல்போன்ல புலம்புவார். நான் எவ்வளவுதான் சமாதானம் பண்ணினாலும் அதை அவர் காதுலயே

போட்டுக்க மாட்டார். அவர்... இப்படி... செய்வார்ன்னு...''

விஷ்ணு அவளைக் கோபமாய்ப் பார்த்தான்.

''ஓ! நீதான்... அந்த சுகியா...? இப்ப ஓடி வந்து என்ன பிரயோஜனம்...? நந்தா இப்படியொரு முடிவுக்கு வந்ததைப் பத்தி உனக்குத் தெரியுமா?'' விஷ்ணு கேட்க அவளுடைய கண்களில் நீர்.

''ஸார்! ரெண்டு நாளைக்கு முந்தி எனக்கு எஸ்.எம்.எஸ். பண்ணி 'நம்ம கல்யாணம் நாளைக்கே நடந்தாகணும். இல்லேன்னா அதுக்கு அடுத்த நாள் நான் விஷம் குடிச்சு தற்கொலை பண்ணிக்குவேன்'னு மிரட்டியிருந்தார். 'நாளைக்கே கல்யாணம்ன்னு சொல்றது நடைமுறைக்கு சாத்தியப்படாது. ஒரு மாசம் பொறுமையாய் இருங்க'ன்னு சொன்னேன். அதுக்கு அவர் 'அதெல்லாம் முடியாது... நாளைக்கே நம்ம கல்யாணம் நடந்தாகணும்'ன்னு பிடிவாதம் பிடிச்சார். நான் மனசு வெறுத்துப் போய் லைனைக் கட் பண்ணிட்டேன். அதுக்கப்புறம் செல்போனையும் சுவிட்ச் ஆஃப் பண்ணிட்டேன்.''

சுகித்தாவுக்கு அழுகையில் தொண்டை அடைத்துக் கொள்ள சில விநாடிகள் இடைவெளி விட்டு மறுபடியும் பேச ஆரம்பித்தாள்.

''இதுக்கு முந்தியும் நிறைய தடவை தற்கொலை மிரட்டல் விடுத்திருக்கார். நான் என்னோட நிலைமையைச் சொன்னதும் கன்வின்ஸ் ஆயிடுவார். இந்த தடவையும் அப்படித்தான் கன்வின்ஸ் ஆயிடுவார்ன்னு நினைச்சேன். இன்னிக்குக் காலையில் பத்து மணி சுமாருக்கு நந்தாவுக்கு போன் பண்ணினேன். ரிங் போயிட்டே இருந்தது. கோபம்ன்னு நினைச்சு விட்டுட்டேன். பதினோரு மணிக்கு போன் பண்ணினேன். 'நாட் ரீச்சபிள்'ன்னு வந்தது. ஒரு அரைமணி நேரம் கழிச்சு போன் பண்ணினேன். செல்போன் 'நாட் இன் யூஸ்'ன்னு ரிக்கார்ட்டு வாய்ஸ் வந்தது. அதுக்கப்புறம்தான் எனக்குள்ளே ஒரு பயம் வந்து, ஒரு ஆட்டோவைப் பிடிச்சு நாங்க ரெண்டு பேரும் முதல்தடவையாய் சந்திச்ச அந்த ரோட்டோட ஸ்பாட்டுக்கு போனேன். ஸ்பாட்டுக்கு போன போது ரோட்டோரமாய் ஒருத்தர் இளநீர் கடை வைச்சிருந்தார். அவரை விசாரிச்சபோதுதான் ரோட்டு நடுவுல மயங்கிக் கிடந்த ஒருத்தரை ஆம்புலன்ஸ்ல போட்டு ஹாஸ்பிட்டலுக்கு கொண்டு போன விபரத்தை சொன்னார். பதறியடிச்சுட்டு வர்றேன்! ஸார் இப்போ... அவர்க்கு... எப்படியிருக்கு...? உயிர்க்கு எந்த ஆபத்தும் இல்லையே...?'' பேச்சு அழுகையாய் வெடித்தது.



விவேக் கையமர்த்தினான்.

''நந்தா வேலைக்கு போறாரா... பிசினஸ் பண்றாரா?''

''பிசினஸ் ஸார்.''

''என்ன பிசினஸ்?''

''ரியல் எஸ்டேட் புரோக்கர்.''

''அவர்க்கு இதே ஊரா...?''

''ஆமா ஸார்! அப்பா, அம்மா இல்லை. கூடப் பொறந்தவங்களும் யாரும் இல்லை. தரமணியில் வீடு எடுத்து ஒண்டியா தங்கியிருக்கார்...''

''நீ என்ன பண்றே...?''

''வேளச்சேரியில் இருக்கிற பாபா மிஷின் ஸ்கூல்ல டீச்சராய் ஒர்க் பண்றேன். அப்பா மட்டும். அம்மா இல்லை. மேற்கு மாம்பலத்தில் வீடு...!''

''நந்தாவை கல்யாணம் பண்ணிக்கிறதுல உனக்கு என்ன பிரச்னை...?''

''ஸார்! என்னோட அப்பாவுக்கு கடந்த ஆறுமாசத்துக்கு முந்தி ஒரு ஸ்ட்ரோக் வந்தது. அதிலிருந்து அப்பாவால எழுந்து நடமாட முடியலை. அப்பா இப்போ மூலிகை வைத்தியம் எடுத்துகிட்டு கொஞ்சம் கொஞ்சமாய் பழைய நிலைமைக்கு திரும்பிட்டிருக்கார். இன்னும் ஒரு மாசத்துக்குள்ளே அவர் முழுமையாய் குணமாயிடுவார்ன்னு வைத்தியர் சொன்னார். நானும் அதை மனசுல வெச்சுட்டுத்தான் நந்தாவை கல்யாணம் பண்ணிக்க ஒரு மாசம் டயம் கேட்டேன். ஆனா அவரை நான் புறக்கணிக்க றேன்னு நந்தா தப்பர்த்தம் பண்ணிகிட்டு இப்படி ஒரு விபரீதமான முடிவுக்குப் போயிட்டார்...''

சுகித்தா தொண்டை அடைக்க பேசிக் கொண்டிருக்கும் போதே அந்த நர்ஸ் விவேக்கிற்குப் பக்கத்தில் வந்தாள்.

''ஸார்...''

''என்ன சிஸ்டர்...?''

''டாக்டர்... உங்களைக் கூப்பிட்டார்.''

சுகித்தா பரபரத்தாள்.

''ஸார்...! நானும் உங்க கூட வர்றேன். நந்தாவோட உடல்நிலையைப் பற்றி அவர்கிட்ட கேட்கலாம்...''

நர்ஸ் குறுக்கிட்டாள். ''ஸார்...! டாக்டர் உங்களை மட்டும்தான் உள்ளே கூப்பிட்டார்.''

நாற்காலியில் உட்கார்ந்திருந்த விஷ்ணு எழுந்தான்.

''நான்...?''

நர்ஸ் புன்னகைத்தாள். ''முக்கியமாய் நீங்க வேண்டாம்ன்னு டாக்டர் சொன்னார். அதிகமாய்

பேசறவங்களை டாக்டர்க்கு பிடிக்காது...! ஸார்... நீங்க வர்றீங்களா?"

"சுகிர்தா! நீ இங்கேயே இரு... நான் போய் டாக்டரைப் பார்த்து பேசிட்டு வந்துடறேன். நந்தாவோட உடல்நிலை எப்படியிருக்குன்னு கேட்டுட்டும் வந்துடறேன். அதுக்கப்புறம் எல்லாருமாய் போய் நந்தாவைப் பார்க்கலாம்."

"டாக்டர் உங்களை மட்டும் தனியாய் கூப்பிட்டு பேசறார்ன்னா நந்தாவுக்கு ரொம்பவும் சீரியஸாய் இருக்கும்னு நினைக்கிறேன்... ஸார்... நானும் வாறேன் ஸார்."

"டாக்டர் என்ன சொல்றார்ன்னு பார்க்கலாம். நீ தைரியமாய் இரு...! அப்பிடி அவர் ஏதாவது சீரியஸ்ன்னு சொன்னா நான் உன்னை உள்ளே கூப்பிட்டுக்கிறேன்." சொன்ன விவேக் நர்ஸைப் பின் தொடர்ந்து டாக்டரின் அறையை நோக்கிப் போனான்.

விஷ்ணு நின்று கொண்டிருந்த சுகிர்தாவைப் பார்த்து "உட்கார் சுகி...!" என்றான்... உரிமையோடு.

அவள் தளர்ந்து போய் ஒரு நாற்காலிக்கு தன் உடம்பைக் கொடுத்தாள். விஷ்ணு சொன்னான்.

"நந்தா உன் மேல வெச்சிருக்கிற காதலை நினைக்கும் போது எனக்கு ஆச்சர்யமாய் இருக்கு. இந்த காலத்துல இப்படியொரு காதலா? தன்னோட மானத்தைக் காக்கிற ஆடையாய் நீ எழுதின லெட்டர்களையே தெச்சு போட்டுட்டு வந்து இருக்கான். உன்னை முதன் முதலாய் சந்திச்ச இடத்திலேயே உயிரையும் விடவும் துணிஞ்சிருக்கான். என்னைப் பொறுத்தவரைக்கும் இது மனிதக் காதலே அல்ல... அதையும் தாண்டி புனிதமானது."

சுகிர்தா புடவைத் தலைப்பால் கண்களை ஒற்றிக் கொண்டாள். "ஸார்...! நந்தாவை நான் பார்க்க நீங்களாவது யார்கிட்டேயாவது பேசி உதவி பண்ணக் கூடாதா...?"

"பொறு...! பாஸ் டாக்டர்கிட்டே போயிருக்கார். அவர் வெளியே வரும்போது நந்தாவோட நிலைமை என்னான்னு தெரிய வரும்."

சுகிர்தா தன் முகத்தை இரண்டு கைகளாலும் மூடிக்கொண்டு அழ ஆரம்பித்தாள். அதே விநாடி விஷ்ணுவின் செல்போன் மெல்ல தன் ரிங்டோனை வெளியிட்டது. எடுத்து அழைப்பது யார் என்று பார்த்தான்.

புது நெம்பர்.

'யாரோட நெம்பர் இது?'



காதுக்குப் பொருத்தினான்

"ஹலோ..."

"விஷ்ணு...! நான் ராஜகோபால் பேசறேன்."

"ராஜகோபாலா?... யாரது?"

"டேய்... விஷ்ணு...! நான் உன்னோட பாஸ் பேசறேன். நீ பேசும் போது என்னை பாஸ்ன்னு கூப்பிட்டுடாதே... ராஜகோபால்ன்னே பேசு... இப்ப நான் டாக்டரோட ரூம்ல இருக்கேன். அவரோட செல்போனிலிருந்து பேசிட்டிருக்கேன்... உனக்கு பக்கத்துல சுகிர்தா இருந்தா அவளுக்கு முன்னாடி எதுவும் பேசாதே... கொஞ்சம் தள்ளி வந்து பேசு...!"

"ஓ.கே... புரிஞ்சது... புரிஞ்சது... பட் போன் சரியா எடுக்கலை. ஏதோ லைன் ப்ராப்ளம்... நான் வெளியே வந்து பேசறேன்..." சொன்ன விஷ்ணு செல்போனோடு ஐ.ஸி. யூனிட்டை விட்டு வெளியே வந்து காரிடாரில் நடந்தபடியே பேசினான்.

"பாஸ்...! நான் இப்போ வெளியே வந்துட்டேன். என்ன விஷயம் சொல்லுங்க பாஸ்..."

"டேய்... விஷ்ணு...! சுகிர்தான்னு சொல்லிகிட்டு ஒருத்தி வந்து இருக்காளே..."

"ஆமா..."

"அவ உண்மையிலேயே சுகிர்தா கிடையாது."

"என்ன பாஸ்... இவ்வளவு பெரிய குண்டாய் தூக்கிப் போடறீங்க...?"

"இன்னும் ஒரு பெரிய குண்டாய்த் தூக்கி உன் தலையில போடட்டுமா...?"

"போடுங்க..."

"விஷம் குடிச்சிட்டு உயிர்க்குப் போராடிகிட்டு இருக்கானே நந்தா...?"

"ஆமா..."

"அவனும் நந்தா கிடையாது..."

"அய்யோ... பாஸ்... எனக்கு பன்றியக்காய்ச்சல் வர்றமாதிரி இருக்கே..!"

## 4

ஒரு பெருமைக்குரிய விஷயம் இப்போதுதான் என் காதுகளை வந்து சேர்ந்தது. உலகத்தில் உள்ள எல்லா நாடுகளும் தங்கள் நாட்டு தேசிய கீதமாக ஏதோ ஒரு பாடலைப் பாடி வருகிறது. அந்த அத்தனைப் பாடல்களிலும் கேட்பதற்குரிய

இனிமையான பாடலாக நம் நாட்டு தேசிய கீதமான 'ஜன கண மண' தேர்ந்து எடுக்கப்பட்டுள்ளது...' என்பதுதான் அந்த பெருமைக்குரிய செய்தி. ஆனால் நம் இந்திய நாட்டின் ஜனத்தொகையான 110 கோடி பேர்களில் எத்தனை பேர்க்கு 'ஜன கண மண' வை முழுமையாகப் பாடத் தெரியும்?

இப்படிக்கு,
**ஓர் இந்தியன்.**

இன்ஸ்பெக்டர் ருத்ர மூர்த்தி அலர்மேல்மங்கை நகர் பஸ் ஸ்டாப்புக்கு ஜீப்பில் போய் சேர்ந்த போது பஸ் ஸ்டாப்பில் யாரும் இல்லை. நாயொன்று ஷெல்டரில் படுத்து பின்னங்காலால் காதுகளை சொறிந்து கொண்டிருந்தது.

சாலையின் எதிர்பக்கத்தில் காரில் உட்கார்ந்திருந்த பப்ளிக் பிராசிக்யூட்டர் வெற்றிவேலவன் இன்ஸ்பெக்டரை நோக்கி வந்தார்.

ருத்ர மூர்த்தி புன்னகைத்தார்.

''என்ன பி.பி. ஸார்...! ஏதோ விபரீதமான ப்ளக்ஸ் போர்டு இருக்கிறதாய் இன்ஃபார்ம் பண்ணீங்களாம். எங்கே அந்த போர்டு?''

''வாங்க இன்ஸ்பெக்டர்...'' வெற்றிவேலவன் ருத்ரமூர்த்தியோடு பஸ் ஷெல்டரின் இடதுபுறம் போய் அந்த ப்ளக்ஸ் போர்டைக் காட்டினார்.

'மூலவியாதியை மூன்றே நாளில் குணப்படுத்தும் மூலிகை வைத்தியம்' போர்டுக்கும், 'உங்கள் பிரச்னைகள் எதுவாக இருந்தாலும் அதை உடனடியாய் தீர்த்து வைக்கிறார் ஜனமை ஜோஸியர் உடையப்பா' போர்டுக்கும் நடுவில் அந்த ப்ளக்ஸ் போர்டு தெரிந்தது. எழுத்துக்கள் பளிச்சென்று பார்வைக்கு கிடைத்தன.

**'கால பைரவன் கவனிக்கிறான்! அடுத்த 2 நாட்களுக்கு கீழே குறிப்பிட்டுள்ள டெலிபோன் எண்களை உபயோகிப்பவர்கள் எச்சரிக்கையாக இருக்க வேண்டிய நேரம் இது. சிறிது ஏமாந்தாலும் உயிரை இழக்க வேண்டி வரலாம். மொத்தம் 5 டெலிபோன் எண்கள். இந்த எண்களை உபயோகிக்கிற நபர்களில் யாரேனும் ஒருவர்க்குத்தான் அந்த ஆபத்து ஏற்படும். ஒருவர்க்கு ஆபத்து ஏற்பட்டு விட்டால் மற்ற 4 பேரும் தப்பித்துக் கொள்வார்கள். இந்த அறிவிப்பை யாரும் அலட்சியப் படுத்த வேண்டாம்.'** ப்ளக்ஸ் போர்டில் இருந்த அறிவிப்பைப்



படித்துவிட்டு ஒரு புன்னகையோடு பப்ளிக் பிராஸிக்யூட்டரைப் பார்த்தார் இன்ஸ்பெக்டர்.

''யாரோ விளையாடறான்.''

பப்ளிக் பிராசிக்யூட்டரின் முகம் இறுகியிருந்தது.

''ஸாரி.. இன்ஸ்பெக்டர்...! நான் அப்படி நினைக்கலை. இதை நீங்க சீரியஸாய் எடுத்துக்கணும். மொதல்ல அந்த போர்டில் குறிப்பிட்டு இருக்கிற டெலிபோன் நெம்பர்களை நோட் பண்ணுங்க...''

''ஏதாவது விபரீதம் நடக்கும்ன்னு நினைக்கறீங்களா பி.பி.ஸார்?''

''நடக்கலைன்னா சந்தோஷம்... ஒருவேளை நடந்துட்டா என்ன பண்றது? வி ஷுட் டேக் ப்ரிகாஷனரி ஸ்டெப்ஸ்.''

இன்ஸ்பெக்டர் அந்த டெலிபோன் எண்களைப் பார்த்தார். மொத்தம் ஐந்து எண்கள் வரிசையாய் எழுதப்பட்டு இருந்தன.

044 என்று ஆரம்பித்து ஒரு சென்னை எண்.
0422 என்று ஆரம்பித்து ஒரு கோவை எண்.
0452 என்று ஆரம்பித்து ஒரு மதுரை எண்.
0427 என்று ஆரம்பித்து ஒரு சேலம் எண்.
0462 என்று ஆரம்பித்து ஒரு நெல்லை எண்.

எல்லா எண்களையும் தன்னுடைய டயரியை எடுத்து குறித்துக் கொண்ட இன்ஸ்பெக்டர் ருத்ரமூர்த்தி கான்ஸ்டபிளிடம் திரும்பினார்.

''அந்த போர்டைக் கழட்டி ஜீப்ல கொண்டு போய் வையுங்கய்யா...! எந்த சைக்கோ பொழுது போகாமே இப்படிப்பட்ட வேலைகளையெல்லாம் பண்ணிட்டிருக்கானோ?''

பப்ளிக் பிராசிக்யூட்டர் வெற்றி வேலவன் இன்ஸ்பெக்டர்க்குப் பக்கத்தில் வந்து நின்றார்.

''மிஸ்டர் ருத்ராமூர்த்தி...! போர்டில் எழுதப்பட்டு இருந்த முதல் டெலிபோன் நெம்பர்க்கு போன் பண்ணி அந்த எண்ணுக்குரிய நபர் யார்ன்னு பாருங்க.''

''ஸ்டேஷன்ல போய் பண்ணலாம்ன்னு பார்த்தேன்.''

''நோ.. நோ... நீங்க லேட் பண்ற ஒவ்வொரு விநாடியும் அந்த எண்கள் சம்பந்தப்பட்டவர்களுக்கு பாதகமாய் முடியலாம். அவங்க யார்ன்னு கண்டுபிடிச்சு மொதல்ல அவங்களுக்கு போலீஸ் பாதுகாப்பு கொடுக்கணும்.''

''பி.பி...ஸார்... இந்த விஷயத்தை நீங்களே ஒரு சீரியஸ் மேட்டராய் பண்ணிருவீங்க போலிருக்கே...''

''மிஸ்டர் ருத்ராமூர்த்தி! நீங்க சொன்னாலும் சொல்லாவிட்டாலும் இது ஒரு சீரியஸான மேட்டர்

தான்... அந்த அஞ்சு டெலிபோன் நெம்பர்களுக்கும் போன் பண்ணி அவங்க யார்ன்னு விசாரிங்க..."

ருத்ரமூர்த்தி வேண்டா வெறுப்பாய் செல்போனை எடுத்து முதல் எண்ணைத் தட்டினார்.

ரிங்போன் போய் ரிஸீவர் எடுக்கப்பட்டது.

"ஹலோ..." ஒரு பெண் குரல் கேட்டது.

ருத்ரமூர்த்தி டெலிபோன் எண்களைச் சொல்லி விட்டு கேட்டார். "இது உங்க டெலிபோன் நெம்பர் தானே?"

"ஆமா... நீங்க யாரு...?"

"போலீஸ்..."

"போ... போலீஸா?"

"பயப்படாதீங்கம்மா...! இது ஒரு விசாரணைதான். ஒவ்வொரு ஏரியாவிலேயும் ஏதாவது ஒரு டெலிபோன் எண்ணுக்கு போன் பண்ணி அந்த ஏரியாவில் என்ன பிரச்னைன்னு கேட்போம்."

"அப்படியா..! நான் என்னவோ ஏதோன்னு பயந்துட்டேன்..."

"உங்க பேர் என்னம்மா?"

"தேவகி..."

"உங்க குடும்பத்துல எத்தனைபேர் இருக்காங்க?"

"நானும் என்னோட கணவரும் மட்டும்தான்."

"கணவர் என்ன பண்றார்?"

"கோணிப்பை வியாபாரம் பண்றார். நான் வீட்ல டெய்லரிங் மார்ட் ஒண்ணை வெச்சு நடத்திட்டு வர்றேன். எங்களுக்கு ஒரே ஒரு பொண்ணு. அவளை திருப்பூர்ல கல்யாணம் பண்ணிக் குடுத்துட்டோம்."

"உங்க கணவர் பேர் என்ன?"

"வேலாயுதம்."

"உங்க குடும்பத்துக்கு எதிரிகள் யாராவது இருக்காங்களா?"

"அப்படியெல்லாம் யாரும் இல்லீங்க... எங்களுக்கு எந்த பிரச்னையும் இல்லை. நிம்மதியாய் இருக்கோம்."

"முன்னே எப்பவாவது போன்ல மிரட்டல் வந்து இருக்கா...?"

"இல்லீங்க..."

"உங்க வீட்டு அட்ரஸை சொல்லுங்கம்மா."

"நெம்பர் 739, காமாட்சியம்மன் நகர், குரோம்பேட்டை, சென்னை. 44"

இன்ஸ்பெக்டர் ருத்ரமூர்த்தி அந்த அட்ரஸை மனதில் பதிய வைத்துக்கொண்டு செல்போனை அணைத்தார். பப்ளிக் பிராசிக்யூட்டரை ஏறிட்டார். "பி.பி. ஸார்...! இந்த டெலிபோன் நெம்பர் கோணிப்பை



வியாபாரம் செய்யற வேலாயுதம் என்கிற ஒரு நபரோடது. எந்த ஒரு முக்கியத்துவமும் இல்லாத ஒரு நபர்..."

"நோ... நோ... அப்படியெல்லாம் அண்டர் எஸ்டிமேட் பண்ணிடாதீங்க ருத்ரமூர்த்தி. நேர்ல போய்ப் பாருங்க... ஏதாவது பொறி தட்டும்... மிரட்டல் வரணும்ன்னா அவங்க பெரிய ஆட்களாய் இருக்கணும்ங்கிற அவசியம் இல்லை... அது தவிர..."

பப்ளிக் பிராஸிக்யூட்டர் சொல்லிக் கொண்டிருக்கும் போதே **ஸ்கை டி.வி.** என்று எழுதப்பட்ட மெர்ஸிடிஸ் வேன் ஒன்று வேகமாய் வந்து பஸ் ஸ்டாப் ஷெல்டர்க்கு முன்பாய் போய் நின்றது.

காமிராக்களோடு இரண்டு பேர் இறங்கி வர கூடவே ரிப்போர்ட்டர்ஸ் நான்கைந்து பேர் இன்ஸ்பெக்டரை நோக்கி வந்தார்கள். அவரை அரைவட்டமாய் சூழ்ந்தார்கள்.

ரிப்போர்ட்டர் ஒருவர் கேட்டார்.

"ஸார்... நாங்க கேள்விப்பட்ட நியூஸ் உண்மையா?"

"என்ன கேள்விப்பட்டீங்க...?"

" 'காலபைரவன் கவனிக்கிறான்' என்கிற ப்ளாக்ஸ் போர்டு இந்த பஸ் ஸ்டாப் ஷெல்டரில் வைக்கப்பட்டு இருக்காமே? குறிப்பிட்ட 5 டெலிபோன் எண்களைக் கொடுத்து அந்த 5 பேர்ல யாரோ ஒருத்தரின் உயிர்க்கு ஆபத்து ஏற்படலாம்ன்னு அந்த போர்டு வார்ன் பண்ணுதாமே?"

"உங்களுக்கு இதை யார் சொன்னது?"

"பப்ளிக் டெலிபோன் பூத்திலிருந்து யாரோ போன்பண்ணி சொன்னாங்க ஸார். அது உண்மையா பொய்யான்னு தெரிஞ்சுக்கத்தான் உடனே பிரஸ் கிளப்பிலிருந்து புறப்பட்டு வர்றோம்.

ருத்ரமூர்த்தி கையமர்த்தினார்.

"இதோ பாருங்க... நீங்க கேள்விப்பட்ட விஷயம் உண்மை தான். பட் இப்படி பதறியடிச்சுகிட்டு வர வேண்டிய அவசியம் இல்லை. சிலர்க்கு பொழுது போகலைன்னா போலீஸ் டிபார்ட்மெண்ட் கூட விளையாடி பார்ப்பாங்க. அப்படிப்பட்ட விளையாட்டு தான் இது. வெடிகுண்டு புரளி மாதிரிதான் இதுவும். இந்த மேட்டரை தயவு பண்ணி பெரிசு படுத்த வேண்டாம். பைசா பெறாத ஒரு விஷயத்தை ஊதி பெரிசாக்கிறதே உங்க மாதிரியான மீடியாக்கள்தான். தயவு பண்ணி போயிடுங்க..."

இன்ஸ்பெக்டர் ருத்ரமூர்த்தி சொல்லிக் கொண்டு இருக்கும்போதே அவருடைய செல்போன் ரிங்டோனை எழுப்பியது. எடுத்து அழைப்பது யார் என்று பார்த்தார்..

கண்ட்ரோல் ரூமிலிருந்து ஆபீஸர் பத்மநாபன்.

"சொல்லுங்க பத்மநாபன்!"

"ருத்ரமூர்த்தி! அந்த ப்ளாக்ஸ் போர்டு மேட்டர்?"

"உண்மைதான்....! ஆனா அதுக்காக பயப்பட வேண்டியது இல்லை..."

"இல்ல மிஸ்டர் ருத்ரமூர்த்தி... அதுக்கு நாம பயப்பட்டாகணும்...!"

"என்ன சொல்றீங்க பத்மநாபன்?"

"கொஞ்ச நேரத்துக்கு முந்தி தாம்பரத்திலிருந்து வந்த எலக்ட்ரிக் ட்ரெயினில் சீட்டுக்குக் கீழே ஒரு பெரிய ப்ளாக்ஸ் போர்டு சுருட்டி வைக்கப்பட்டு இருந்ததாம். அதைப் பிரிச்சு பார்த்தப்ப **'கால பைரவன் கவனிக்கிறான்'** என்கிற தலைப்புக்குக் கீழே எச்சரிக்கை வாசகங்கள். அதைத் தொடர்ந்து 5 பேரோட லேண்ட்லைன் டெலிபோன் எண்கள். அடுத்த நாற்பத்தெட்டு மணி நேரத்துக்குள்ளே அந்த 5 பேரில் ஒருத்தர் உயிரோடு இருக்க மாட்டாராம்."

கண்ட்ரோல் ரூமிலிருந்து பத்மநாபன் சொல்லிக் கொண்டே போக காக்கியூனிஃபார்முக்குள் வியர்க்க ஆரம்பித்தார் ருத்ரமூர்த்தி.

| |
|---|
| **5** |
| **கா**ந்தி நாட்டுக்காக<br>உழைத்தார்.<br>ஆனால்<br>நாம்<br>'காந்தி நோட்டு'க்காக<br>உழைக்கிறோம்.<br>**WE PROUD TO BE AN INDIAN.**<br>இப்படிக்கு<br>**ஓர் இந்தியன்.** |

**வி**வேக் தொடர்ந்து செல்போனில் பேசினான்.

"விஷ்ணு! இப்ப நீ பண்ண வேண்டியது என்ன தெரியுமா?"



"சொல்லுங்க பாஸ்..."

"சுகிர்தான்னு சொல்லிட்டு வந்திருக்கிற அந்தப் பெண்ணைக் கூட்டிக்கிட்டு டாக்டர்கிட்டே வா.."

"பாஸ்... அவ ஒரு டுபாக்கூர்னு எப்படி கண்டு பிடிச்சீங்க...?"

"நடு ரோட்ல விஷம் குடிச்சிட்டு லவ் லெட்டர்களோடு கிடந்தவன் நந்தாவாக இல்லாத போது இவள் மட்டும் எப்படி சுகிர்தாவாய் இருக்க முடியும்...?"

"அவன், நந்தா இல்லைன்னு எப்படி கண்டு பிடிச்சீங்க பாஸ்...?"

"அதை ஞானப்பழம் சாப்பிட்டவங்களால மட்டுமே கண்டுபிடிக்கமுடியும்..."

"வேண்டாம் பாஸ்... நான் இப்போ இடியாப்ப சிக்கலில் இருக்கேன்... இன்னும் கொஞ்ச நேரம் இப்படியே இருந்தா மூளை மாத்துப் போயிடும் போலிருக்கு... சொல்லுங்க பாஸ்... நானும் கடந்த ஒரு மணி நேரமாய் உங்க கூடத்தான் இருக்கேன். விஷம் குடிச்சவன் நந்தா இல்லைங்கிறதும் அவனைத் தேடிகிட்டு வந்த பெண் சுகிர்தா இல்லைங்கிறதும் எனக்கு பிடிபடலையே பாஸ். எனக்கு ஆறறிவில ஏதோ ஒரு அறிவு குறையுது பாஸ். மூளையை ஸ்கேன் பண்ணிப் பார்க்கணும்...!"

"டேய்! புலம்பாமே சுகிர்தாவைக் கூட்டிகிட்டு டாக்டர் ரூமுக்கு வா... அங்கே வெச்சு எல்லாத்தையும் பேசிக்கலாம். அப்புறம் இன்னொரு விஷயம்... தெரிஞ்சா ஆடிப்போயிடுவே...!"

"பாஸ்! என்னை இன்னிக்கு கொத்துக்கறி பண்ணிடுவீங்க... போலிருக்கே...! ஒட்டு மொத்தமா எல்லாத்தையும் சொல்லிடுங்க."

"ரோட்ல கிடந்தவன் அவனாக விஷம் குடிக்கலை. அது தற்கொலை முயற்சி கிடையாது."

"பின்னே...?"

"அவனோட வாய்க்குள்ள வலுக்கட்டாயமாய் விஷத்தை செலுத்தியிருக்காங்க..."

"வேண்டாம் பாஸ்...! இதுக்கும் மேலே நீங்க ஏதாவது சொன்னீங்கன்னா நான் வெடிச்சுடுவேன். நான் அந்த டுபாக்கூரை கூட்டிட்டு டாக்டரோட ரூமுக்கு வர்றேன். ஒட்டு மொத்தமா எல்லாத்தையும் சொல்லியிடுங்க."

"வா..."

விஷ்ணு செல்போனை அணைத்து பாக்கெட்டுக் குள் போட்டுக் கொண்டு சுகிர்தாவை நோக்கிப்

போனான்.

அவள் இரண்டு கைகளாலும் முகத்தை பொத்திக் கொண்டு லேசாய் விசும்பிக் கொண்டிருந்தாள்.

'பாதகி...! காதகி...! என்னமாய் நடிக்கிறாள்?'

''சுகி!'' விஷ்ணு கூப்பிட்டான்.

அவள் கலங்கிய கண்ணோடு நிமிர்ந்தாள்.

''டாக்டர் கூப்பிட்டாராம்... போவோமா?''

''நந்தாவோட நிலைமையைப் பற்றி ஏதாவது சொன்னாரா?''

''போனாத்தான் தெரியும்.''

அவள் எழுந்தாள். விஷ்ணு, டாக்டரின் அறையை நோக்கி நடக்க அவள் தொடர்ந்தாள்.

''சுகி...!''

''ம்..''

''உன்னோட நந்தாவுக்கு ஒண்ணும் ஆகாது. தைரியமாய் இரு. ஏன்னா உன்னை மாதிரியான குணவதிகளை கடவுள் சோதிக்க மாட்டார்.''

விஷ்ணு பேசிக் கொண்டே முன்னால் போக எதிரே எதிர்பட்ட ஒரு வயதான அம்மாள் ''தம்பி'' என்று சொல்லி விஷ்ணுவை நிறுத்தினாள்.

''சொல்லுங்கம்மா...''

''பிரசவ வார்டுக்கு எந்தப்பக்கம் போகணும்?''

''அது நாலாவது மாடியில இருக்கு. பக்கத்துல தான் லிஃப்ட் இருக்கு. ஏறிப் போயிடுங்க...''

''தம்பி...! நீ என் பேரன் மாதிரி இருக்கே. எனக்கு ஒரு உதவி பண்ணேன்...''

''சொல்லுங்க... என்ன பண்ணணும்?''

''லிஃப்ட்ல ஏறிப் போறதுக்கு தெரியாது. கொஞ்சம் வந்து ஏத்தி உடேன்... தம்பி!''

''அவ்வளவுதானே... வாங்க...! சுகி...! ஒரு நிமிஷம். நான் இந்த அம்மாவை லிஃப்ட் வரைக்கும் கொண்டு போய் விட்டுட்டு வர்றேன். வெயிட் பண்ணு.''

அவள் தலையாட்டினாள்.

விஷ்ணு அந்த அம்மாவை வராந்தாவின் கோடியில் இருந்த லிஃப்டின் அருகே கூட்டிப் போனான். காலியாய் இருந்த லிஃப்ட்டில் ஏற்றி விட்டு சுகிர்தா நின்றிருந்த இடத்துக்குத் திரும்பினான்.

அவளைக் காணோம்.

சுற்றும் முற்றும் பார்த்தான்.

எங்கே போனாள்?

'ஒருவேளை பொறுமையிழந்து டாக்டரின் அறைக்கு போயிருப்பாளோ...?'

'இருக்கலாம்' என்று நினைத்து டாக்டரின்



அறைக்கு செல்ல முயன்ற விஷ்ணுவின் தோளில் ஒரு கை விழுந்தது.

திரும்பினான்.

கோபமாய் விவேக்.

''ஏண்டா... நான் போன் பண்ணி எவ்வளவு நேரமாச்சு... இங்கே என்னடா பண்ணிட்டிருக்கே...? எங்கே அந்த போலி சுகிர்தா?''

''அவளைத்தான் தேடிக்கிட்டு இருக்கேன் பாஸ்.''

''என்னது... தேடிக்கிட்டு இருக்கியா...?''

''ஆமா பாஸ்...! ஒரு வயசான அம்மா லிஃப்ட்ல ஏற்றி விடும்படியா கேட்டுகிட்டாங்க. நான் அந்த அம்மாவை ஏத்திவிட்டு வர்றதுக்குள்ளே மாயமாயிட்டா...''

''நாம அவளை ஸ்மெல் பண்ணிட்டதாய் புரிஞ்சுகிட்டு எஸ்கேப் ஆயிட்டான்னு நினைக்கிறேன். அவ இன்னும் இந்த ஹாஸ்பிட்டலை விட்டு தாண்டியிருக்கமாட்டா... ஓடு...''

விஷ்ணு ஹாஸ்பிட்டலின் வெளி கேட்டை நோக்கிப் பாய்ந்தான்.

# 6

**நம் இந்திய குடிமகன்கள் பற்றிய ஒரு பெருமைக்குரிய செய்தி:**

கோவை மாவட்டத்தில் மொத்தம் 308 டாஸ்மாக் கடைகள் உள்ளன. கடந்த மே மாதத்தில் ஒரு லட்சத்து 71 ஆயிரத்து 622 கேஸ் பிராந்தியும் 92 ஆயிரத்து 100 கேஸ் பீரும் விற்பனை ஆயிற்று. இதன் மதிப்பு 61 கோடியே 62 லட்சத்து 22 ஆயிரத்து 64 ரூபாய் ஆகும். இது ஒரு மாதத்தில் விற்பனை செய்வதற்காக நிர்ணயிக்கப்பட்ட இலக்கு. ஆனால் ஜூன் மாதத்தில் முதல் இரண்டு வாரத்திற்குள் விற்பனை இந்த இலக்கை அடைந்துவிட்டது. இந்த சாதனையை பொன் எழுத்துக்களால் பொறித்து சாதனைபுரிய காரணமாய் இருந்தவர்களுக்கு பத்ம ஸ்ரீ விருது வழங்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

இப்படிக்கு,
ஓர் இந்தியன்.

இன்ஸ்பெக்டர் ருத்ரமூர்த்தி பார்க் ரயில்வே ஸ்டேஷன் போய் சேர்ந்தபோது ரயில்வே போலீஸ்

இன்ஸ்பெக்டர் அல்போன்ஸ் பத்திரிக்கை நிருபர்களுக்கு நடுவில் மாட்டிக் கொண்டு அவர்கள் கேட்கும் கேள்விகளுக்கு பதில் சொல்ல திணறிக் கொண்டிருந்தார்.

"யார் ஸார் இந்த கால பைரவன்?"

"தெரியாது."

"யாராய் இருக்கும்ன்னு நினைக்கறீங்க?"

"தெரியாது."

"இவ்வளவு பெரிய ப்ளக்ஸ் போர்டை ஏதோ ஒரு மசால் தோசை மாதிரி சுருட்டி எடுத்துகிட்டு எலக்ட்ரிக் ட்ரெய்ன்ல வந்திருக்கான். அவனை யாராவது பார்க்காமலா இருப்பாங்க?" கேள்வி கேட்ட நிருபரை அல்போன்ஸ் முறைத்துப் பார்க்க இன்ஸ்பெக்டர் ருத்ர மூர்த்தி பக்கத்தில் வந்தார். நிருபர்களைப் பார்த்து கேட்டார்.

"இந்த ப்ளக்ஸ் போர்டு பற்றி உங்களுக்கு தகவல் கொடுத்தது யாரு...?"

"ப்ரஸ் க்ளப்புக்கு ஒரு போன்கால் வந்தது ஸார். யாரோ ஒருத்தன் பேசினான். 'பூங்கா ரயில்வே ஸ்டேஷனுக்குப் போங்க! இன்னும் அரைமணி நேரத்துல தாம்பரத்திலிருந்து ஒரு எலக்ட்ரிக் ட்ரெயின் வரும். அந்த ட்ரெயினில் லேடீஸ் கம்பார்ட்மெண்ட்டுக்கு அடுத்த பெட்டியில் ஒரு சீட்டுக்குக் கீழே ப்ளக்ஸ் போர்டு ஒண்ணு சுருட்டிய நிலையில் வைக்கப்பட்டு இருக்கும். அந்த ப்ளக்ஸ் போர்டில் ஒரு ஹாட்டான மேட்டர் ஒண்ணு வெயிட் பண்ணிட்டு இருக்கு. போய்ப் பாருங்க. அதை 'உங்க பத்திரிகைகளில் எக்ஸ்போஸ் பண்ணுங்க.' இப்படி ஒரு தகவல் போன் மூலமாய் வரவும் நாங்க உடனே புறப்பட்டு வந்தோம். கொஞ்ச நேரத்துல தாம்பரத்திலிருந்து ஒரு எலக்ட்ரிக் ட்ரெய்ன் வந்தது. லேடீஸ் கம்பார்ட்மெண்ட்டுக்கு பக்கத்து கம்பார்ட்மெண்ட்ல இருந்தது அந்த ப்ளக்ஸ் போர்டு. பாஸஞ்சர்ஸ் கிட்டே இது யாரோடதுன்னு கேட்டோம். எல்லோருமே தெரியாதுன்னு சொல்லிட்டு போயிட்டாங்க. அதுக்கப்புறம் அந்த ப்ளக்ஸ் போர்டை வெளியே கொண்டு வந்து பிரிச்சுப் பார்த்தோம். போர்டில் எழுதப்பட்டு இருந்த மேட்டரைப் பார்த்ததும் ஆடிப்போயிட்டோம்."

"எங்கே அந்த ப்ளக்ஸ் போர்டு?"

"அதோ... அப்படி சுவரோரமாய் விரிச்சு வெச்சிருக்கோம்..."

ருத்ரமூர்த்தி நிருபர் கை காட்டிய பக்கமாய் போய்ப்



பார்த்தார்.

நான்குக்கு எட்டடி என்ற அளவில் இருந்த அந்த ப்ளக்ஸ் போர்டில் வெள்ளை நிற பின்னணியில் கறுப்பு நிற எழுத்துக்கள் பளீரென்று பார்வையில் அறைந்தன.

காலபைரவன் கவனிக்கிறான்!

*அடுத்த 48 மணி நேரம் கீழே குறிப்பிட்ட டெலிபோன் எண்களை உபயோகிப்பவர்கள் ஜாக்கிரதையாய் இருக்க வேண்டும். ஜோதிட ரீதியாய் - எண் கணித பலன்கள் ரீதியாய் அவர்களின் உயிர்க்கு ஆபத்து ஏற்படும் சூழ்நிலை தற்போது நிலவுகின்றது. எனவே அவர்கள் எச்சரிக்கையோடு இருப்பது நல்லது. எவ்வளவு பாதுகாப்பு ஏற்பாடுகளை மேற் கொண்டாலும் இந்த 5 பேரில் ஒருவர் உயிர் இழக்க வேண்டும் என்பது கோள்களின் விதி. இந்த விதியை காலபைரவனான என்னாலேயே மாற்ற முடியாது. எனக்குத் தெரிந்த உண்மையை நான் சொல்லி விட்டேன்.*

ருத்ர மூர்த்தியின் பார்வை அந்த அறிவிப்புக்கு கீழே இருந்த டெலிபோன் எண்களுக்கு போயிற்று.

080 என்று ஆரம்பித்து ஒரு பெங்களூர் டெலிபோன் எண்

033 என்று ஆரம்பித்து ஒரு கொல்கத்தா டெலிபோன் எண்

0497 என்று ஆரம்பித்து ஒரு கண்ணனூர் டெலிபோன் எண்

022 என்று ஆரம்பித்து ஒரு மும்பை டெலிபோன் எண்

040 என்று ஆரம்பித்து ஒரு ஹைதராபாத் டெலிபோன் எண்

ருத்ர மூர்த்தி முகம் இறுகிப் போனவராய் தன்னுடைய செல்போனை எடுத்து பெங்களூர் எண்ணுக்கு டயல் செய்தார்.

ரிங் போய் மறுமுனையில் ரிஸீவர் எடுக்கப்பட்டது.

"பெங்களூர்?"

"எஸ்!" ஒரு ஆண்குரல் ஒலித்தது.

ருத்ரமூர்த்தி ஆங்கிலத்தில் பேசினார்.

"நாங்கள் சென்னை போலீஸ். ஒரு கேஸ் சம்பந்தமாய் சின்ன விசாரணை, நீங்கள் ஒத்துழைக்க முடியுமா?"

"கண்டிப்பாய்..."

"உங்கள் பெயர்?"

"கெம்பண்ணா..."

"இந்த டெலிபோன் எண் உங்களுடையதுதானே?"

"ஆமாம்..."

"நீங்கள் என்ன தொழில் செய்கிறீர்கள்?"

"நான் மால்வாடியில் ஒரு டிபார்ட்மெண்ட்டல் ஸ்டோர் வைத்து இருக்கிறேன்..."

"உங்களுடைய குடும்பம் பற்றி?"

"எனக்கு மனைவியும் இரண்டு மகள்களும் இருக்கிறார்கள். மகள்கள் படித்துக் கொண்டு இருக்கிறார்கள். பை...த...பை... எதற்காக இந்த விசாரணை என்று தெரிந்து கொள்ளலாமா...?"

"விபரத்தை கடைசியில் சொல்கிறேன்... தயவு செய்து நான் இப்போது கேட்கும் கேள்விகளுக்கு மட்டும் பதில் சொல்லுங்கள். உங்களுக்கு வியாபார ரீதியாய் எதிரிகள் யாராவது உண்டா?"

"எதிரிகள் என்று யாரும் கிடையாது. ஆனால் வியாபாரத்தில் போட்டி உண்டு."

"சொத்து சம்பந்தமாய் ஏதாவது பிரச்னை ஏற்பட்டு அது சம்பந்தமான வழக்கு ஏதாவது கோர்ட்டில் இருக்கிறதா?"

"இல்லை..."

"நீங்கள் சமீபத்தில் யாரோடாவது வாக்குவாதம் செய்தீர்களா?"

"இல்லை..."

"ஓ. கே... மிஸ்டர் கெம்பண்ணா... இப்போது நான் சொல்லப்போகும் ஒரு விஷயத்தைக் கேட்டு அதிர்ச்சி அடைந்து விடாதீர்கள். உங்களுக்கு எதிரி இல்லை என்று நீங்கள் நினைத்துக் கொண்டு இருக்கிறீர்கள். ஆனால் உங்களுக்கு ஒரு எதிரி இருப்பது எங்களுக்கு தெரிய வந்துள்ளது. **கால பைரவன்** என்ற பெயரில் ஒரு ப்ளக்ஸ் போர்டு அறிவிப்பில் மொத்தம் 5 நபர்களின் டெலிபோன் எண்கள் கொடுக்கப்பட்டு அந்த 5 - ல் ஒரு நபரின் உயிர்க்கு ஆபத்து என்று சொல்லப்பட்டு இருக்கிறது. அந்த 5 டெலிபோன் நெம்பர்களில் உங்கள் நெம்பரும் உள்ளது..."

"எ...எ... என்னது...?"

"பயப்படாதீர்கள்...! நாங்கள் உடனடியாக கர்நாடகா போலீஸார்க்கு தகவல் கொடுத்து உங்களுக்கும் உங்களுடைய குடும்பத்தார்க்கும் பாதுகாப்பு ஏற்பாடுகளைச் செய்து விடுவோம்... நீங்கள் இன்னும் 48 மணி நேரத்திற்கு சற்று எச்சரிக்கையோடும் ஜாக்கிரதையோடும் இருப்பது நல்லது."

ருத்ர மூர்த்தி பேசிவிட்டு செல்போனை அணைத்தார்.

ப்ளக்ஸ் போர்டில் இருந்த அடுத்த நெம்பரான



கொல்கத்தா டெலிபோன் எண்ணுக்கு டயல் செய்தார்.

மறுமுனையில் ரிங் போகவில்லை. அதற்குப் பதிலாக ஒரு ரெக்கார்டட் வாய்ஸ் வந்தது.

"தி டெலிபோன் நெம்பர் யூ ஹேவ் டயல்ட் ஈஸ் நாட் இன் யூஸ்...!"

## 7

இந்திய இளைஞனே!
உன் சோம்பலை நீ துரத்திவிட்டால்
உன் சாம்பல் கூட
இந்த இந்தியாவில்
சாதனை படைக்கும்.

இப்படிக்கு,
ஓர் இந்தியன்.

விஷ்ணு ஹாஸ்பிட்டல் முழுவதும் சுகிர்தாவைத் தேடிப் பார்த்து விட்டு வேர்த்து விறுவிறுத்துபோய் வந்தான்.

அறைக்கு வெளியே டாக்டரோடு நின்று பேசிக் கொண்டிருந்த விவேக், விஷ்ணுவை ஏறிட்டான்.

"என்னாச்சு...?"

"பறந்துட்டா பாஸ்..."

"நீ கோட்டை விட்டுட்டே...! எவளாவது சுட்டை பாவாடை போட்டுகிட்டு இந்தப்பக்கமாய் போயிருப்பா. நீ சுகிர்தாவை விட்டுட்டு அவ பின்னாடி போயிட்டே!"

"அய்யோ அபாண்டம் பாஸ்...! நடிகை காந்திமதி ரேஞ்சில் ஒரு அம்மா வந்து லிஃப்ட்ல ஏத்திவிடச் சொல்லி கேட்டுகிட்டாங்க. சோஷியல் சர்வீஸ் பண்ணி நாளாச்சுன்னு நானும் அந்தம்மாவுக்கு உதவி பண்ணிட்டு வந்து பார்க்கிறேன்... பார்ட்டி எஸ்கேப்..."

டாக்டர் புன்னகைத்தார். "அவ இந்த ஸ்பாட்டிலிருந்து தப்பிச்சு போனதிலிருந்து ஒரு விஷயம் கன்ஃபார்ம் ஆயிடுச்சு. வந்தவள் சுகிர்தா கிடையாது..."

"பாஸ்...! விஷம் குடிச்ச இளைஞன் நந்தா இல்லைன்னு எப்படி கண்டுபிடிச்சீங்க...?"

"வெரி சிம்பிள்...! அந்த இளைஞனோட உடம்பில் சட்டைமாதிரி தைத்து மாட்டப்பட்டு இருந்த லெட்டர்ஸையெல்லாம் நீயும்தானே புரட்டி புரட்டி

பார்த்து படிச்சே...?"

"ஆமா பாஸ்..."

"அதுல ஒரு விஷயத்தை நோட் பண்ணினியா?"

"அப்படி நோட் பண்ணியிருந்தா நான் உங்க ரேஞ்சுக்கு வந்து இருப்பனே பாஸ்... அதை மிஸ் பண்ணினதாலத்தானே லாலு பிரசாத் மாதிரி இப்ப உங்க முன்னாடி நின்னுட்டிருக்கேன்.

"அந்த இளைஞனுக்கு உண்மையிலேயே ரெண்டு வருஷத்துக்கு முன்னாடி எழுதப்பட்ட கடிதங்களாய் அவை இருந்திருந்தா கொஞ்சமாவது பழுப்பு ஏறி கருங்கி ஓரளவுக்கு கிழிந்து இருக்கும். ஆனா அவனோட உடம்பில் இருந்த எல்லா லெட்டர்களும் புதுத்தாள்களில் எழுதப்பட்ட கடிதங்களாய் இருந்தது. யாரோ, ஒரு ராத்திரி பூராவும் உட்கார்ந்து மாங்கு மாங்குன்னு எழுதின லெட்டர்கள் மாதிரி இருந்தது. இது உண்மையான காதல் அல்லன்னு அப்பவே என் மனசுக்குப் பட்டது. அதுக்கப்புறம் நாம ஆம்புலன்ஸுக்கு போன் பண்ணி ஆம்புலன்ஸ் வந்ததும் அந்த இளைஞனை வேனில் ஏற்றும்போது அவனோட ரோமம் மண்டிய மார்புப் பகுதியைப் பார்த்தேன். ஆட்காட்டி விரல் நீளத்துக்கு அந்த இடத்தில் தோல் தீய்ந்து போய் தெரிஞ்சது. பார்ட்டிக்குலரா அந்த இடத்தை தீய்க்கணும்ன்னா மார்புப் பகுதியில் இருந்த எதையோ யாரோ அழிச்சிருக்காங்கன்னு என்னோட மனசுக்கு தோணியது. ஒருவேளை அந்த இடத்துல அந்த இளைஞனோட பேர் இருந்து இருக்கலாம். அப்படியிருந்தா அதை அழிக்க வேண்டிய அவசியம் என்னான்னு யோசனை பண்ணினேன். என்னோட சந்தேகத்தை ஊர்ஜிதப்படுத்தற மாதிரி - அந்த இளைஞனை ஆம்புலன்ஸ் வேன்ல ஏற்றும்போது அவன் சுய உணர்வு இழந்த நிலையில் சில வார்த்தைகளை உளறினான். நான் அதை அப்ஸர்வ் பண்ணினேன். அது எல்லாமே மராட்டி கலந்த ஹிந்தி வார்த்தைகள். அவனோட உடம்பில் இருந்த கடிதங்கள் எல்லாமே தமிழ் மொழியில். அவன் உளறிய வார்த்தைகளோ ஹிந்தி மராட்டி. ஸோ அந்த இளைஞன் எப்படி நந்தாவாய் இருக்க முடியும்...?"

"சூப்பர் பாஸ்...! நடு ரோட்ல மண்டை பிளக்கிற வெய்யில்ல நின்னுகிட்டு இத்தனை விஷயங்களைக் கண்டு பிடிச்சிருக்கீங்க... நான் என்னடான்னா ரோட்டுக்கு எதிர்பக்கம் சினிமா பேனரில் இருந்த நமீதாவை கெட்ட பார்வை பார்த்துட்டு இருந்திருக்கேன்...! என்ன இருந்தாலும் மேன்மக்கள்



மேன்மக்கள்தான்... பாஸ்..."

விஷ்ணு சொல்லிக் கொண்டிருக்கும் போதே விவேக்கின் செல்போன் வைப்ரேஷனில் கூப்பிட்டது. எடுத்து அழைப்பது யார் என்று பார்த்தான்.

போலீஸ் கமிஷனர் பரத்வாஜ்.

"ஸார்... குட் ஆஃப்டர்நூன்..."

"மிஸ்டர் விவேக்..! இப்போ எங்கே இருக்கீங்க?"

"ஜி.ஹெச்ல ஸார்... ஒரு கேஸ் விஷயமாய் டாக்டர்கிட்டே பேசிட்டிருக்கேன்."

"உங்களை ஃப்ரீ பண்ணிகிட்டு உடனடியாய் என்னை வந்து பார்க்க முடியுமா..?"

"எனிதிங்க் இம்பார்ட்டண்ட் ஸார்?"

"வெரி வெரி இம்பார்ட்டண்ட் ப்ளீஸ் கம் அண்ட் மீட் மீ..."

"உடனே புறப்பட்டு வர்றேன் ஸார்." செல்போனை அணைத்த விவேக் டாக்டரை ஏறிட்டான்.

"டாக்டர்..! ஒரு எமர்ஜன்ஸி... கமிஷனர் காரணம் இல்லாமே கூப்பிடமாட்டார்."

"நோ... ப்ராப்ளம் மிஸ்டர் விவேக்...! நீங்க போய்ட்டு ஈவினிங் வாங்க. அதுக்குள்ளே அந்த இளைஞனின் கண்டிஷன் கொஞ்சம் இம்ப்ரூவ் ஆகலாம். அந்நியர்கள் யாரும் நுழையாதபடி நான் பார்த்துக்கிறேன்."

"தேங்க்யூ டாக்டர்!" விவேக் விடை பெற்று நகர, விஷ்ணு "பாஸ்" என்றான்.

"என்ன?"

"நானும் வரவா...?"

"வேண்டாம். உனக்கு வேற வேலை ஒண்ணு இருக்கு..."

"சொல்லுங்க பாஸ்."

"நீ கோட்டை விட்ட அந்த போலி சுகிர்தாவை தேடிக் கண்டுபிடிச்சு இன்னிக்கு சாயந்தரம் ஆறு மணிக்குள்ளே என் கண் முன்னாடி கொண்டு வந்து நிறுத்தணும்..."

"பாஸ்...! இது நியாயமா...? சென்னை என்ன சின்ன கிராமமா..? மொத்தம் எண்பது லட்சம் பேர், ஒரு லட்சம் சந்து பொந்துகள். எங்கேன்னு போய்த் தேடுவேன்?"

"அதெல்லாம் எனக்குத் தெரியாது. நீ எங்கே போய் தேடுவியோ... எப்படி தேடுவியோ எனக்குத் தெரியாது. ஆறுமணிக்கு இதே ஹாஸ்பிடலுக்கு வருவேன். நீயும் அந்த போலி சுகிர்தாவும் எனக்கு முன்னாடி நின்னுட்டு இருக்கணும்..."

''பாஸ்...! ஒரு சின்ன ரெக்வெஸ்ட்.''
''என்ன?''
''சாயந்தரம் ஆறுமணிங்கிறது ரொம்பவும் ஷார்ட் பீரியடாய் இருக்கு. கொஞ்சம் கால அவகாசம் கொடுக்கக் கூடாதா?''
''சரி... ட்வெண்டி ஃபோர் ஹவர்ஸ்...''
''பத்தாது பாஸ்...''
''சரி ரெண்டு நாள்?''
''போதாது பாஸ்...''
''சரி..! உனக்கு எவ்வளவு நாள் டயம் வேணும்?''
''ரெண்டு மாசம் பாஸ்...''
விவேக் முறைக்க ''ஸாரி பாஸ்'' என்று நழுவி வராந்தாவின் சுவரோரமாய் போட்டிருந்த நாற்காலிக்குப் போய் சாய்ந்தான்.
விவேக்கும் டாக்டரும் எதிர்எதிர் திசைகளில் நடந்து போய்விட, விஷ்ணு இரண்டு கைகளாலும் நெற்றியைப் பிடித்துக் கொண்டு கண்களை மூடிக் கொண்டான்.
'இந்த டுபாக்கூரை எங்கே என்று போய்த் தேடுவது?'
'அவள் போலி சுகிர்தா என்று பாஸ் சொல்லியும் நான் அலட்சியமாய் இருந்தது என்னோட தப்பு..!'
'அவளைக் கண்டுபிடிக்க என்ன வழி...?'
யோசனையில் நிமிஷங்கள் கரைந்து கொண்டிருந்தன.
எவ்வளவு நேரம்?
தெரியவில்லை.
யாரோ சட்டென்று தன் தோளைத் தொட்டது போன்ற உணர்வில் கண்களைத் திறந்தான் விஷ்ணு.
எதிரே-
அந்த -
போலி சுகிர்தா.

# 8

ஒவ்வொருவரும் தன் வீட்டுக்கு முன்னால்
உள்ள குப்பைகளை எடுத்துவிட்டு
சுத்தம் செய்தாலே போதும்
தேசம் தானாக சுத்தமாகிவிடும்.

இப்படிக்கு,
**ஓர் இந்தியன்.**



விவேக், போலீஸ் கமிஷனர் பாத்வாஜ் அறைக்குள் நுழைந்தபோது அவர் சற்று கவலையாய் அறைக்குள் நடைபோட்டுக் கொண்டிருந்தார். விவேக்கைப் பார்த்ததும் மலர்ந்தார்.
''வாங்க மிஸ்டர் விவேக்... ப்ளீஸ் ஸீட்டட்'' விவேக்கிற்கு ஒரு நாற்காலியைக் காட்டிவிட்டு தானும் எதிரே உட்கார்ந்தார்.
''சொல்லுங்க ஸார்... எனிதிங்க் சீரியஸ்?''
''எஸ்...'' என்றவர் மேஜையின் மேல் இருந்த மினரல் வாட்டர் பாட்டிலை எடுத்து ஒரு வாய் குடித்துவிட்டு பேச்சை ஆரம்பித்தார்.
''விவேக்! உங்களுக்கு **'இன்றைய இந்தியா'** பத்திரிகையின் ஆசிரியர் சுதிர்மதியோனைத் தெரியுமா?''
விவேக் புன்னகைத்தான்.
''என்ன ஸார் இது..! அவரைத் தெரியாதவங்க தமிழ்நாட்டில் யார் இருக்க முடியும்...? எல்லாத்துக்கும் மேலா அவர் உங்க மாமனார் ஆச்சே...? அவரை நிறைய தடவை பார்த்து இருக்கேன். ரெண்டொரு வார்த்தை பேசியும் இருக்கேன். என்... ஸார்... அவர்க்கு என்ன...?''
பாத்வாஜ் சில விநாடிகள் மௌனமாய் இருந்து விட்டு பெருமூச்சொன்றை வெளியேற்றிவிட்டு சொன்னார்.
''அவரை கடந்த ரெண்டு நாளா காணோம்.''
விவேக் நிமிர்ந்து உட்கார்ந்தான்.
''என்ன ஸார் சொல்றீங்க...?''
''எஸ்... இன்னிக்கு புதன்கிழமை. திங்கட்கிழமை ராத்திரி பத்து மணிக்கு மேல் பத்திரிகை ஆபீஸிலிருந்து வீட்டுக்குப் புறப்பட்டு போயிருக்கார். ஆனா வீட்டுக்கு வந்து சேரலை.''
''காரை ட்ரைவ் பண்ணினது யாரு ஸார்?''
''அவர்தான்..! அவர்க்கு எப்பவுமே ஸெல்ப் ட்ரைவிங் தான் பிடிக்கும்...''
''சரி.. காரோடு எங்கே போனார்?''
''பத்திரிகை ஆபீஸிலிருந்து அவர் நேரா கன்னிமாரா ஹோட்டலுக்குப் போயிருக்கார். அதுக்கப்புறம் அவரைக் காணோம்.''
''அவர் அங்கே போனது உங்களுக்கு எப்படி தெரியும் ஸார்?''
''கன்னிமாரா ஹோட்டலின் கார் பார்க்கிங்கில் அவர்

கார் இருந்தது! ராத்திரி பனிரெண்டு மணிக்கு மேல் ஹோட்டல் மானேஜரிடமிருந்து மாமனாரோட வீட்டுக்கு போன் வந்திருக்கு. அவரோட மகன் கங்காதரன் போனை அட்டெண்ட் பண்ணியிருக்கார். காரோட ஆர்.ஸி.புக்கில் அட்ரஸ் இருந்ததால நபர் யார்ன்னு கண்டுபிடிக்க முடிஞ்சதாகவும், கதிர்மதியோனை ஹோட்டல் முழுவதும் தேடிப் பார்த்ததாகவும், அவர் கிடைக்காமல் போகவே வேறு வழியில்லாமல் போன் பண்ணினதாகவும் ஹோட்டல் மானேஜர் சொன்னார். உடனே கங்காதரன் எனக்கு போன் பண்ணினார். நானும் கங்காதரனும் ஹோட்டலுக்குப் போனோம். கார் மட்டும் இருந்தது. அவரைக் காணோம். ஹோட்டலில் இருக்கிற செக்யூரிட்டி மற்றும் ஊழியர்களிடம் விசாரணை பண்ணிப் பார்த்தோம். என்னோட மாமனார் கதிர்மதியோன் எங்கே போனார்ன்னு யாருக்கும் தெரியலை."

"ஸார்... ஒரு கேள்வி..."

"ப்ளீஸ்..."

"கதிர்மதியோன் கன்னிமாரா ஹோட்டலுக்கு எதுக்காக போனார்?"

"அதுவும் ஒரு புதிரான கேள்விதான். பொதுவாய் எந்த ஹோட்டலுக்கும் போகாதவர் என்னோட மாமனார். திங்கட்கிழமை ராத்திரி பத்து மணிக்கு மேல் எதுக்காக - யாரைப் பார்க்க கன்னிமாரா ஹோட்டலுக்குப் போனார்ன்னு தெரியலை. போனவர்க்கு என்ன கதி நேர்ந்ததுன்னும் தெரியலை. வீட்ல எல்லாரும் அப்செட். விஷயம் வெளியே தெரியறதுக்கு முன்னாடி அவரைக் கண்டுபிடிக்க நான் எவ்வளவோ முயற்சி பண்ணினேன். முடியலை. இனிமேலும் விஷயத்தைப் போட்டு மூடி வைக்கக் கூடாதுன்னுதான் உங்களைக் கூப்பிட்டேன். மாமனார் கதிர்மதியோன் யார்க்கும் பயப்படாதவர். 'இன்றைய இந்தியா' என்கிற பத்திரிகை மூலம், ஆட்சியில் நடக்கிற அவலங்களை மட்டுமல்ல - எதிர்க்கட்சிகளின் சூழ்ச்சிகளையும் பொறுப்பில்லாத் தனத்தையும் அப்பட்டமாய் தோலுரித்துக் காட்டுபவர். ஸோ... அவர்க்கு நண்பர்களைக் காட்டிலும் எதிரிகள்தான் அதிகம். அப்படிப்பட்ட எதிரிகளால்தான் அவர்க்கு ஏதாவது ஆபத்து ஏற்பட்டு இருக்கணும். பட் அவரோட எதிரிகள் யார் யார்ன்னு க்ளாஸிஃபை பண்ணமுடியலை."

"அவரோட செல்போனுக்கு ட்ரை பண்ணிப் பார்த்தீங்களா...?"



"அவர் தன்னோட செல்போனை பத்திரிகை ஆபீஸிலேயே விட்டுட்டுப் போயிட்டார். செல்போனை இப்படி அடிக்கடி மறந்துவெச்சுட்டுப் போயிடறது அவரோட வழக்கம்..."

விவேக் சில விநாடிகள் யோசிப்பாய் இருந்துவிட்டு கமிஷனரை ஏறிட்டான். "ஸார்... அவருடைய செல்போனின் CALL REGISTER பார்த்திருந்தா கடைசியா அவர்க்கு போன் பண்ணி பேசியது யார்ன்னு கண்டுபிடிச்சிருக்கலாமே?"

"மிஸ்டர் விவேக்! அதையெல்லாம் நான் பார்க்காமல் இருப்பேனா..? அவருடைய செல்போனின் கால் ரெஜிஸ்டரில் இருந்த RECEIVED CALLS, DIALED CALLS, MISSED CALLS, எல்லாமே டெலிட் பண்ணப்பட்டிருக்கு. இதையெல்லாம் அவரே டெலிட் பண்ணினாரா இல்லை வேற யாராவது டெலிட் பண்ணாங்களான்னு ஒரே குழப்பமாய் இருக்கு."

"அவரோட பத்திரிகை ஆபீஸில் மொத்தம் எத்தனை பேர் வேலை பார்க்கிறாங்க..?"

"பிரிண்டிங் செக்ஷனில் இருக்கும் லேபர்களையும் சேர்த்து மொத்தம் 72 பேர்."

"எல்லாரையுமே என்கொயர் பண்ணீங்களா?"

"பண்ணிட்டேன்.. பட் அவர் காணாமல் போனதுக் கான எந்த க்ளுவும் கிடைக்கலை." கமிஷனர் சொல்லிக் கொண்டிருக்கும் போதே இண்டர்காம் முணுமுணுத்தது.

ரிஸீவரை எடுத்து காதுக்கு ஒற்றினார். மறுமுனையில் அவருடைய பி.ஏ. பேசினார்.

"ஸார்... உங்களைப் பார்த்துப் பேச அஸிஸ்டண்ட் கமிஷனர் வேணுகோபாலும் இன்ஸ்பெக்டர் ருத்ர மூர்த்தியும் வந்து வெயிட் பண்ணிட்டிருக்காங்க. நீங்க ஒரு முக்கியமான மீட்டிங்கில் இருக்கிறதாய் சொன்னேன்..."

"நோ ப்ராப்ளம்... அவங்களை உள்ளே அனுப்புங்க..!"

ரிஸீவரை வைத்துவிட்டு கமிஷனர் காத்திருக்க அடுத்த சில விநாடிகளில் அஸிஸ்டண்ட் கமிஷனர் வேணுகோபாலும் இன்ஸ்பெக்டர் ருத்ர மூர்த்தியும் உள்ளே வந்து சல்யூட்களோடு விறைத்து தளர்ந்தார்கள். கமிஷனர் மௌனமாய் நாற்காலிகளைக் காட்டினார்.

"ப்ளீஸ்."

உட்கார்ந்தார்கள்.

"சொல்லுங்க...என்ன விஷயம்..?"

"ஸார்... அந்த காலபைரவனோட ப்ளாக்ஸ் போர்டு மேட்டர் மீடியாக்களுக்கு மத்தியில் ரொம்பவும் ஹாட்டாய் இருக்கு. தாம்பரத்திலிருந்து வந்த எலக்ட்ரிக் ட்ரெயினில் ப்ளக்ஸ் போர்டு வர்ற விஷயம் நிருபர்களுக்கு முன்கூட்டியே தெரிஞ்சிருக்கு. போலீஸ் - ஸ்பாட்டுக்கு போறதுக்கு முந்தி அவங்க வந்து வெயிட் பண்ணிட்டிருக்காங்க ஸார். இன்னிக்கு சாயந்தரம் எல்லா டி.வியும் அந்த காலபைரவன் செய்திக்கு இம்பார்ட்டன்ஸ் கொடுத்து டெலிகாஸ்ட் பண்ணப் போறாங்க."

"பண்ணட்டும்... ஏற்கெனவே வெறும் வாயை மென்னுகிட்டு இருக்கிறவங்களுக்கு 'பான்பீடா' கிடைச்சா கேட்கவா வேணும்? நல்லா மென்னு துப்பட்டும்." கமிஷனர் எரிச்சலாய் சொல்லிவிட்டு நெற்றியைப் பிடித்துக் கொள்ள - அஸிஸ்டண்ட் கமிஷனர் தயக்கக் குரலில் பேசினார்.

"ஸார்... ரெண்டு ப்ளக்ஸ் போர்டுகளில் இருந்த 10 டெலிபோன் நெம்பர்களையும் செக் பண்ணிப் பார்த்துட்டோம். அதுல உங்க ஃபாதர் - இன் - லா மிஸ்டர் கதிர்மதியோனின் போன் நெம்பர் இல்லை. ஸோ காணாமல் போன அவர்க்கும், இந்த 'காலபைரவ'னின் ப்ளக்ஸ் போர்டு மேட்டர்க்கும் எந்த சம்பந்தமும் இல்லை.

அதுவரைக்கும் பேசாமல் இருந்த விவேக் இப்போது மெள்ள குரல் கொடுத்தான் கமிஷனரைப் பார்த்து.

"எக்ஸ்க்யூஸ்மீ ஸார்... அது என்ன **கால பைரவன் ப்ளக்ஸ் போர்டு** மேட்டர்..?"

கமிஷ்னர் அனலாய் பெருமூச்சொன்றை விட்டார். "மிஸ்டர் விவேக்..! என்னோட மாமனார் காணாமல் போன விஷயம் ஒரு தலைவலின்னா... இந்த காலபைரவன் ப்ளக்ஸ் போர்டு மேட்டர்... ஒரு திருகுவலி..! இன்னிக்கு காலையில் இருந்து எவனோ ஒரு சைக்கோ தன்னை காலபைரவன்னு சொல்லிகிட்டு பத்து டெலிபோன் நெம்பர்களை மென்ஷன் பண்ணி, இந்த நெம்பர்களின் உரிமையாளர்கள் உயிர்க்கு ஆபத்துன்னு மிரட்டிகிட்டு இருக்கான். முதல் ப்ளக்ஸ் போர்டு மந்தவெளிக்குப் பக்கத்தில் உள்ள அலர்மேலு அவென்யூ பஸ் ஸ்டாப் ஷெல்ட்டரில் இருந்தது. ரெண்டாவது ஃப்ளக்ஸ் போர்டு எலக்ட்ரிக் ட்ரெயினில் வந்தது. நல்ல வேளையாய் ரெண்டு ஃப்ளக்ஸ் போர்டுகளில், மென்ஷன்



பண்ணியிருந்த டெலிபோன் நெம்பர்களில் என் மாமனாரோட டெலிபோன் நெம்பர் இல்லை...!"

"ஸார்..! நான் அந்த ஃப்ளக்ஸ் போர்டுகளைப் பார்க்க முடியுமா..?"

வேணுகோபால் இடைமறித்தார். "பார்க்கலாம் ஸார். அந்த ரெண்டு ஃப்ளக்ஸ் போர்டுகளையும் கமிஷனர் ஆபீஸுக்கு கொண்டு வந்துட்டோம்... நீங்க விரும்பினா இப்பவே பார்க்கலாம்."

எல்லோரும் எழுந்தார்கள். அறையினின்றும் வெளியேறி வராந்தாவில் நடக்கும் போது கமிஷனர் சொன்னார்.

"மிஸ்டர் விவேக்..! சமீபகாலமாய் என்னோட மாமனார் தன்னோட 'இன்றைய இந்தியா' பத்திரிக்கையில் எல்லா அரசியல் தலைவர்களையும் சகட்டு மேனிக்குத் தாக்கி கட்டுரைகள் எழுதிகிட்டு இருந்தார். அந்த கட்டுரையின் தலைப்பு **'இன்னா 40.'** அதாவது இந்த இந்தியாவுக்கு வேண்டாத 40 அரசியல் தலைவர்களைப் பற்றிய கட்டுரை அது. அந்தக் கட்டுரையில் உள்ள வாசகங்களைப் படிக்கும் போது அந்தக் கட்டுரைக்கு சம்பந்தப்பட்ட தலைவர்க்கு கோபத்தால் கண்டிப்பாய் ரத்தம் கொதிக்கும். நான் கூட 'எதுக்காக இப்படி தடித்த வார்த்தைகளைப் போட்டு கட்டுரை எழுதறீங்க..? கொஞ்சம் சாஃப்ட்டா எழுதலாமே'ன்னு சொன்னேன். அதுக்கு அவர், 'மாப்ளே அவனுகளுக்கெல்லாம் சாஃப்ட்டா எழுதினா உறைக்காது. இப்படி பேனாவில் அமிலம் நிரப்பி எழுதினாத்தான் உறைக்கும்'ன்னு சொன்னார். 'தேசத்தில் இருக்கிற க்ரிமினல்களை அடக்க உங்க கையில் துப்பாக்கி இருக்கிறதைப் போல் அடாவடி அரசியல்வாதிகளை அடக்க என்னோட கையில் பேனா இருக்கு'ன்னு வாதம் பண்ணினார்..."

"ஸார்..! உங்க மாமனார் கதிர்மதியோனுக்கு ஒரு விஷயம் புரியலை..."

"என்ன..?"

"அரசியல்வாதிகள் பயப்படறமாதிரி நடிப்பாங்க... பட் உண்மையிலேயே பயப்பட மாட்டாங்க. சமயம் கிடைக்கும் போது தன்னோட சுய ரூபத்தைக் காட்டவும் தயங்கமாட்டாங்க. யாரோ உங்க மாமனாரை கன்னிமாரா ஹோட்டலுக்கு வரவழைச்சு இருக்காங்க. அப்படி வரவழைச்சவங்க அவர்க்கு ரொம்பவும் வேண்டிய நபராய்த்தான் இருக்கணும்."

"எப்படி சொல்றீங்க விவேக்..?"

"கதிர்மதியோனுக்கு, நம்பிக்கைக்கு உரிய நபர்கள்

யாரு... நண்பர்கள் யாரு... எதிரிகள் யார்ன்னு நல்லாவே தெரியும். திடீர்ன்னு யாராவது ஒருத்தர் போன் பண்ணி 'கன்னிமாரா ஹோட்டலுக்கு வாங்க'ன்னு சொன்னா உடனே போயிடமாட்டார். பட இவர் போயிருக்கார்ன்னா அந்த நபர் நம்பிக்கைக்கு உரிய நபராகத்தான் இருக்கணும்."

"நான் இந்த கோணத்துல திங்க் பண்ணவே யில்லை விவேக்... நான் அவரோட எதிரிகள் யார் யார்ன்னு லிஸ்ட் பண்ணிட்டிருந்தேன். இனி அவரோட நம்பிக்கைக்கு உரிய நபர்கள் யார் யார்ன்னு லிஸ்ட் பண்ணணும்... யூ ஹேவ் கெய்டட் மீ இன் ப்ராப்பர் வே..."

முன்னால் சென்று கொண்டிருந்த அஸிஸ்டண்ட் கமிஷனர் வேணுகோபாலும் இன்ஸ்பெக்டர் ருத்ர மூர்த்தியும் ஒரு அறைக்குள் நுழைந்தார்கள். சுவரோரமாய் மடித்து வைத்து இருந்த அந்த ஃப்ளக்ஸ் போர்டுகளை பிரித்து விரித்து வைத்தார்கள்.

விவேக் அதில் இருந்த வாசகங்களைப் படித்துப் பார்த்துவிட்டு கமிஷனரை ஏறிட்டான்.

"ஸார்...! இந்த கால பைரவனின் நோக்கம் தனக்கு வேண்டாத நபர்களைக் கொலை செய்யறது மட்டுமில்லை. போலீஸ் டிபார்ட்மெண்ட்டை எந்த அளவுக்கு டார்ச்சர் படுத்தணுமோ அந்த அளவுக்கு டார்ச்சர் பண்ணி பொதுமக்கள் மத்தியில் போலீஸுக்குள்ள மதிப்பை ஸ்பாய்ல் பண்றதும்தான்...! கொலை செய்யறது மட்டும் காலபைரவனின் நோக்கமாய் இருந்தா இப்படி ஒரு பகிரங்க அறிவிப்பைக் கொடுத்து பரபரப்பை ஏற்படுத்த வேண்டிய அவசியம் இல்லை..."

"ஸோ... இந்த காலபைரவன் ஒரு சைக்கோ?"

"மே...பி...! என்னோட இன்னொரு அஸ்ஸெம்ஷனையும் சொல்லிடறேன். இந்த கால பைரவன் ஒரு ஆணாய்தான் இருக்கணும்ங்கிற அவசியம் இல்லை, ஒரு பெண்ணாய் கூட இருக்கலாம்."

"ஓ.கே... கொலையாளிக்கு என்ன மோட்டிவேஷன் இருக்க முடியும்...?"

"அது அவன் கொடுத்த கெடு 48 மணி நேரம் போனாத்தான் தெரியும்." சொன்ன விவேக் இன்ஸ்பெக்டர் ருத்ரமூர்த்தியிடம் திரும்பினான். "இந்த கேஸை டீல் பண்றது நீங்கதானே?"

"எஸ்... ஸார்..."

"இந்த ஃப்ளக்ஸ் போர்டில இருக்கிற பத்து டெலிபோன் நெம்பர்களுக்கும் போன் பண்ணி



அவங்க யார் என்கிற விபரங்களையெல்லாம் கலெக்ட் பண்ணிட்டீங்களா?"

"பண்ணிட்டேன் ஸார்... முதல் ஃப்ளக்ஸ் போர்டில் இருந்த டெலிபோன் எண்கள் சென்னை, கோவை, மதுரை, சேலம், நெல்லை ஊர்களைச் சேர்ந்தவை. சென்னை டெலிபோன் நெம்பர் குரோம்பேட்டையைச் சேர்ந்த வேலாயுதம் என்கிற நபர்க்கு சொந்தமானது. அவர் ஒரு கோணிப்பை வியாபாரி. கோவை டெலிபோன் நெம்பர்க்கு உரியவர் பாலா என்கிற பாலசுப்ரமணியன். இவர்க்கு டெக்ஸ்டைல்ஸ் பிசினஸ். சேலம் நெம்பர் ஒரு ரிடையர்ட் டீச்சரின் நெம்பர். பேர் சாரதாம்பாள். மதுரை நெம்பர்க்கு உரிய நபரின் பெயர் அமிர்தம். இவர் ஒரு மெஸ் நடத்திட்டு வர்றார். நெல்லை நெம்பர் பூக்கடை பாலு என்கிற நபர்க்கு சொந்தமானது. எல்லாருமே மிடில் க்ளாஸ் ஃபேமிலி. லோக்கல் போலீஸை வெச்சு விசாரணை செய்து பார்த்ததில் அந்த ஐந்து குடும்பங்களும் தப்பு பண்ணாத குடும்பங்கள்ன்னு தெரியுது. தங்களுக்கு யாரும் எதிரிகள் இல்லைன்னு சொல்றாங்க."

"அவங்களுக்கு போலீஸ் பாதுகாப்பு கொடுக்கப் பட்டு இருக்கா இல்லையா?"

"எல்லா குடும்பங்களுக்கும் இரண்டு அடுக்கு பாதுகாப்பு போடப்பட்டிருக்கு ஸார்."

"சரி... ரெண்டாவது ஃப்ளக்ஸ் போர்டில் உள்ள டெலிபோன் எண்களைத் தொடர்பு கொண்டு பேசிப் பார்த்தீங்களா?"

"பார்த்தோம் ஸார்" என்றவர் தொடர்ந்தார்.

"அந்த டெலிபோன் எண்கள் எல்லாமே வெளி மாநில டெலிபோன் எண்கள். முதல் நெம்பர் பெங்களூர் நெம்பர். அந்த நெம்பர்க்கு உரிய நபரின் பெயர் கெம்பண்ணா. பெங்களூர்ல ஒரு டிபார்ட்மெண்ட்டல் ஸ்டோர் வெச்சிருக்கார். ரெண்டாவது நெம்பர் கொல்கத்தா. இந்த நெம்பர்க்கு போன் பண்ணினால் 'நாட் இன் யூஸ்'ன்னு ஒரு ரெக்கார்டட் வாய்ஸ் வருது. இருந்தாலும் அந்த டெலிபோன் நெம்பர் யார் பேர்ல இருந்தது என்கிற விபரத்தை கண்டுபிடிக்க டெலிபோன் டிபார்ட்மெண்ட் மூலமாய் நடவடிக்கை எடுத்துட்டு இருக்கோம். மூணாவது நெம்பர் கேரளாவைச் சேர்ந்த கண்ணனூர். இந்த எண்ணுக்குரிய நபரின் பெயர் அரவிந்தாட்சன். இவர் ஒரு களரி மாஸ்டர். அடுத்தது மும்பை நெம்பர். இந்த எண்ணுக்குரியவர் ரயில்வேயில்

எம்ப்ளாயியாய் இருக்கிறார். அவர் பெயர் திலீப் ஷர்மா. ஐந்தாவது ஹைதராபாத் நெம்பர். இந்த நெம்பர்க்கு உரியவர் ஹைதர்அலி. அவர் ஒரு மூத்த வழக்கறிஞர். இவங்க எல்லார்க்கும் அந்தந்த மாநில போலீஸார் மூலம் பாதுகாப்பு ஏற்பாடுகள் பண்ணப்பட்டிருக்கு... இந்த நபர்கள் 10 பேரும் எந்த விதமான முக்கியத்துவமும் இல்லாத நபர்கள். இவர்களில் யாருமே வி.ஐ.பி. கிடையாது. அரசியல்வாதி கிடையாது. கொலை செய்யப்படக்கூடிய அளவுக்கு எந்த விதமான பிரச்சனைகளும் இல்லாதவர்கள்."

இன்ஸ்பெக்டர் ருத்ரமூர்த்தி சொல்லி முடிக்க அறைவாசலில் நிழலாடியது. எல்லோரும் திரும்பினார்கள்.

கமிஷனரின் உதவியாளர்.

"ஸார்..."

"என்ன லாரன்ஸ்...?"

"ஸார்... இப்ப வந்த தபாலில் உங்களுக்கு ஒரு லெட்டர். கவர்க்கு மேலே **ஹைலி கான்ஃபிடென்ஷியல். ப்யூர்லி பர்சனல்**ன்னு போட்டிருந்ததால உடனே கொண்டு வந்தேன்...." சொன்னவர் கடிதத்தை நீட்ட கமிஷனர் அதை ஆர்வமாய் வாங்கிப் பார்த்தார்.

கவரின் மேல் **TO** அட்ரஸும் **FROM** அட்ரஸும் டைப் செய்யப்பட்டு இருந்தது. கவரின் வலதுபக்க ஓரமாய் **HIGHLY CONFIDENTIAL** என்ற வாசகமும் அதற்குக் கீழே **PURELY PERSONAL** என்ற வாசகமும் சிவப்பு எழுத்துக்களில் தெரிந்தது. **FROM** அட்ரஸில் எழுதப்பட்ட பெயரைப் பார்த்தார். அங்கே பெயரோ அட்ரஸோ எதுவும் இல்லை. ஒரு வாக்கியம் துண்டு துண்டாய் பிரிக்கப்பட்டு டைப் செய்யப்பட்டு தெரிந்தது. கமிஷனர் படித்தார்.

**நான்**

**இந்தக் கடிதத்தில் சொல்லியருப்பது.**

**எல்லாமே உண்மையே!**

கமிஷனர் கடிதத்தின் வாயை பதட்டமாய்க் கிழித்து உள்ளே மடித்து வைத்து இருந்த தாளை எடுத்தார். பிரித்தார்.

தமிழ் கம்ப்யூட்டரில் டைப் செய்யப்பட்ட எழுத்துக்கள் வரிகளாய் ஓடியிருந்தன. கமிஷனர் படிக்க ஆரம்பித்தார்.

# 9

ஒவ்வொரு மனிதனும் இரண்டு விஷயங்களை ஞாபகத்தில் வைத்துக் கொள்ள வேண்டும்.

1. ஒருவன் தான் மற்றவர்களுக்கு செய்த தீமையை.

2. மற்றவர்கள் தனக்கு செய்த நன்மையை.

மேற்கண்ட 2 விஷயங்களை எந்த நாட்டு மக்கள் ஞாபகத்தில் வைத்துக் கொள்கிறார்களோ அந்த நாடு மதக் கலவரங்கள் இல்லாமல் அமைதியாய் இருக்கும்.

இப்படிக்கு,
**ஓர் இந்தியன்.**

**ச**கிர்தாவைப் பார்த்ததும் விஷ்ணுவுக்குள் ஒரு பிரளயம் நிகழ்ந்த மாதிரியான உணர்வு.

"ஏய்...ய்... நீ...?"

அவள் சுற்றும் முற்றும் பார்த்துவிட்டு கை கூப்பினாள். "ஸார்... ப்ளீஸ்..! கத்தி கித்தி ஆர்ப்பாட்டம் பண்ணிடாதீங்க... நான் உங்ககிட்டயிருந்து தப்பிச் சுட்டு போக நினைச்சது நிஜம். அது எவ்வளவு பெரிய தப்புன்னு உணர்ந்து மறுபடியும் வந்துட்டேன்... நான் உங்ககிட்டே சில உண்மைகளைச் சொல்லணும். இப்படி உட்காரலாமா?"

"உட்கார்..."

அவள் உட்கார்ந்தாள். வியர்த்துப் போயிருந்த முகத்தை சேலைத் தலைப்பால் ஒற்றிக் கொண்டாள்.

விஷ்ணு கேலியான குரலில் கேட்டான்.

"ஜூஸ் என்ன கொண்டு வரட்டும்... ஆப்பிளா... ஆரஞ்சா..?"

"ஸார்... ப்ளீஸ்... என் மேல கோபப்படாதீங்க."

"சரி...வா... என் மடியில வந்து உட்கார்... கொஞ்சறேன்."

"ஸார்... என்னோட நிலைமை. என்னான்னு தெரிஞ்சா நீங்க இப்படி என் மேல கோபப்பட மாட்டீங்க..."

"சரி... சரி... உன்னோட வரலாற்றுப் புகழ் வாய்ந்த வாழ்க்கை சரிதத்தைப் பத்தி சொல்லு... நாட்டு மக்கள் ஆவலாய் காத்துகிட்டு இருக்காங்க. மொதல்ல நீ

யாரு...?''

''நான் சுகிர்தா கிடையாது ஸார்.''

''அதைத்தான் நாங்க கண்டுபிடிச்சுட்டோமே! மேற்கொண்டு நீ சொல்லு...! நீ யாரு..?''

''என்னோட உண்மையான பேர் அபி நந்தினி ஸார்.''

''அப்புறம்..?''

''எனக்கு சொந்த ஊரு ஆந்திரா விஜயவாடா ஸார்.''

''ஓ... தெலுகு தேசமா..? அக்கட உண்டிதான் நுவ்வு ஒச்சினாவா..? விஜயசாந்தி பாக உன்னாரா...?''

''ஸார்... நான் விஜயவாடாவில் பொறந்து வளர்ந்து இருந்தாலும் கடந்த அஞ்சு வருஷமா நான் சென்னையில்தான் இருக்கேன். சினிமாவில் நடிக்கிற ஆசையில் வீட்டை விட்டு ஓடி வந்து அது முடியாமே ஒரு கால்கேர்ளா மாறிட்டேன்.''

''ஏதோ ஒரு மதத்திலிருந்து இன்னொரு மதத்துக்கு மாறிட்ட மாதிரி சொல்றே... சரி... சுகிர்தாவாய் மாற என்ன காரணம்?''

''ஸார்...! ஒரு மணி நேரத்துக்கு முந்தி என்னைப் பார்க்க என் வீட்டுக்கு ஒருத்தர் வந்து இருந்தார். அவர் எனக்கு தன்னோட முகத்தைக் காட்ட விரும்பாமே கண்கள் மட்டும் தெரியற மாதிரி முகக் கவசம் போட்டுகிட்டு தலைக்கு தொப்பி போட்டிருந்தார். கையில் ஒரு ப்ரீப்கேஸ். அதுல கட்டுக் கட்டாய் பணம். அவர் என்கிட்டே பேரம் பேசினார்.''

''என்ன பேரம்..?''

'' 'இந்த ப்ரீப்கேஸ்ல பத்துலட்சம் ரூபாய் இருக்கு. நான் சொல்றபடி ஒரு வேலையை செஞ்சா உனக்குத்தான் இந்த பத்து லட்சம்'ன்னு சொன்னார். நான் என்ன வேலைன்னு கேட்டேன். அவர் அதுக்கு 'நீ உடனே புறப்பட்டு ஜி.ஹெச் போகணும். போய் அங்கே ஐ.ஸி. யூனிட்டில் ட்ரீட்மெண்ட் எடுத்துட்டிருக்கிற நந்தா என்கிற இளைஞனுக்கு காதலியாய் நடிக்கணும். அந்த நந்தா இப்போ சீரியஸான நிலைமையில இருக்கிறான். உயிர் பிழைக்க வாய்ப்பு இல்லை. இன்னிக்கு ராத்திரிக்குள்ளே இறந்துடுவான். உறவுன்னு சொல்லிக்க யாரும் இல்லாத நந்தாவுக்கு நீ காதலியாய் நடிச்சு அவனோட காரியங்கள் முடியற வரைக்கும் இருந்தாபோதும்'ன்னு சொன்னான். அவர் அப்படி சொன்னதைக் கேட்டு நான் பயந்து போய்ட்டேன். 'நீங்க எவ்வளவு பணம் கொடுத்தாலும் சரி அப்படியெல்லாம் நடிக்க முடியாது'ன்னு நான் சொன்னேன்..!''



''அப்புறம்''

''நான் பணத்துக்கு மசியலைன்னு தெரிஞ்சதும் என்னை மிரட்ட ஆரம்பிச்சார் அந்த நபர். 'பணத்தை வாங்கிகிட்டு ஒழுங்காய் நான் சொல்றபடி நடிச்சு ஒத்துழைப்புக் கொடு... இல்லேன்னா நீ உயிரோடு இருக்க முடியாது'ன்னார். நான் பயந்துட்டேன். சொன்னபடி அந்த ஆள் பண்ணக் கூடியவர்ங்கிறதையும் புரிஞ்சுகிட்டேன். ஹாஸ்பிட்டல்ல இருக்கிற நந்தா செத்துப் போகப் போகிற ஆள்தானேன்னு நினைச்சு பணத்தை வாங்கிட்டேன்...''

''அவங்க சொன்னபடி நடிச்சும் காட்டிட்டே!''

''ஆமா ஸார்...''

''எங்களுக்கு உண்மை தெரிஞ்சதும் தப்பிச்சு ஓடின நீ மறுபடியும் ஏன் வந்தே...?''

''நான் சுகிர்தா இல்லைன்ற உண்மை வெளியானதும் போலீஸ்ல மாட்டிக்குவோமேன்னு பயந்து ஓடினேன். பாதி தூரம் போனதும்தான் பயம் வந்தது. போலீஸைக் காட்டிலும் அந்த நபர் ஆபத்தானவன்னு புரிஞ்சது. உண்மை வெளியே வந்துட்ட காரணத்தால் அந்த ஆள் என்னை உயிரோடு விட்டு வைக்கமாட்டான்னு அடி மனசுல ஒரு பயம் வந்தது. அதான் உங்ககிட்டேயே வந்துட்டேன்...''

''இப்ப நீ சொன்னதெல்லாம் தண்ணி கலக்காத பால்தானே?''

''முழு உண்மை ஸார். நான் சொன்ன பொய்க்காக என்னைக் கைது பண்ணுங்க. போலீஸ் லாக்கப்பில் போடுங்க. என்னோட உயிர்க்கு எந்த ஆபத்தும் இல்லாமே நான் நிம்மதியாய் லாக்கப்பில் இருப்பேன்...''

''சரி...நட...''

''எங்கே ஸார்...?''

''உன் வீட்டுக்குப் போலாம்.''

''போய்...?''

''அந்த நபர் கொடுத்த பத்து லட்ச ரூபாய் இப்ப உன்கிட்டதானே இருக்கு..?''

''ஆமா...ஸார்.''

''அந்தப் பணத்தை எங்கே வெச்சிருக்கே?''

''வீட்லதான்...''

''வந்து காட்டு...''

# 10

தங்கம் விலை உயரலாம் - பாதிப்பில்லை.

டி.வி. விலை உயரலாம் - பொறுத்துக் கொள்ளலாம்.

கார் விலை ஏறலாம் - சகித்துக் கொள்ளலாம்.

வீடு மனை விலை ஏறலாம் - சமாளித்துக் கொள்ளலாம்.

அரிசி, பருப்பு, எண்ணெய் விலை ஆகாயத்துக்கு போகலாமா?

விலைவாசி உயர்வை எந்த ஒரு நாடும் தன் கட்டுக்குள் வைக்க வேண்டும். இல்லாவிட்டால் அதன் விளைவுகள் மிகவும் விபரீதமாய் இருக்கும்.

இப்படிக்கு
**ஓர் இந்தியன்.**

கமிஷனர் அந்தக் கடித வரிகளை பதறுகிற இதயத்தோடு படிக்க ஆரம்பித்தார்.

கமிஷனர் ஸார்!

போலீஸைப் பார்த்து பயப்படும் (அது தேவையில்லாத பயம் என்று நீங்கள் சொன்னாலும் கூட) இந்த இந்திய குடிமகன்களில் நானும் ஒருவன். எனவேதான் எனக்குத் தெரிந்த உண்மையைச் சொல்ல இப்படி ஒரு கடிதம். நீங்கள் உங்கள் மாமனாரும் - பிரபல பத்திரிக்கையான 'இன்றைய இந்தியா'வின் ஆசிரியருமான கதிர்மதியோனைக் காணோம் என்று ரகசியமான முறையில் தேடிக் கொண்டு இருக்கிறீர்கள். அவர் எங்கே போனார் என்ன ஆனார் என்று எனக்குத் தெரியாது. ஆனால் திங்கட்கிழமை ராத்திரி கன்னிமாரா ஹோட்டலில் என்ன நடந்தது என்று எனக்குத் தெரியும். எனக்கு 'இன்றைய இந்தியா' பத்திரிகையைப் பிடிக்கும். அதில் வரும் கட்டுரைகளும் பிடிக்கும். அந்தப் பத்திரிக்கையின் ஆசிரியர் கதிர்மதியோனை போட்டோவில் மட்டுமே பார்த்து இருக்கின்றேன். அன்றைக்கு அவரை ஹோட்டல் கன்னிமாராவின் ரிசப்ஷனில் பார்த்ததும் எனக்குள் ஓர் ஆச்சர்யம். அவரைப் பார்த்துப் பேசப் பக்கத்தில் போனேன்.



அதற்குள் வேறு நபர் பக்கத்தில் வந்தார். இருவரும் பக்கம் பக்கமாய் உட்கார்ந்து பேச ஆரம்பித்தார்கள். அவர்கள் பேசி முடிக்கட்டும் என்று நான் தள்ளி நின்றிருந்தேன். இருவரும் அரைமணி நேரத்துக்கும் மேலாய் மும்முரமாய் பேசிக் கொண்டிருந்தார்கள். அவர்கள் பேசும் பேச்சு என் காதுகளில் விழவில்லையென்றாலும் ஆசிரியர் கதிர்மதியோன் ஏதோ பிரச்சனையில் இருக்கிறார் என்பது மட்டும் புரிந்தது. அந்த நபரிடம் மன்னிப்பு கேட்கும் தோரணையில் அல்லது கெஞ்சும் தோரணையில் பேசிக் கொண்டிருந்தார். ஒரு கட்டத்தில் அந்த நபரின் கைகளைப் பிடித்து கண்களில் ஒற்றிக் கொண்டார். இதையெல்லாம் பார்த்துக் கொண்டிருந்த எனக்கு தூக்கிவாரிப் போட்டது. இந்த மனிதர் அந்த நபர்க்கு ஏன் இப்படி பயப்படுகிறார் என்று நான் யோசித்துக் கொண்டிருக்கும்போதே இருவரும் சோபாவை விட்டு எழுந்தார்கள். கதிர்மதியோனின் முகம் அந்த ஏ.சி. ஹாலிலும் வியர்த்துப் போயிருந்தது. இருவரும் வரவேற்பறையை விட்டு வெளியேறி போர்டிகோவில் நின்றிருந்த ஒரு காரில் ஏறிப் புறப்பட்டுப் போனார் கள். நானும் அவர்களுக்குள் என்ன பிரச்னையோ என்று நினைத்து பிறகு அதை மறந்துவிட்டு நான் வீட்டுக்குப் போய்விட்டேன். மறுநாள் செவ்வாய்க் கிழமை ராத்திரி ஹோட்டலுக்குப் போன போது பாரில் இருந்த இரண்டு பேரர்கள் காணாமல் போன கதிர்மதியோனைப் பற்றியும் அது சம்பந்தமாய் ஹோட்டலில் நடந்த போலீஸ் விசாரணையைப் பற்றியும் பேசிக் கொண்டு இருந்ததைக் கேட்டு அதிர்ந்து போனேன். உடனடியாய் உங்களை நேரில் சந்தித்து நடந்த விபரத்தை சொல்லலாம் என்று நினைத்தேன். துணிச்சல் வரவில்லை. நாளை ஏதாவது பிரச்னை என்றால் ஸ்டேஷனுக்கும் கோர்ட்டுக்கும் என்னைக் கூப்பிட்டு கூப்பிட்டே என் ஆயுள் நாட்களில் பாதியைக் கரைத்து விடுவார்கள் என்று பயந்து போய்த்தான் இந்தக் கடிதத்தை அனுப்பி யுள்ளேன். கதிர்மதியோன் பேசிக்கொண்டிருந்த அந்த நபர்க்கு வயது நாற்பது இருக்கலாம். நல்ல உயரம். சிவப்பு நிறம். வழுக்கைத்தலை. கண்களுக்கு குளிர் கண்ணாடி போட்டிருந்தார்.

இத்துடன் விடைபெறுகிறேன்.

(எனக்குத் தெரிந்த உண்மையைச் சொல்லிவிட்ட நிம்மதியோடு.)

கமிஷனர் அந்தக் கடிதத்தை முழுமையாய்ப் படித்துவிட்டு விவேக்கைத் திரும்பிப் பார்க்க, விவேக் கீழே கிடந்த அந்த இரண்டு ஃப்ளாக்ஸ் போர்டு களையும் தலையை ஒருவிதமாக சாய்த்துப் பார்த்துக் கொண்டிருந்தான்.

"மிஸ்டர் விவேக்..."

"ஸார்..."

"இந்த லெட்டரைக் கொஞ்சம் கோ-த்ரு பண்ணுங்க."

விவேக் அந்த லெட்டரை வாங்கிப் படித்து விட்டு கமிஷனரைப் பார்த்தான்.

"ஸார்... உங்க மாமனார் கன்னிமாரா ஹோட்டலுக்குப் போய் சந்திச்ச அந்த நபர் யாராயிருக்கும்னு நினைக்கிறீங்க?"

"நாற்பது வயது, வழுக்கைத் தலை, நல்ல உயரம், சிவப்பு நிறம் - இந்த அடையாளங்களோடு யார்னு நானும் யோசனை பண்ணிட்டிருக்கேன். பத்திரிகை ஆபீஸில் வேலை பார்க்கிற ஊழியர்களை என்கொயரி பண்ணினால் அந்த நபர் யார் என்கிற விபரம் ஒருவேளை தெரிய வரலாம்." கமிஷனர் சொல்லிவிட்டு விவேக்கைப் பார்க்க, அவன் மறுபடியும் தலையை சாய்த்து அந்த ஃப்ளாக்ஸ் போர்டுகளையே பார்த்துக் கொண்டிருந்தான்.

கமிஷனர் ஆச்சர்யப்பட்டார்.

"என்ன மிஸ்டர் விவேக்... அந்த போர்டுகளை அவ்வளவு கஷ்டப்பட்டு ஒரு மாதிரியாய் சாய்ந்து பார்த்துட்டிருக்கீங்க?"

"ஸார்... இந்த இடத்துல நின்னு தலையைக் கொஞ்சம் சாய்த்துப் பார்த்தால் போர்டில் எழுதப்பட்டு இருக்கிற டெலிபோன் எண்களில் சில எண்கள் என்னோட பார்வைக்கு கொஞ்சம் வித்தியாசமாய் தெரியுது. அது என்னோட பார்வைக்குத்தான் அப்படி தெரியுதான்னு தெரியலை. நீங்க இந்த இடத்துல நின்னு பாருங்க ஸார்..."

விவேக் சொன்ன இடத்தில் கமிஷனர் போய் நின்று தலையை 45 டிகிரி கோணத்தில் வைத்து சாய்வாய்ப் பார்த்தார். சில விநாடிகள் பார்த்துக் கொண்டு இருந்துவிட்டு மெல்லத் தலையை ஆட்டினார்.

"எஸ்... நீங்க சொன்னது சரிதான்... மிஸ்டர் விவேக்! முதல் ஃப்ளாக்ஸ் போர்டிலும் சரி; இரண்டாவது



ஃப்ளாக்ஸ் போர்டிலும் சரி; சில எண்கள் மட்டும் ஃப்ளோரஸண்ட் டிஜிட்டல்ஸ் மாதிரி தெரியுது."

"எனக்கும் அப்படித்தான் தெரிஞ்சது ஸார். அந்தக் குறிப்பிட்ட எழுத்துக்கள் மட்டும் ஏன் பௌடர் பூசினது போல் மின்னணும்?"

"ஃப்ளாக்ஸ் போர்டு தயாரிக்கும்போது அது எதேச்சையாய் உண்டானதா... இல்லை வேண்டுமென்றே உண்டாக்கப்பட்டதா...?"

"ஸார்! அந்த நெம்பர்களை மட்டும் செலக்ட் பண்ணி எழுதிப் பார்த்துடலாமா...?"

"ம்... பார்த்துடலாம். கொலையாளியோட நோக்கம் போலீஸை டார்ச்சர் பண்றதுதான்... இந்த ஃப்ளோரஸண்ட் நெம்பர்கள்ல என்ன விளையாட்டு இருக்குதுன்னு பார்த்துடலாம்."

விவேக் ஒரு பேப்பரையும் பேனாவையும் எடுத்துக் கொண்டான். முதல் ப்ளாக்ஸ் போர்டை சாய்வாய்ப் பார்த்தான். சென்னைக்குரிய டெலிபோன் எண்களில் 9, 9 மின்னியது. அடுத்து கோவை எண்ணில் 4, 4 மின்னியது. பிறகு வந்த மதுரை எண்ணில் 9, 3 மின்னியது. சேலம் எண்ணில் 1, 5ம் நெல்லை எண்ணில் ஒரே ஒரு எண் '6' மட்டும் மின்னியது.

எல்லா எண்களையும் வரிசைக் கிரமமாய் எழுதினான் விவேக். 994493156.

"ஸார்... மொத்தம் பத்து எண்கள். இதுவே ஒரு செல்போன் நெம்பர் மாதிரி இருக்கு..."

அந்த நெம்பரை வாங்கிப் பார்த்த கமிஷனர் அதிர்ந்து போனவராய் நிமிர்ந்தார்.

"விவேக்... இது... இது..."

"என்ன... ஸார்...?"

"இது என் மாமனார் கதிர்மதியோனின் செல்போன் நெம்பர்..."

"ஐஸிட்... ஸார்...?"

"எஸ்..."

"அப்படீன்னா அந்த ஃப்ளாக்ஸ் போர்டில் இருக்கிற கண்ணுக்குத் தெரிகிற அந்த அஞ்சு நெம்பரும் டம்மி. ப்ளோரஸண்ட்ல மின்ற அந்த எண்களுக்கு உரிய நபர்தான் கொலையாளியோட குறி...?"

"அப்படித்தான் தெரியுது."

"ரெண்டாவது ஃப்ளாக்ஸ் போர்டில் இருக்கிற டெலிபோன் எண்களில் எது எது ஃப்ளோரஸண்ட்னு பாருங்க..."

"பெங்களூர் எண்ணில் 9 - கொல்கொத்தா

எண்ணில் 7, 8 - கண்ணனூர் எண்ணில் 7, 7 - மும்பை எண்ணில் 8, 3 - ஹைதராபாத் எண்ணில் 9, 6, 3."

எல்லா எண்களையும் எழுதிப் பார்த்தான் விவேக். 9787783963.

"இது யாரோட நெம்பர்னு தெரியலையே?"

"விவேக்! உங்க செல்போன்ல இந்த நெம்பர்க்கு ட்ரை பண்ணிப் பாருங்க... இது சென்னை நெம்பர்தான்!"

விவேக் தன் செல்போனில் அந்த எண்களை அழுத்தி எடுத்தான். ரிங் போய் குரல் கேட்டது. பெண் குரல்.

"யாரு...?"

"போலீஸ் க்ரைம் ப்ராஞ்சிலிருந்து பேசறோம். 9 7 8 7 7 8 3 9 6 3 இது உங்க செல்போன் நெம்பர்தானே...?"

[redacted]



முத்துகிருஷ்ணன் பெரிய பதவியில் இருக்கிற நபர். அவரோட பேரையும் செல்போன் நெம்பரையும் சில விரோதிகள் மிஸ்யூஸ் பண்ண வாய்ப்பு இருக்கு. ...ப...த..ப உங்க கணவர் எத்தனை மணிக்கு கும்பகோணம் புறப்பட்டுப் போனார்?"

"காலையில் ஏழு மணிக்கு."

"காரா?"

"இல்லை... ட்ரெய்ன்."

"கடைசியாய் உங்களுக்கு எப்ப போன் பண்ணினார்?"

"எக்மோர் ஸ்டேஷன் போய்ச் சேர்ந்ததும் போன் பண்ணினார். அதுக்கப்புறம் போன் பண்ணலை."

"நீங்க போன் பண்ணினீங்களா?"

"ம்... பண்ணினேன்... போனை ஸ்விட்ச் ஆஃப் பண்ணியிருந்தார்."

"கடைசியாய் எப்ப போன் பண்ணீங்க?"

[redacted]

## 11

நம் இந்தியர்கள் நல்லவர்கள்; கடும் உழைப்பாளிகள். கிரிக்கெட்டில் இந்தியா தோற்பதைக் கூட தாங்கிக் கொள்ளாமல் தற்கொலை செய்து கொள்ளும் அளவுக்கு தேசப்பற்று மிக்கவர்கள். தகவல் தொழில் நுட்ப அறிவில் அமெரிக்கர்களோடும் ஜப்பானியர்களோடும் போட்டி போடுபவர்கள். மனிதாபிமானம் மிக்கவர்கள். பக்கத்து வீட்டுக்காரர்களிடம் பாசத்தோடு பழகுபவர்கள். இந்த நல்ல குணங்கள் எல்லாம் அவன் சார்ந்து இருக்கும் ஜாதியையும் மதத்தையும் மறந்து இருக்கும்போதுதான். யானைக்கு மதம் பிடிக்காதவரை அது ஒரு சாதுவான மிருகம். தும்பிக்கையை நம் தலையில் வைத்து ஆசிர்வாதம் செய்யும். மதம் பிடித்துவிட்டால்...? மதங்கள் இல்லாத இந்தியா எப்போது உருவாகும்?

இப்படிக்கு,
**ஓர் இந்தியன்.**

பெட்டிக்கடைகளின் வாசல்களில் காற்றுக்குப் படபடத்த நாளிதழ்களின் போஸ்டர்களில் காவல்துறையைக் காயப்படுத்தும் வாசகங்கள் வழியில் போவோர் வருவோரின் பார்வைகளை பதம் பார்த்தன.

**ஃப்ளாக்ஸ் போர்டு பயங்கரம்.**

**காணாமல் போன கதிர்மதியோன், முத்து கிருஷ்ணன்**

**இவர்களின் கதி என்ன?**

**கையைப் பிசைகிறது காவல்துறை.**

**செம்பரம்பாக்கம் ஏரியில் மிதக்கும்**

**இரண்டு அடையாளம் தெரியாத மனித உடல்கள்.**

விவேக் காரை ஓட்டிக் கொண்டிருக்க விஷ்ணு ஸ்டால் போஸ்டர்களைப் படித்துக் கொண்டே வந்தான். கோபம் கண்களில் மோதியது.

"பாஸ்..."

"ம்..."

"போலீஸ் டிபார்ட்மெண்ட்டை கேலி பண்றதுன்னா இந்தப் பத்திரிக்கைக்காரர்களுக்கும் சரி;



சினிமாக்காரங்களுக்கும் சரி திருப்பதி லட்டையும் திருநெல்வேலி அல்வாவையும் மிக்ஸ்பண்ணி சாப்பிடற மாதிரி. காவல்துறை கையைப் பிசைகிறதாம். இவனுகதான் வந்து பார்த்தாங்க..."

"விஷ்ணு...! பத்திரிகைக்காரங்க கோபப்பட்றதுல நியாயம் இருக்கு. ஏன்னா சம்பவம் நடந்து ஒரு வாரமாயிருக்க. பத்திரிக்கை ஆசிரியர் கதிர்மதியோனையும், அந்த செகரிட்டரியேட் சி.ஏ.ஓ. முத்துகிருஷ்ணனையும் கண்டுபிடிக்க முடியலை. செம்பரம் பாக்கம் ஏரியில் மிதந்த இரண்டு மனித உடல்கள் ஹைலி டீ கம்போஸ்ட் ஸ்டேஜில் இருந்ததால இறந்தது அவங்கதானான்னு கன்ஃபர்ம் பண்ண போஸ்ட் மார்ட்டம் நடந்துகிட்டிருக்கு. அந்த பி.எம். ரிப்போர்ட் கைக்குக் கிடைச்ச பின்னாடிதான் மேற்கொண்டு என்ன மாதிரியான இன்வெஸ்டிகேஷனை மேற்கொள்றதுன்னு யோசிக்க வேண்டியிருக்கும்... ஃப்ளாக்ஸ் போர்டு வெச்சு அதுல டெலிபோன் நெம்பர்களை மென்ஷன் பண்ணி இதுல ஒருத்தரோட உயிர்க்கு ஆபத்துன்னு சொல்றதும் அந்த டெலிபோன் நெம்பர்களிலேயே ஒரு செல்போன் நெம்பரை ப்ளோரசண்ட் பண்ணி அந்த நெம்பர்க்குரிய நபரைக் கடத்திட்டு போறதும் ஒரு புதுமாதிரியான க்ரைம் இன்ஸிடெண்ட். மக்கள் மத்தியில் இதை பரபரப்பாய் கொண்டு போய் பணம் சம்பாதிக்க பத்திரிக்கைகள் முயற்சி பண்ணுது. இதை நாம தப்புன்னு சொல்ல முடியாது. இதே செய்தியை எத்தனை நாளைக்குத்தான் இதே பரபரப்போடு அவங்களால எழுத முடியும்? நாளைக்கு ஒரு ஹீரோ ஒரு ஹீரோயின் உதட்டைக் கடிச்சான்னு ஒரு செய்தி வரட்டும். இந்த ஃப்ளாக்ஸ் போர்டு மேட்டர் பத்திரிகை ஆபீஸ்களோட குப்பை கூடைக்குப் போயிடும்."

"ஓ. கே... பாஸ்! இப்ப நம்ம விஜயம் எந்த இடத்துக்கு...?"

"கதிர்மதியோனோட பத்திரிகை ஆபீஸுக்கு. அவரோட அறையைக் கொஞ்சம் கிளறிப் பார்க்கணும். கன்னிமாரா ஹோட்டலில் அவரை வந்து மீட் பண்ணி காரில் கூட்டிட்டுப் போன நபர் யாருங்கிற விபரம் தெரிந்தாலே போதும்... இருட்டாய் இருக்கிற இந்த கேஸுக்குள்ளே சின்னதாய் ஒரு வெளிச்சம் அடிக்கும்."

"அந்த **'இன்றைய இந்தியா'** பத்திரிகை ஆபீஸ் எங்கே இருக்கு பாஸ்...?"

"அசோக் நகர்ல..." விவேக் சொல்லிக் கொண்டு இருக்கும் போதே விஷ்ணுவின் செல்போன் ஒரு உரையாடலை ரிங்டோனாய் வெளியிட்டது.

"அமைதியான பொண்ணும் டைனோசரும் ஒரு விதத்துல ஒண்ணுதான்னு சொல்றியே...? எதை வெச்சு அப்படி சொல்றே?"

"ஏன்னா.. ரெண்டுமே இப்ப உலகத்துல இல்லே"

விவேக் விஷ்ணுவின் தலையில் தட்டினான். "எங்கிருந்துடா இது மாதிரியான மேட்டரையெல்லாம் பிடிக்கிறே..?"

"உங்க பாராட்டு விழாவை அப்புறம் நடத்துங்க பாஸ். இப்ப நான் பேசிடறேன்." செல்போனில் அழைப்பது யார் என்று பார்த்தான்.

ஃபாரன்ஸிக் டிபார்ட்மெண்ட்டிலிருந்து ராவ்.

"விஷ்ணு...!"

"சொல்லுங்க ராவ்..."

"அந்த அபி நந்தினி பெண் தன் வீட்டில் இருந்த பத்துலட்ச ரூபாயை உங்க கிட்ட கொடுத்தாள் இல்லையா?"

"ஆமா..."

"அந்த கரன்ஸியையெல்லாம் ஃபாரன்ஸிக்கில் வெச்சு ரசாயன பரிசோதனைக்கு உட்படுத்தி பார்த்தபோது அந்த பத்துலட்சத்துல ஒரு லட்சம் மட்டும் உண்மையான கரன்ஸி. மத்ததெல்லாம் அவ்வளவு சுலபத்துல அடையாளம் கண்டுபிடிக்க முடியாத அளவுக்கு நேர்த்தியாய் பிரிண்ட் செய்யப்பட்ட கள்ள நோட்டுக்கள்.

"அட! அக் மார்க் பாவிகளா!"

"என்னை ஏன் திட்றீங்க விஷ்ணு..?"

"ராவ்..! நான் உங்களைத் திட்டலை. அந்த நோட்டுக்களை பிரிண்ட் பண்ணின ஆட்களைத் தான் திட்டினேன்... இந்த விஷயத்தை ப்ரஸ்ஸுக்கு கொடுத்துடாதீங்க. நான் சொல்ற வரைக்கும் இந்த கரன்ஸி மேட்டரை அடைகாக்கணும்.

ஹை அஃபிஷியல்ஸ்கிட்டே நான் பேசிக்கிறேன்."

விஷ்ணு செல்போனை அணைத்து பாக்கெட்டில் போட்டுக் கொண்டே "பாஸ்" என்றான்.

"என்ன..! அபி நந்தினிகிட்ட இருந்த பத்துலட்ச ரூபாயும் கள்ள நோட்டுக்களா?"

"ஒரு லட்சத்தைத் தவிர..."

"அபி நந்தினி இப்போ எந்த சிறையில் இருக்கா?"

"புழல் சிறையில் பாஸ்... நேத்துப் போய் பார்த்துட்டு வந்தேன்..."

"எப்படியிருக்கா?"

"ரொம்ப சந்தோஷமாய் இருக்கா..! ஏதோ லேடீஸ்



ஹாஸ்டல்ல சேர்ந்துட்ட' மாதிரி 'லா..லா..லா' பாடிகிட்டே வந்தா. வாரத்துல மூணுநாள் நான் - வெஜ். முட்டை.. தினசரி மத்தியானம் சுண்டல் வேர்க்கடலைன்னு ஜெயில் ஏதோ பிக்னிக் ஸ்பாட் மாதிரி இருக்காம்... பாஸ்."

"அவளைப் பத்தி நீ என்ன நினைக்கிறே?"

"செம கட்டை பாஸ்..."

"டேய்..! அவளோட காரெக்டரைப் பத்தி கேட்டேன்."

"என் கண்ணுக்கு தெரியாத ஒண்ணைப்பத்தி எப்படி சொல்றது பாஸ்...! கொஞ்சம் பழகிப் பார்த்தாத்தான் தெரியும். ஜெயில்ல அதுக்கெல்லாம் அலவ் பண்ணமாட்டாங்களே பாஸ்...?"

"உனக்கு இடம் பார்த்து குடு போடணும்டா..!"

விவேக் சொல்லிக் கொண்டிருக்கும் போதே 'இன்றைய இந்தியா' பத்திரிகை அலுவலகத்தின் முகப்பு வாயிலை கார் தொட்டிருந்தது.

காரை ஓரமாய் பார்க் செய்துவிட்டு உள்ளே போனார்கள். பெயர்ப்பலகை தெரிந்தது.

**நாளைய இந்தியாவில்**
**ஏற்படப் போகும்**
**விபரீத விளைவுகளை**
**இன்றைக்கே**
**வாசனை பிடித்துச் சொல்லும் துணிச்சலான**
**ஒரே இதழ்.**
**'இன்றைய இந்தியா.'**
**படித்துவிட்டு அதை எடைக்குப் போடாதீர்கள்.**
**அதில் உள்ள செய்திகளை**
**உங்கள் மனத் தராசில்**
**எடைபோட்டுப் பாருங்கள்.**

பத்திரிகை அலுவலகத்தின் உள்ளே ஊழியர்கள் கவலை தோய்ந்த முகங்களோடு பணியாற்றிக் கொண்டிருந்தார்கள். ஆசிரியர் அறையில் உட்கார்ந்திருந்த கதிரமதியோனின் மகன் கங்காதரன் விவேக்கையும் விஷ்ணுவையும் பார்த்ததும் எழுந்து வந்தான்.

"வாங்க ஸார்..! அப்பாவைப் பத்தின தகவல் ஏதாவது டிபார்ட்மெண்ட்டுக்கு கிடைச்சதா..?"

"நாட்...யெட்..."

"டிபார்ட்மெண்ட் என்ன ஸார் பண்ணுது?"

"உங்க ஃபாதரையும், அந்த முத்து கிருஷ்ணன் என்கிற நபரையும் கண்டுபிடிக்க பத்து தனிப் படைகள் அமைக்கப்பட்டிருக்கு. கமிஷனர்க்கு இதுல தனிப்பட்ட கவனம் இருக்கு..."

"இருந்து என்ன ஸார் பிரயோஜனம்..? அப்பாவைப் பத்தின எந்த விதமான சந்தோஷத் தகவலும் வரலையே?"

"மிஸ்டர் கங்காதரன்..! உங்களுடைய கோபம் நியாயமானது. இந்த வழக்கு இருக்கிற சரியான திசைக்கு நாம் பயணம் செய்யணும்ன்னா சில தடயங்கள் வேணும். அந்த தடயங்களை சேகரம் பண்ணத்தான் உங்க பத்திரிகை ஆபீஸுக்கு வந்து இருக்கோம். அப்பாவோட ரூம் எது..?"

"இது தான் ஸார்"

"ரொம்பவும் சாதாரணமாயிருக்கு..."

"அப்பாவுக்கு எப்பவுமே பகட்டு, படாடோபம் பிடிக்காது. ஹி.. ஈஸ் வெரி சிம்பிள்"

அந்த அறைக்குள் நுழைந்தார்கள்.

ஒரு பழங்கால ரோஸ்வுட் மேஜை, நாற்காலி, அதன் பக்கத்தில் ஸ்டூல் ஒன்று போடப்பட்டு அதன் மேல் வைப்ப வைத்த மண்பானை.

மேஜையின் மேல் நிறைய புத்தகங்கள். ஓரத்தில் ஒரு தடிமனான பவுண்டன் பேனா. பக்கத்தில் இங்க் பாட்டில். சுவரில் ஒரு விநாயகர் போர்ட்ராயட்.

"அப்பாவுக்கு டயரி எழுதற பழக்கம் உண்டா?"

"உண்டு... தினமும் எழுதுவார். அதோ, அந்த ப்ளூ கலர் காலிகோ பைண்ட் டயரிதான் அப்பாவோட டயரி"

விவேக் அந்த டயரியை எடுத்துப் பார்த்தான். ஒரு பத்து நிமிஷம் புரட்டிப் பார்த்துக் கொண்டு இருந்துவிட்டு விஷ்ணுவிடம் கொடுத்தான்.

"விஷ்ணு..! நீ அப்படி ஓரமாய் உட்கார்ந்து நிதானமாய்ப் படிச்சிப் பார். நான் கங்காதரன்கிட்டே சின்னதாய் ஒரு கொய்ரி பண்ணிடறேன்."

விவேக் சொல்லிவிட்டு கங்காதரனிடம் வந்தான். "உங்க ஃபாதர் கதிர்மதியோனை ஹோட்டல் கன்னிமாராவில் யாரோ ஒரு நபர் வந்து பார்த்து பேசியதை இன்னொரு நபர் நோட் பண்ணியிருக்கார். அவர் போலீஸ் டிபார்ட்மெண்ட்டுக்கு எழுதிய லெட்டரில் உங்க ஃபாதரை வந்து பார்த்த நபரோட அடையாளங்களை எழுதியிருந்தார். அவர் சொன்ன அடையாளங்கள்படி அந்த நபர்க்கு வயது நாற்பது இருக்கலாம். நல்ல உயரம், சிவப்பு நிறம், வழுக்கைத்தலை. கண்ணுக்கு குளிர் கண்ணாடி



போட்டிருந்தார். இந்த அடையாளங்களோடு உங்களுக்கு பரிச்சயமான நபர் யாரையாவது தெரியுமா?"

"இல்ல ஸார்... நானும் யோசனை பண்ணிப் பார்த்து பார்த்து களைச்சுப் போயிட்டேன். அந்த அடையாளங்களில் யாரையும் எனக்குத் தெரியாது."

"அப்பாவுக்கு நெருக்கமான ஃப்ரண்ட்ஸ் யாரு?"

"அப்பாவுக்கு நண்பர்கள் வட்டாரமே கிடையாது. எல்லாப்பக்கமும் எதிரிகள்தான். அப்பா அடிக்கடி என்கிட்டே சொல்ற வார்த்தை எது தெரியுமா சார்..? **'நண்பனைநேசி. எதிரியையும் நேசி. நண்பன் உன் வெற்றிக்குத் துணையாய் இருப்பான். எதிரி உன் வெற்றிக்கு காரணமாய் இருப்பான்'** என்று சொல்வார்." கங்காதரன் சொல்லிக் கொண்டிருக்கும் போதே விவேக்கின் பார்வை பக்கத்து ஷெல்ப்பில் இருந்த அலுமினியத்தாலான அந்த சதுரமான டப்பாவுக்குப் போயிற்று.

"அது என்ன?"

"அது அப்பாவோட உயிர் ஸார்."

"உயிரா...?"

"ஆமா... ஸார்... அப்பா ஆபீஸுக்கு வந்துட்டா வெற்றிலைச் சீவலை மணிக்கு ஒரு தடவை போட்டுகிட்டே இருப்பார். வாய் சிவந்தால்தான் அவர்க்கு கற்பனையே ஓடும். அந்த வெற்றிலைச் சீவல் விவகாரமெல்லாம் ஆபீஸோடு சரி. வீட்டுக்கு வந்துட்டா அதைப் பத்தி நினைக்கக்கூட பார்க்க மாட்டார். இந்த டப்பாவையும் இங்கேயே வெச்சுட்டு வந்துடுவார்."

விவேக் ஷெல்ப்புக்கு நடந்து போய் அந்த டப்பாவை எடுத்தான். திறந்து பார்த்தான்.

உள்ளே வாடிப்போன வெற்றிலைகளும் ஒரு சிறிய பாலிதீன் பை நிறைய பாக்கு, சீவல்களும், சிறிய சுண்ணாம்பு டப்பியும் இருந்தது. வெற்றிலைப் பெட்டியை அசுவாரசியமாய் பார்த்துவிட்டு மறுபடியும் மூடப் போன விவேக்கின் பார்வை சட்டென்று நின்றது.

சுண்ணாம்பு டப்பிக்குள் எதையோ திணித்து வைத்த திணுசில் தெரிந்தது.

விவேக் அதன் மூடியைத் திறந்தான்.

உள்ளே ஒரு சிறிய காகிதத்துண்டு.

பிரித்துப் படித்தான்.

வெல்கம் விவேக்!

*பத்திரிகையாசிரியர் கதிர்மதியோன் காணாமல்*

போன விவகாரத்தில் உண்மைகளைக் கண்டுபிடிக்க நீ எப்படியும் அவருடைய அறைக்கு வந்து தடயங்களைத் தேடுவாய் என்று எனக்குத் தெரியும். ஒரு இன்ஸ்பெக்டரோ அஸிஸ்டண்ட் கமிஷனரோ இந்த அறையைச் சோதனை போட்டிருந்தால் அவர்களுடைய பார்வையிலும் இந்த வெற்றிலைச்சீவல் பெட்டி பட்டிருக்கும். அவர்களும் அந்தப் பெட்டியைத் திறந்து பார்த்து இருப்பார்கள். ஆனால் சுண்ணாம்பு டப்பியைத் திறந்து பார்க்கிற அளவுக்குப் போயிருக்க மாட்டார்கள். ஏனென்றால் அவர்கள் எல்லாம் நுனிப்புல் மேய்கிற ரகம். நீ அப்படியில்லை. அருகம்புல்லின் வேரையே பிடுங்கி ஆழம் பார்க்கிற ஆசாமி. உன்னுடைய திறமையைப் பற்றி எனக்குத் தெரியும். எத்தனையோ கேஸ்களை அக்கு வேறாய் ஆணி வேறாய்ப் பிரித்துப் போட்டு மேய்ந்தவன் நீ. ஆனால் இந்த கேஸை உன்னால் அசைத்துக்கூட பார்க்க முடியாது. தடயம் ஏதாவது கிடைக்குமா என்று தேடி இந்த அறைக்குள் வந்துவிட்ட உன்னை நான் ஏமாற்ற விரும்பவில்லை. எனவே நான் யார், எங்கே இருக்கிறேன் என்பதைக் கண்டுபிடிக்க ஒரு விடுகதையையும் டெலிபோன் எண்ணையும் கொடுத்து இருக்கிறேன். டெலிபோன் எண்களை வைத்துக் கொண்டு இப்படி ஒரு க்ரைம் விளையாட்டு விளையாடுவது எனக்குப் பிடித்தமானஒன்று.

**இதோ விடுகதை:** பணத்தோட்டத்திலிருந்து 50 கி.மீ பயணம் செய்தால் ஒரு பைத்தியக்கார மனிதன் உங்களுக்காக காத்துக்கொண்டிருப்பான். அவனைக் கிழ்கண்ட செல்போன் எண்ணில் தொடர்பு கொள்ளுங்கள். உண்மை தெரியும்.

**செல்போன் எண்:** 00000000000

**பின் குறிப்பு:** என்னடா! பதினோரு சைபர்களைப் போட்டுவிட்டு செல்போன் எண் என்று சொல்கிறானே என்று பார்க்கிறாயா? அந்த எண்களை லென்ஸ் வைத்து உன்னிப்பாகப் பார்த்தால் எண் என்ன என்பது தெரியும். இந்தத்தடயத்தை பயன்படுத்தி நான் யார் என்பதை நீ கண்டு பிடித்து விட்டால் 'யூ ஆர் க்ரேட்!' என்று கத்தி உன் கையைப் பிடித்து குலுக்கி வாழ்த்து சொல்லிவிட்டு போலீஸில் சரணடைய நான் தயார்.

இப்படிக்கு,
ஓர் இந்தியன்.



கங்காதரன் பக்கத்தில் வந்து குழப்ப முகத்தோடு நின்று "அது என்ன ஸார்... கையில் ஏதோ காகிதம் மாதிரி...?" என்று கேட்க விவேக் அதை அவனிடம் கொடுத்தான். படித்துப் பார்த்த கங்காதரனின் முகம் வெளிறியது.

"ஸார்..! இந்த அறைக்குள்ளே என்னைத் தவிர வேற யாரும் வரலை. அறையும் பூட்டியே இருந்தது. யார் எப்படி உள்ளே வந்தாங்கன்னு தெரியலை. இந்த பத்திரிகை ஆபீஸில் வேலை செய்யற யாரையும் ஒரு பர்சண்ட் கூட சந்தேகப்பட முடியாது. ஏன்னா எல்லாரும் அப்பா மேல உயிரையே வெச்சுட்டு இருக்கிறவங்க..."

விவேக் கையமர்த்தினான். "யூ...ஆர் கரெக்ட் கங்காதரன்..! என்னைப் பொறுத்த வரைக்கும் இந்த லெட்டரை சுண்ணாம்பு டப்பிக்குள்ளே இன்னிக்கோ நேத்திக்கோ வெச்சது கிடையாது. உங்க அப்பா கடத்தப்பட்ட அன்னிக்கே யாரோ இங்கே வந்து இந்த வேலையைப் பண்ணியிருக்காங்க. அந்த நபர்தான் எனக்கு சவால் விடுகிற பாணியில் இப்படியொரு தடயத்தைக் கொடுத்து இருக்கான்."

"ஸார்... அது தடயம் இல்லை. உளறல்... உங்களை இந்த கேஸிலிருந்து டைவர்ட் பண்ணுறதுக்காக என்னத்தையோ வாய்க்கு வந்ததை உளறிக் கொட்டியிருக்கான்."

"நான் அப்படி நினைக்கலை கங்காதரன்... அவனுடைய நோக்கம் தன்னை ஒரு கெட்டிக்கார கிரிமினல்ன்னு எஸ்டாபிலிஷ் பண்ணிக்கிறதுதான்! இந்த கேஸ்ல அவன் தடயம் கொடுத்தும் நான் தோற்கணும்ன்னு எதிர்பார்க்கிறான். அப்படி நான் தோற்றால் அது அவனுக்கு ஒரு பெரிய சந்தோஷத்தைக் கொடுக்கும்."

விஷ்ணு டயரியை படித்துமுடித்துவிட்டு எழுந்து வந்தான். "என்ன பாஸ்..! நீங்களாவது தோற்கிறதாவது..? நீங்க தோல்வியை முறைச்சுப் பார்த்தாலே போதும்; அது முந்நூறு தடவை காதைப் பிடிச்சுகிட்டு தோப்புக் கரணம் போடுமே?"

விவேக் புன்னகைத்தான்.

"இந்த தடவை நான் தோப்புக் கரணம் போடணும் போலிருக்கே?"

"என்ன பாஸ் சொல்றீங்க?"

"கதிர்மதியோனோட வெற்றிலைச் சீவல் பெட்டிக்குள்ளே இருந்த சுண்ணாம்பு டப்பிக்குள்ளே இந்த லெட்டர் இருந்தது. படிச்சுப்பாரு!"

விஷ்ணு வாங்கி படித்துப் பார்த்துவிட்டு "பாஸ்! இவன் ஒரு வில்லங்கம் பிடிச்ச ஆளாய் இருப்பான் போலிருக்கு. A ஃபார் ஆப்பிள் B ஃபார் பிஸ்கெட்னு சொல்றதுக்குப் பதிலாய் A ஃபார் ஆப்பிள் B ஃபார் BIG APPLE C ஃபார் சின்ன ஆப்பிள் D ஃபார் டபுள் ஆப்பிள் சொல்ற ரகம்.... இவன் கொடுத்தது தடயம் மாதிரியாய் இருக்கு? பணத் தோட்டமாம். அங்கேயிருந்து 50 கிலோமீட்டர் பயணம் பண்ணினா ஒரு பைத்தியக்கார மனிதன் உங்களுக்காக காத்துகிட்டு இருப்பானாம் எதுக்கு... கடிச்சு வெக்கிறதுக்கா? போதாக குறைக்கு போன் நெம்பர் வேற. பதினோரு சைபர். இப்படியொரு போன் நெம்பர் நம்ம பூமியில் மட்டும் இல்லை. இந்த சூர்ய குடும்பத்திலேயே இருக்காது... இந்த பதினோரு சைபர்களையும் லென்ஸ் வேற வெச்சு பார்க்கணுமாம் லென்ஸ் வெச்சுப் பார்த்தா பதினோரு நம்பரும் பெரிசு பெரிசாத் தெரியும். அவ்வளவுதான்..!" என்றான்.

"விஷ்ணு..! அவன் கொடுத்து இருக்கிற தடயத்தை மேலோட்டமாய் படிச்சுப் பார்க்கும் போது ஏதோ பிதற்றல் மாதிரித்தான் தெரியும். அவன் சொல்லியிருக்கிற ஒவ்வொரு வார்த்தையையும் மூளைக்குள்ளே ஊறப்போடணும். அவன் தன்னை ஒரு அதி மேதவியாய்க் காட்டிக்க பிரியப்படறான் போலீஸுக்கு சவால்விட்டு ஜெயிக்கணும்ங்கிற துக்காக அந்த ஃப்ளாக்ஸ் போர்டு. இந்த கண்ணாம் பூச்சி லெட்டர் எல்லாமே!"

"பாஸ்...! நிஜமாவே இந்த தடயத்துல உங்களுக்கு ஏதாவது புரியுதா?"

"புரியலை."

"பின்னே எதுக்காக அந்த க்ரிமினலுக்கு கலைவாணர் அரங்கத்துல விழா எடுத்து கொண்டாடறீங்க..?"

"தைரியமா மோதறானே!"

"சரி! பதினோரு சைபர்களையும் லென்ஸ் வழியா பார்த்தீங்களா..?"

"நான் இன்னமும் பார்க்கலை... மொதல்ல பாரு..." சொன்ன விவேக் தன் பாக்கெட்டில் இருந்த பென்டார்ச்சை எடுத்து அதில் பொருத்தியிருந்த லென்ஸைப் பிரித்து விஷ்ணுவிடம் கொடுத்தான்.

விஷ்ணு லென்ஸை வாங்கி வலது கண்ணில் பொருத்திக் கொண்டு பார்த்தான்.

விவேக் கேட்டான்.

"என்ன... ஏதாவது தெரியுதா?"

"தெரியுது பாஸ்."

"என்ன தெரியுது?"



"என்னோட ஃப்ளாஷ் பேக்"

"ஃப்ளாஷ் பேக்கா..?"

"ஆமா... பாஸ்...! ஸ்கூல் டேஸ்ல நான் பரீட்சையில் வாங்கின மார்க்குகள் 'ஞாபகம் வருதே; ஞாபகம் வருதே!'ன்னு பாட்டு பாடுது. பாஸ்...! இந்த சைபர்களை வச்சுகிட்டு அவனோட செல்போனை கண்டுபிடிக்கிறதுக்குள்ளே நீங்களும் ரூபலா மேடமும் திருக்கடையூர்க்குப் போய் சஷ்டியப்த பூர்த்தி கொண்டாடிருவீங்க... எனக்கு தலையில் முன்னாடியோ பின்னாடியோ வழுக்கை விழுந்துடும்." விஷ்ணு சொல்லிக் கொண்டிருக்கும் போதே விவேக்கின் செல்போன் குரல் கொடுத்தது.

எடுத்துப் பார்த்தான்.

போலீஸ் கமிஷனர் பரத்வாஜ்.

பேசினார்.

"விவேக்! நிலைமை இன்னமும் விபரீதம்!"

"என்ன ஸார் சொல்றீங்க?"

"என்னோட மாமனார் கதிர்மதியோனும் செக்ரிட்டரியேட்டில் சி.ஏ.ஓ.வாய் இருக்கிற முத்து கிருஷ்ணனும் கடத்தப்பட்ட மாதிரி கோவையிலிருந்து பன்சிலால் என்கிற வைர வியாபாரியும், மதுரையிலிருந்து மீனாட்சி மார்பிள்ஸ் அண்ட் க்ரானைட் சேர்மன் செல்வபாண்டியனும், திருச்சியிலிருந்து புரோகா பில்டர்ஸ் உரிமையாளர் அமுதபாரதியும், சேலத்திலிருந்து ரியல் எஸ்டேட் தனபாலனும், பாண்டிச்சேரியிலிருந்து ஹோட்டல் சொர்ணா க்ரூப்ஸ் எம்.டி கிரிஸ்டோபரும் நேற்றைய இரவிலிருந்து காணாமே போயிருக்காங்க..."

விவேக் அதிர்ச்சியில் இருக்கும்போதே கமிஷனர் "இன்னொரு கொடுமையான செய்தி!" என்றார்.

"என்ன ஸார்?"

"பத்து நிமிஷத்துக்கு முந்தி என்னுடைய அலுவலக புகார் பெட்டிக்கு மேல் ஒரு சின்ன பார்சல் இருந்ததை சென்ட்ரி பார்த்துட்டு கொண்டு வந்து கொடுத்தார். பார்சல் மேல் எந்த அட்ரஸும் இல்லை. பாம் டிடெக்டர் மூலம் சோதனை செய்து பார்த்த பிறகு பார்சலைப் பிரித்தோம். உள்ளே 7 வெள்ளை சேலைகள் இருந்தது. கூடவே ஒரு லெட்டர். அதில் இந்த 7 சேலைகளையும் முறையே திருமதிகள் கதிர்மதியோன், முத்துகிருஷ்ணன், கோவையைச் சேர்ந்த திருமதி பன்சிலால், மதுரையைச் சேர்ந்த திருமதி செல்வ பாண்டியன், திருச்சியைச் சேர்ந்த திருமதி அமுதபாரதி, சேலத்தைச் சேர்ந்த திருமதி

தனபாலன். பாண்டிச்சேரியைச் சேர்ந்த திருமதி கிறிஸ்டோபர் ஆகியோர்க்கு கமிஷனர் பரத்வாஜ அவர்கள் கொடுத்து ஆறுதல் மொழிகள் கூறி அவர்களுடைய மனதைத் தேற்றும்படி கேட்டுக் கொள்கிறோம்ன்னு அந்த லெட்டர்ல எழுதியிருந் தாங்க. எதுக்காக இப்படி சில குறிப்பிட்ட பேரை மட்டும் கடத்தறாங்கன்னு தெரியலை. அவங்க மோட்டிவேஷனும் புரியலை. விவேக்! இந்த விபரீதத் துக்கு ஒரு முற்றுப் புள்ளி வைக்கணும். நீங்க உடனே புறப்பட்டு வந்து என்னைப் பார்க்க முடியுமா?"

"இதோ புறப்பட்டேன் ஸார்." விவேக் செல்போனை அணைக்க, பக்கத்தில் நின்றிருந்த விஷ்ணு கேட்டான்.

"என்ன பாஸ்..?"

"இதுவரைக்கும் ஏழு பேரைக் கடத்திட்டாங் களாம்."

"என்ன அநியாயம் பாஸ்... பன்றிக் காய்ச்சலால பாதிக்கப்பட்டவங்க ஸ்கோரை நம்ம ஃப்ளாக்ஸ் போர்டு ஆசாமிகள் பீட் பண்ணிடுவாங்க போலிருக்கே..!"

மறுபடியும் விவேக்கின் செல்போன் ரிங்டோனை வெளியிட்டது. இந்த முறை அழைத்தது டாக்டர். ஜி.ஹெச்சிலிருந்து பேசினார்.

"மிஸ்டர் விவேக்..! நீங்க ஹாஸ்பிடலுக்கு கொண்டு வந்து அட்மிட் பண்ணின அந்த விஷம் குடிச்ச ஆசாமிக்கு லேசாய் சுய உணர்வு வந்திருக்கு ஹிந்தியில் ரெண்டொரு வார்த்தை பேசினார். எனக்கு சரியாய் புரியலை. ஹிந்தி தெரிஞ்ச வேற யாரையாவது பேச வைக்கலாமான்னு யோசனை பண்ணினேன். அந்த நபர் சொல்லப் போகிற விஷயம் முக்கியமான விஷயமாய் இருந்துட்டா பின்னால ஏதாவது பிரச்னை வருமோன்னு பயந்துட்டு விட்டுட்டேன். நீங்க வர்றீங்களா..?"

"அவன் தன்னோட பேரைச் சொன்னானா?"

"ம்... சொன்னான். பேர் சதிர். ஏதோ ஒரு பேங்க்ல ஒர்க் பண்றானாம். சொந்த ஊர் டெல்லி. ஒரு மாசத்துக்கு முந்தி டெல்லியில் ராத்திரி சினிமா பார்த்துட்டு வரும்போது ஒரு கும்பலால் கடத்தப் பட்டானாம். அவன் பேசின ஹிந்தியில் இதுதான் எனக்குப் புரிஞ்சது..."

"என்னது..! ஒரு மாசத்துக்கு முந்தி கடத்தப்பட்டானா?"

"அப்படித்தான் சொன்னான்."

# 12

அவர்கள் நீதிபதிகளாய் இருந்தாலும் சரி; பல்கலைக்கழகங்களின் துணை வேந்தர்களாய் இருந்தாலும் சரி; உயர் போலீஸ் அதிகாரிகளாய் இருந்தாலும் சரி; அமைச்சர்களாய் இருந்தாலும் சரி; அரசாங்கத்தை ஏமாற்றி சொத்து சேர்க்கக் கூடாது. அப்படி சொத்து சேர்ப்பவர்கள் சொந்தத் தாயிடமே திருடும் திருடர்களைப் போன்றவர்கள்.

இப்படிக்கு
ஓர் இந்தியன்.

விவேக்கும் விஷ்ணுவும் ஜி.ஹெச். போய்ச் சேர்ந்து ஐ.ஸி. யூனிட்டில் இருந்த சதிர் என்கிற அந்த இளைஞனைப் பார்த்தபோது நல்ல சுய உணர்வு களோடு இருந்தான். விவேக் ஹிந்தியில் கேட்ட கேள்விக்கு தெளிவாக பதில் சொன்னான்.

"உனக்கு சொந்த ஊர் டெல்லி என்று சொன்னாய்...! டெல்லியில் எந்த இடம்? டெல்லி ப்ராப்பரா... இல்லை ... அவுட்டரா?"

"அவுட்டர்..! டெல்லியிலிருந்து இருபது கிலோ மீட்டர் தூரத்தில் உள்ள சோனாப்பூர். என்னுடைய அப்பாவும் அம்மாவும் சிறு வயதிலேயே இறந்து போய்விட்டதால் என்னுடைய சகோதரிதான் என்னை வளர்த்து ஆளாக்கினாள்."

"நீ டாக்டரிடம் பேசும்போது ஏதோ ஒரு பேங்கில் பணி புரிவதாக சொன்னாய். அது எந்த பேங்க்..?"

"பேங்க் ஆஃப் ஸ்விஸ்..."

"அது வெளிநாட்டு பேங்க் அல்லவா?"

"ஆமாம்..."

"அந்த வங்கியில் உனக்கு என்ன பொறுப்பு?"

"ஃபாரின் எக்சேஞ்ஜ்"

"உன்னை ஒரு மாதத்துக்கு முன்பு யாரோ கடத்தியதாக சொல்லியிருக்கிறாய். உன்னைக் கடத்தியது யார்..?"

"அவர்கள் யார் என்று எனக்குத் தெரியாது. ஒரு குழு மாதிரி இருந்தார்கள். தங்களை கால பைரவர்கள் என்று சொல்லிக் கொண்டார்கள்."

"சரி... உன்னை எதற்காக கடத்தினார்கள்?"

"சுவிஸ் நாட்டில் இருக்கும் வங்கிகளில் எந்த எ
இந்தியர் எவ்வளவு பணம் போட்டு வைத்
இருக்கிறார்கள் என்கிற விபரத்தை என்னிடம் இருந்
கேட்டுக் தெரிந்து கொள்வதற்காக..."

"உனக்கு அந்த விபரம் எல்லாம் தெரியுமா..?"

"அந்த விபரங்கள் தெரிந்த ஒரே நபர் நான்தா
அதுமட்டும் இல்லை. இந்தியர்களிடம் இருக்கு
கோடிக்கணக்கான கருப்பு பணத்தை சுவிஸ் நாட்டி
இருக்கும் வங்கிகளுக்கு கொண்டு போய் சேர்ப்பது
என் வேலைதான். அதனால்தான் கால பைரவர்க
என்கிற அந்த குழு என்னைக் கடத்திக் கொண்
போய் ஒரு வீட்டில் அடைத்து வைத்து என்ன
சித்ரவதை செய்து சில விபரங்கள் கேட்டார்கள்."

"என்ன விபரம்?"

"இந்தியாவில் உள்ள அரசியல்தலைவர்க
சினிமா நடிகர்கள், கிரிக்கெட் வீரர்க
தொழிலதிபர்கள் இவர்கள் யார் யாரெல்லாம் சுவி
பேங்க்குகளில் பணத்தைக் கொண்டு போ
கொட்டியிருக்கிறார்கள்? இதில் ஒரிஜனல் எத்தனை
பேர்... பினாமிகள் எத்தனை பேர் என்
விபரங்களைக் கேட்டார்கள். நான் முதலில் சொல்
மறுத்தேன். பிறகு அவர்கள் என் சகோதரியைய
அவளுடைய கணவரையும் கடத்திக் கொண்
வரப்போவதாக சொன்னதும் பயந்து போ
எல்லாவற்றையும் சொல்ல ஆரம்பித்தேன். தம்
நாட்டில் யார் யார் என்று கேட்டார்கள். சொன்னே
நான் சொன்ன தகவல்கள் எல்லாம் உண்மைதானா
என்று சரி பார்ப்பதற்காக என்னை அவர்க
தங்களோடு ஒரு மாத காலம் வைத்து இருந்தார்க
சென்ற வாரத்தில் ஒரு நாள் அவர்களிடம் இருந்
தப்பிக்க நான் ஒரு ராத்திரி வேளையில் முயற்
செய்தேன். அப்போது காவலுக்கு இருந்த ஒரு ந
என்னைத்தாக்க ஆரம்பித்தார். பதிலுக்கு நானும் தா
ஆரம்பித்தேன். இரண்டு பேர்க்கும் நட
சண்டையில் எதிர்பாராதவிதமாய் நான் தலையி
அடித்த ஒரு அடி அந்த நபரின் உயிரை
பறித்துவிட்டது. தங்கள் குழுவில் இருந்த ஒருவ
இறந்து விட்டதால் அவர்கள் என்னைத் தண்டி
நினைத்தார்கள், நான் சுதிர் என்பது தெரியாம
இருப்பதற்காக என் மார்பில் பச்சை குத்தியிரு
பெயரை தீயினால் என் மார்புச்சதையைப் பொசு
அந்தப் பெயரை அழித்தார்கள். கடந்த ஒரு ம
காலமாய் சரியான உணவு இல்லாத காரணத்தால் எ



உடல் இளைத்துப் போய் எனக்கே என்னை அடையாளம் தெரியாத நிலைமை ஏற்பட்டு இருந்தது. தாடியும் மீசையும் முளைத்த முகம் என்னை வேறுபடுத்திக் காட்டியது. இந்த தோற்ற மாற்றத்தை அவர்கள் பயன்படுத்திக் கொண்டார்கள். எனக்கு நந்தா என்று பெயர் சூட்டினார்கள். எனக்கு ஒரு காதலியை உண்டாக்கினார்கள். ஒரே ராத்திரியில் ஏகப்பட்ட கடிதங்களை எழுதி அதை ஒரு சட்டை போல் மாற்றி எனக்கு அணிவித்து வலுக்கட்டாயமாய் என் வாயில் விஷத்தை ஊற்றி குடிக்க வைத்து என்னைக் குற்றுயிராக்கி விடிகாலை நேரத்தில் யாரும் இல்லாத போது அண்ணாசாலையின் டிவைடர் மேல் கிடத்திவிட்டு போய்விட்டார்கள். இறந்தது சுதிர்தான் என்கிற உண்மை வெளியுலகத்துக்கு தெரியக்கூடாது என்பது அவர்கள் எண்ணம். சாலையில் நடந்து போகிறவர்கள் யாராவது என் பக்கத்தில் வரமாட்டார்களா என்று பரிதவித்துக் கொண்டிருந்தேன். நான் குடித்துவிட்டு போதையில் விழுந்து கிடப்பதாக நினைத்து யாரும் என் பக்கத்தில் வரவில்லை. ஒருவகையில் எனக்கும் இந்த தண்டனை தேவைதான். ஏனென்றால் இந்தியாவில் உள்ள ஊழல் பணத்தையெல்லாம் சுவிஸ் வங்கிக்கு கொண்டு போக நானும் ஒரு காரணகர்த்தாவாய் இருந்தேன்."

சுதிர் சொல்லிக் கொண்டிருக்கும் போதே-

ஐ.ஸி.யூனிட்டின் கதவைத் திறந்து கொண்டு திடும் என்று ஒருவன் உள்ளே நுழைந்தான்.

உயரமாய் இருந்தான்.

முகத்தில் பன்றிக் காய்ச்சல் தடுப்பு முகக் கவசமான பச்சை நிற மாஸ்கை அணிந்து இருந்தான்.

கையில் துப்பாக்கி.

"பாஸ்... அங்க பாருங்க..." விஷ்ணு சொல்லிக் கொண்டு இருக்கும்போதே அவன் துப்பாக்கியை சுதிர்க்கு நேராய் வைத்து ட்ரிக்கரை அழுத்தினான்.

அந்த சைலன்ஸர் துப்பாக்கி சத்தம் இல்லாமல் தோட்டாவை உமிழ்ந்த விநாடி-

விவேக் விலர்கள் பொருத்தப்பட்ட சுதிரின் கட்டிலை ஓங்கி உதைத்தான். ஒரு மைக்ரோ விநாடியில் கட்டில் வேகமாய் உருண்டு மறுபக்க சுவர்க்குப் போய் முட்டிக்கொண்டு நிற்க, தோட்டா எதிர்ப்புற ஜன்னலின் கண்ணாடியில் தீபாவளி கொண்டாடியது.

கண்ணாடிச் சில்லுகள் அறை முழுவதும் சிதறிக்

கொண்டு இருக்க, துப்பாக்கிப் பேர்வழி மறுபடியு சுடுவதற்கு அவகாசம் இல்லை என்று புரிந் கொண்டு கதவுக்கு வெளியே மின்னலாய் பாய்ந்தான்.

விவேக் துரத்தினான்.

## 13

நாள் ஒன்றுக்கு ரூ 1 லட்சம் வாடகையில் தங்கியிருந்த 2 மத்திய மந்திரிகள் நிதி மந்திரியின் அதிரடி நடவடிக்கையால் தங்கியிருந்த ஸ்டா ஹோட்டலை காலி செய்தார்கள். நாடு இப்போ போதிய மழையின்மை காரணமாய் வறட்சியில் சிக்கி விலைவாசிகள் உயர்ந்துள்ள நிலையில் நாட்டின் நலன் பேணவேண்டிய மத்திய மந்திரிக இருவரும் அரசுக்கு சொந்தமான விருந்தின மாளிகையில் தங்காமல் நட்சத்திர ஹோட்டல்களி நாள் ஒன்றுக்கு ரூ 1 லட்சம் வாடகையில் தங்கியிருந்தது என்னைப் போன்ற சாதாரண இந்தி குடிமகன்களின் தலையில் இடி இறங்கியது போன் செய்தியாகும்.

இப்படிக்கு,

• ஓர் இந்திய குடிமகன்

ஹாஸ்பிட்டலின் வராந்தாவில் அந்த துப்பாக்கிப் பேர் வழி ஓடிய ஓட்டம் விவேக்கை பிரமிக்க வைத்தது.

வராந்தாவின் எதிர்திசையில் வந்து கொண்டிருந் எந்த ஒரு நோயாளியின் மீதோ, நர்ஸின் மீதே சுவரோரமாய் நிறுத்தி வைக்கப்பட்டு இருந் ஸ்ட்ரெச்சர்கள் மீதோ மோதிக் கொள்ளாமல் லாவகமாய் ஓடிக்கொண்டிருந்தான். விவேக்கு மூச்சை அடக்கிக் கொண்டு அதே வேகத்தி பாய்ந்தான்.

ஐ.சி. யூனிட்டைக் கடந்து பொது வார் வரும்வரை ஒரு சிறுத்தையைப் போல் ஓ கொண்டிருந்தவன் பிரசவ வார்டில் திரும்பிய போ சுவரோரமாய் நிறுத்தியிருந்த காலியான ஆக்ஸிஜ சிலிண்டர் மேல் மோதிக் கொண்டு கீ



உருண்டான்.

முழங்கால் சிப்பியில் தீப்பற்றிக் கொண்டதைப் போல் வலி. எழுந்து மறுபடியும் ஓட முயன்றவனின் மேல் விவேக் ஒரு நேர்க்கோடு மாதிரி பாய்ந்தான். துப்பாக்கி பேர்வழி தன்கையில் இருந்த துப்பாக்கியை உபயோகிக்க முயல விவேக்கின் வலதுகை முஷ்டி எஃகால் செய்த ஒரு ஆயுதம் போல் மாறி அவனுடைய முகத்தின் மையப்பகுதியை நொறுக்கியது. அதே விநாடி விவேக்கின் இடது கால் ஷூ அவனுடைய அடி வயிற்றின் அடிவாரத்தில் பாய்ந்து உயிர்நிலையில் வலி தெறித்தது.

"அ...ம்...மா..."

மூக்கில் ரத்தம் கொட்ட, இரண்டு கைகளாலும் வயிற்றைப் பற்றிக் கொண்டு ஒரு பாக்குப் பொட்டலம் போல் மடிந்து விழுந்தான்.

விவேக் வியர்த்து வழிந்தபடி கொஞ்சம் தள்ளி விழுந்து இருந்த துப்பாக்கியை எடுத்து அவன் நெற்றியில் பதித்தான்.

"யார்ரா... நீ..?"

"த...த...தண்ணி..!"

"தர்றேன்... மொதல்ல... நீ யார்ன்னு சொல்லு"

"த...த...தண்ணி..!"

விவேக் சுற்றும் முற்றும் பார்த்தான். வராந்தாவின் மையத்தில் அந்த 'ப்யூர் இட்' அக்வா கார்டு டிஸ்போஸல் டம்ளர்களோடு தெரிந்தது.

"எழுந்து ஓட முயற்சி பண்ணினா நீ கொண்டு வந்த துப்பாக்கியே உனக்கு எமனாய் மாறிடும். இருந்த இடத்தைவிட்டு அசையக் கூடாது..!"

"த...த...தண்ணி...தண்ணி..." என்று அவன் அரற்றிக் கொண்டிருக்க விவேக் அவனைத் துப்பாக்கியால் குறி பார்த்தபடி 'ப்யூர் இட்' அக்வா கார்டை நோக்கி மெல்ல நடந்தான். 'ப்யூர் இட்' டை நெருங்கி ஒரு டிஸ்போஸல் டம்ளரை எடுத்து தண்ணீரைப் பிடிக்க முயன்ற விநாடி-

கீழே படுத்துக் கிடந்தவன் குபீரென்று எழுந்தான். பக்கவாட்டில் இருந்த பேராபட் சுவரை கண்ணிமைக்கும் நேரத்தில் தாண்டிக் குதித்து ஓட ஆரம்பித்தான்.

ஹாஸ்பிட்டலில் இருந்த நோயாளிகளும், டாக்டர்களும், நர்ஸ்களும் ஆங்காங்கே கும்பலாய் நின்று கொண்டு வேடிக்கை பார்க்க அவன் குற்றுச்

செடிகளைத் தாண்டிக் கொண்டு ஜி.ஹெச்சின் பின்புறத்தை நோக்கி ஓட ஆரம்பித்தான்.

விவேக் ஓடிக்கொண்டிருந்தவனின் முழங்கால்களுக்குக் கீழே குறி பார்க்க முயன்று தோற்றுக் கொண்டிருக்க, பின்னாலிருந்து விஷ்ணுவின் குரல் கேட்டது.

''பாஸ்... என்னாச்சு?''

''விஷ்ணு...! அவனைப் பிடி... முழங்காலில் அவனுக்கு அடிபட்டிருக்கு... ரொம்பதூரம் அவனால ஓட முடியாது. அவன் நமக்கு வேணும். போய் மடக்கு..!''

''இதோ பாஸ்!'' விஷ்ணு அவனைப் பார்வையில் வாங்கிக் கொண்டு ஓடினான். எதிரே நின்றவர்கள், வந்து கொண்டிருந்தவர்கள் சட்சட்டென்று விலகி இடைவெளி ஏற்படுத்திக் கொடுக்க விஷ்ணு அஞ்சு ஜார்ஜை நினைத்துக் கொண்டு ஓடினான்.

ஒரு நிமிஷ ஓட்டத்துக்குப் பிறகு ஹாஸ்பிட்டலின் பின் பக்கம் இருந்த மார்ச்சுவரி அறை பார்வைக்கு கிடைத்தது. அதனைக் கடந்து ஓடிய அவன் சட்டென்று எதிர்பாராத விநாடியில் அங்கேயிருந்த ட்ரான்ஸ் ஃபார்மர் மேல் ஏற ஆரம்பித்தான்.

விஷ்ணு ஓடி வந்து ட்ரான்ஸ் ஃபார்மரை நெருங்குவதற்குள் அவன் உச்சியில் இருந்தான்

கத்தினான் விஷ்ணு.

''நோ..!.. கீழே இறங்கு...''

விவேக்கும் மூச்சிரைக்க ஓடி வந்து நின்றான்.

''என்ன பாஸ்... இப்படி பண்ணிட்டான். குரங்குக்கு பொறந்த பய..! அரை நிமிஷத்துக்குள்ளே ட்ரான்ஸ்பார்மர் உச்சிக்குப் போயிட்டான்...''

''விஷ்ணு..! அவன் தற்கொலை பண்ணிக்குவான்னு நினைக்கிறேன்... நாம ஏதாவது பண்ணி அதைத் தடுக்கணும்!''

விவேக் சொல்லிக் கொண்டிருக்கும் போதே - ட்ரான்ஸ் ஃபார்மரின் உச்சியில் இருந்த அவன் தன் தலைக்கு மேல் போய்க் கொண்டு இருந்த இரண்டு உயர் மின் அழுத்தக் கம்பிகளைக் கைகளால் பற்றினான்.

'சடக்சட'வென்று ஒரு சத்தம்.

பத்தே விநாடிகளில் அவனுடைய உடல் ஒரு கரிக்கட்டையாய் மாறி சலனமில்லாமல் தொங்கியது.

# 14

நீ உன் வீட்டையும் நாட்டையும் நேசி.
தெய்வம் உன்னை நெருங்கும்.
உன் மனமே கோயிலாக மாறும்.

இப்படிக்கு,
**ஓர் இந்திய குடிமகன்.**

**போ**லீஸ் கமிஷனர் பரத்வாஜ் அலையாய் பெருமூச்சொன்றை விட்டபடி தன்னுடைய நெற்றியைப் பிடித்துக் கொண்டார்.

எதிரே-

விவேக், விஷ்ணு உட்கார்ந்திருந்தார்கள்.

இடம்: கமிஷனரின் வீடு. நேரம்: ராத்திரி 11 மணி.

''விவேக்..! கதிரை சுட்டுக் கொல்ல வந்தவன் நம்ம கையில் மாட்டியிருந்தா இந்நேரம் கேஸ் ஒரு முடிவுக்கு வந்திருக்கும். பட் அன்ஃபார்ச்சுனேட்லி அந்த வாய்ப்பை இழந்துட்டோம். மேற்கொண்டு நம்முடைய அடுத்த மூவ் என்ன... சொல்லுங்க..!''

''ஸார்..! இப்போதைக்கு நம்ம கையில் இருக்கிற ஒரே துருப்புச்சீட்டு கதிர்தான். ஒரு மாசத்துக்கு முந்தி கதிரைக் கடத்தின அதே கும்பல்தான் கடந்த சில நாட்கள்ல உங்க மாமனார் உட்பட ஏழு பேரைக் கடத்தியிருக்கு. கதிர் சொன்ன ஸ்டேட்மெண்ட்டை வெச்சுப் பார்க்கும்போது கடத்தப்பட்ட ஏழு பேரும் சுவிஸ் பேங்கில் தங்களுடைய கோடிக்கணக்கான ரூபாய்களைக் கொண்டு போய் முடக்கியிருக்காங்க...''

''கதிர் சொன்னது மத்தவங்களுக்கு பொருத்தமாய் இருக்கலாம். பட் என்னோட மாமனார் கதிர்மதியோனுக்கு பொருந்தாது. ஸ்விஸ் பேங்கல கொண்டு போய் தன்னோட கறுப்புப் பணத்தைக் கொட்ற அளவுக்கு அவர் தொழிலதிபர் இல்லை. சுமாரான சர்க்குலேஷனில் ஓடக்கூடிய ஒரு பத்திரிகைக்கு ஆசிரியர். பிரிண்டிங் மெஷின் எல்லாம் பேங்கல லோன் போட்டு வாங்கியது. அவர் கடத்தப்பட்டதுக்கு வேற ஏதாவது காரணம் இருக்கலாம்...''

''ஸார்..! இப்ப நம்ம மனசுல அலை பாய்ஞ்சுட்டு இருக்கிற எல்லா கேள்விகளுக்கும் நாளைக்கு விடியும்

போது விடை கிடைச்சுடும் ஸார்..."

"ஈஸிட்..! எப்படி... விவேக்..?"

"அதுக்கு உங்க உதவி வேணும் ஸார்."

"பை... ஆல்... மீன்ஸ்..! என்ன உதவி வேணும்..! கேளுங்க..!"

"ஸார்... அடுத்த ரெண்டு மணி நேரத்துல அதாவது மிட்நைட் ஒரு மணிக்கு தனியார் ஃப்ளைட் ஒன்னை எங்களுக்காக அரேஞ்ஜ் பண்ணிக் கொடுக்கணும்"

"தனியார் ஃப்ளைட்டா... எதுக்கு..?"

"மஹாராஷ்ட்ரா மாநிலத்தில் இருக்கிற புனே க்கு போகணும். புனேயிலிருந்து கார் பிடிச்சு நாசிக் போகணும்! நாசிக்கிலிருந்து மன்மாட் போகணும்!"

"எதுக்காக இந்த திடீர் பயணம்?"

"கால பைரவர்களால் கடத்தப்பட்ட அந்த ஏழு பேரும் 'மன்மாட்' என்கிற அந்த கிராமத்துலதான் இருக்காங்க..."

"ரியலி..!" கமிஷனர் நாற்காலியின் நுனிக்கு வந்தார். "உங்களுக்கு எப்படி தெரியும் விவேக்... அந்த சுதிர் சொன்னானா?"

"இது சுதிர் சொன்னது இல்லை ஸார். புதிர் சொன்னது."

"புதிரா?"

"ஆமா... ஸார்... கதிர்மதியோனின் வெற்றிலைச் சீவல் பெட்டியில் சுண்ணாம்பு டப்பிக்குள்ளே காலபைரவர்கள் எழுதிப் போட்டு இருந்தாங்களே அந்தப் புதிர்.

"அந்தப் புதிரைப் படிச்சிட்டு ஒண்ணும் புரியலைன்னு சொன்னீங்களே விவேக்..?"

"அது பொய் ஸார்... எனக்கு அந்தப் புதிரைப் படிச்ச அடுத்த நிமிஷமே அது என்னான்னு தெரிஞ்சுடுச்சு. பட் அந்த டெலிபோன் நெம்பர்தான் எனக்கு கொஞ்சம் திணறலாய் இருந்தது. சிலமணி நேரங்களுக்குப் பிறகு... அந்த டெலிபோன் நெம்பரையும் கண்டுபிடிச்சுட்டேன். இதை உங்ககிட்டே வந்து சொல்லணும்ன்னு நினைச்சுட்டு இருந்தப்ப சுதிரைப் பார்க்க ஹாஸ்பிட்டலுக்கு போக வேண்டிய தாயிடுச்சு..."

கமிஷனர் இன்னமும் பிரமிப்பாய் இருந்தார்.

"விவேக்..! நீங்க சொல்ற எதையும் என்னால நம்பமுடியலை. அந்த கஷ்டமான புதிர்க்கு எப்படி விடை கண்டு பிடிச்சீங்க..?"

"ஸார்... அது கஷ்டமான புதிர்தான்... பட் எனக்குக்



கிடைச்ச ஒரு சின்ன தடயம் அந்தப் புதிரை ஒண்ணுமே இல்லாமே பண்ணிருச்சு."

"ப்ளீஸ்... டெல் மீ... அது என்ன தடயம்?"

விவேக் தன் சட்டையின் பாக்கெட்டிலிருந்து அந்தப் புதிர் காகிதத்தை எடுத்தான், படித்தான்.

**"பணத்தோட்டத்திலிருந்து 50 கி.மீ பயணம் செய்தால் ஒரு பைத்தியக்கார மனிதன் உங்களுக்காக காத்துக் கொண்டிருப்பான். அவனைக் கீழ்க்கண்ட செல்போன் எண்ணில் தொடர்பு கொள்ளுங்கள். உண்மை தெரியும் செல்போன் எண். 00000000000.**

**பின்குறிப்பு: என்னடா! பதினோரு சைபர்களைப் போட்டுவிட்டு செல்போன் எண் என்று சொல்கிறானே என்று பார்க்கிறாயா? அந்த எண்களை லென்ஸ் வைத்து உன்னிப்பாய்ப் பார்த்தால் எண் என்ன என்பது தெரியும்."**

புதிரைப் படித்த விவேக் கமிஷனரை ஏறிட்டான்.

"ஸார்..! இதில் பணத்தோட்டம் என்கிற வார்த்தை நாசிக் என்ற ஊரைக் குறிக்கும். ஏன்னா இந்திய கரன்ஸி அங்கேதான் அச்சாகுது. பணம் அச்சடிக்கிற இடம் தோட்டம்தானே..? அந்த நாசிக்கிலிருந்து 50 கிலோ மீட்டர் தூரத்தில் இருக்கிற ஒரு ஊரின் பெயர் மன்மாட். தமிழில் 'மன்மாட்' ன்னு எழுதப்படற வார்த்தையை இங்கிலீஷ்ல எழுதும் போது 'MAN MAD' ன்னு வரும். இந்த MAN MAD ஐ தமிழில் மொழிபெயர்த்தால் நமக்கு கிடைக்கிற அர்த்தம் பைத்தியக்கார மனிதன்."

கமிஷனரின் விழிகள் வியப்பில் விரிந்தன.

"ஃபெண்டாஸ்டிக் விவேக்..! பட் 'நாசிக்' லிருந்து 50 கி.மீ தூரத்தில் 'மன்மாட்' என்கிற ஊர் இருக்குன்னு உங்களுக்கு எப்படி தெரியும்?"

"அது கதிர்மதியோனின் டயரியைப் புரட்டிப் பார்த்துகிட்டு இருந்தபோது தெரிந்தது."

"எப்படி?"

"ஸார்..! கதிர்மதியோனின் டயரியைப் படிக்கிறதுக்காக புரட்டும் போது டயரியின் முதல் சில பக்கங்களில் 'STD CODES' என்கிற தலைப்பில் இந்தியாவில் இருக்கிற முக்கியமான ஊர்களின் பெயர்க்கு நேரே எஸ்.டி.டி. கோட் எண்கள் அச்சிடப்பட்டு இருந்தது. வெள்ளைத் தாளில் பளிச்சென்று நீல நிற எழுத்துக்களும் எண்களும் வரிசையாய் தெரிய ஒரே ஒரு ஊருக்கு கீழே மட்டும் அடிக்கோடு ஒண்ணு பச்சை நிற ஸ்கெட்ச் பேனாவால்

இடப்பட்டு இருந்தது. ஒரே ஒரு விநாடிதான் அதைப் பார்த்தேன். 'MAN MAD' ன்னு போட்டு இருந்தது. அந்த ஊர் எங்கேயிருக்குன்னு அப்ப எனக்குத் தெரியாது. கதிர்மதியோனின் சன் கங்காதரன்கிட்டே இந்த ஊரைப்பற்றி அப்புறம் கேட்டுக்கலாம்ன்னு விஷ்ணுகிட்டே அந்த டயரியைக் கொடுத்துட்டேன். அதுக்கப்புறம் அந்த வெற்றிலை சீவல் பெட்டியின் சுண்ணாம்பு டப்பியில் 'புதிர்' கடிதம் கிடைச்சு படிக்கும்போது 'பைத்தியக்காரமனிதன்' என்கிற வார்த்தை 'MAN MAD' என்கிற ஊரின் பெயர்க்கு பொருத்தமாய் இருக்கிறதை உணர்ந்தேன். உடனே நான் உஷாரானேன். அந்த 'இன்றைய இந்தியா' பத்திரிகையில் ஏதோ தப்பு இருக்குன்னு மனசுக்குப்பட்டது. ராத்திரி வீட்டுக்குப் போனதும் இண்டர்நெட்டில் மஹாராஷ்ட்ரா வெப்சைட்டை போட்டுப் பார்த்தேன். 'MAN MAD' லிருந்து 50 கிலோமீட்டர் தூரத்தில் நாசிக் இருந்தது."

"க்ரேட்...! அந்த டெலிபோன் நெம்பர்?"

"அதையும் கண்டு பிடிச்சுட்டேன்."

"எப்படி..?"

"ஸார்! அந்த டெலிபோன் எண்களை மேலோட்டமாய் பார்க்கும் போது எல்லாமே சைபர்கள் மாதிரி தெரியும். பட் அதுல ஒரு கண்ணாம்பூச்சி ஆட்டம் இருக்கு... இப்ப இந்த எண்களை வெறும் கண்ணால பாருங்க." அந்த பேப்பரை நீட்டினான் விவேக்.

கமிஷனர் வாங்கிப் பார்த்துவிட்டு சொன்னார்.

"எல்லாமே ஜீரோ தான்..!"

"இப்ப... இந்த லென்ஸ் வழியா பாருங்க..." விவேக் தன் கையில் இருந்த லென்ஸை அவரிடம் கொடுக்க அவர் வாங்கிப் பார்த்து விட்டு நெற்றியைச் சுருக்கினார்.

"அந்த சைபர்களுக்குள்ளே ஏதோ புள்ளிகள் மாதிரியும் கோடுகள் மாதிரியும் லேசா தெரியுது."

"யூ...ஆர் கரெக்ட் ஸார்! அந்த சைபர்களை லென்ஸ் வழியா பார்த்து நான் வேற ஒரு பேப்பர்ல வரைந்தது... இதைப் பாருங்க."

பார்த்தார்.



பார்த்துவிட்டு புன்னகைத்தார் "என்ன விவேக்..! ஏதோ வரிசையாய் அடுக்கி வெச்ச திருஷ்டி பூசணிக்காய்கள் மாதிரி இருக்கு."

"ஸார்..! பார்க்கிறதுக்கு திருஷ்டிப் பூசணிக்காய்கள் மாதிரி இருந்தாலும் அது ஒவ்வொண்ணும் ஒரு நெம்பர்.



முதல் சைபர்க்குள்ளே ஒரு சின்ன சைபர் தெரியுது பாருங்க. அது ஜீரோ. ரெண்டாவது சைபர்க்கு கீழ ஒரு கோடு தெரியுது... அது 9. சென்னை யிலிருந்து நாம வெளி மாநிலத்துக்கு பேசறதாய் இருந்தா மொதல்ல ஜீரோ போட்டுக்குவோம். அப்புறம் எல்லா செல்போன் நெம்பர்களும் எண் 9ல் தான் ஆரம்பிக்கும். ஸோ ரெண்டாவது நெம்பர் 9 ஆகத்தான் இருக்கவேண்டும். அதுக்குப் பிறகு மூணாவது சைபரும் கீழ ஒரு கோடு இருக்கிறதால 9. நான்காவது ஜீரோ நாலு பாகமாய் பிரிக்கப்பட்டு இருக்கிறதால 4. ஐந்தாவது ஜீரோவும் நாலு பாகம். ஸோ அதுவும் 4. ஆறாவது ஜீரோ மறுபடியும் 9. ஏழாவது ஜீரோ மீண்டும் 4. எட்டாவது ஜீரோ மறுபடியும் 9. ஒன்பதாவது ஜீரோ மட்டும் கொஞ்சம் குழப்பம். பத்தாவது ஜீரோவில் அஞ்சு பாகம் பிரிக்கப்பட்டு இருக்கிறதால அது 5. பதினோராவது ஜீரோவில் கோடு மேல் பக்கம் தெரியறதால அது 6."

கமிஷனர் எழுந்து கை குலுக்கினார்.

"விவேக்..! யூ ஹேவ் டன் குட் ஜாப். பட் இந்த சம்பவங்களுக்குப் பின்னால் என்னோட மாமனார் கதிர்மதியோன் இருக்கக்கூடும்ன்னு சந்தேகப்பட நீங்க இல்லையா?"

"எஸ்... ஸார்..."

"எதனால உங்களுக்கு அந்த சந்தேகம்?"

"கதிர் கொடுத்த ஸ்டேட்மெண்ட்டில் ஸ்விஸ் பேங்கில் கோடிக்கணக்கில் கறுப்புப்பணம் போட்டு வைத்து இருக்கும் நபர்களின் லிஸ்ட் இருந்தது. அந்த லிஸ்டில் கதிர்மதியோனின் பெயர் இல்லை. லிஸ்டில் அவர் பெயர் இல்லாத போது அவர் எதுக்காக கடத்தப்படணும்..?"

"நல்ல கேள்வி..! ஓ.கே... விவேக்..! யார் தப்பு பண்ணியிருந்தாலும் சட்டப்படி நடவடிக்கை எடுக்க நான் தயங்க மாட்டேன்... ஃபர்தரா நீங்க என்ன பண்ணப் போறீங்க.?"

"ஸார்... இன்னிக்கு மிட்நைட் புனே புறப்பட்டுப்போக தனியார் விமானம் ஒண்ணை ஏற்பாடு பண்ணித் தாணும். நானும் விஷ்ணுவும் விடியற்காலை மூணு மணிக்கெல்லாம் புனே ஏர்போர்ட் போய்ச் சேர்ந்து அங்கிருந்து டாக்ஸி மூலமாய் மன்மாட் போய் அங்கே இருக்கிற லோக்கல் போலீஸை காண்டாக்ட் பண்ணி, செல்போன் நெம்பர்க்குரிய நபரின் அட்ரஸைக் கண்டுபிடிச்சு..." பேசப் பேச கமிஷனர் குறுக்கிட்டார்.

"ஒரு நிமிஷம் விவேக்..! அந்த செல்போன்

நெம்பர்ல ஒரு ஜீரோவுக்குரிய எண் எதுன்னு சரியாத் தெரியாமே அட்ரஸை எப்படிக் கண்டு பிடிப்பீங்க..?''

''அது ஒரு நெம்பர்தானே..? 1, 2, 3, 7, 8 இந்த எண்களில் ஏதாவது ஒரு எண் அதுக்கு பொருந்துதான்னு பார்த்து போலீஸ் உதவியோடு கண்டு பிடிச்சுடுவோம்..!''

''சூப்பர்..!''

மாடியிலிருந்து குரல் கேட்டது.

விவேக்கும் விஷ்ணுவும் நிமிர்ந்து பார்த்தார்கள்.

கதிர்மதியோன் சால்வையைப் போர்த்திக் கொண்டு ஒரு புன்சிரிப்போடு படிகளில் இறங்கிக் கொண்டிருந்தார். அவருடைய வயதையும் மீறி உடம்பில் ஒரு துள்ளல் தெரிந்தது. கையில் பிஸ்டல்.

## 15

**சு**விஸ் வங்கிகளில் கோடி கோடியாய் இந்தியப் பணம் குறட்டை விட்டுத் தூங்கிக் கொண்டு இருக்கிறது. அதனால் இந்தியப் பொருளாதாரம் இங்கே சோம்பல் முறித்துக் கொண்டு இருக்கிறது. இந்திய பணத்தின் கும்பகர்ணத் தூக்கத்தை கலைக்கப் போகும் அந்த ராமனை எதிர்பார்த்து இந்த பாரத மக்கள் காத்துக் கொண்டு இருக்கிறார்கள். அவர்களில் நானும் ஒருவன்.

இப்படிக்கு,
**ஓர் இந்தியன்.**

**வி**வேக்கும் விஷ்ணுவும் அவரையே பார்த்துக் கொண்டு அசையாமல் உட்கார்ந்திருக்க, கதிர்மதியோன் சிரித்தபடி மெல்ல நடையிட்டு பக்கத்தில் வந்தார். கமிஷனர் புன்னகையோடு ஒரு சிகரெட்டை எடுத்து வாயில் பொருத்திக் கொண்டு லைட்டரைத் தட்டினார்.

கதிர்மதியோன் ஒரு நாற்காலியை இழுத்துப் போட்டுக் கொண்டு உட்கார்ந்தார்.

''என்ன விவேக் தம்பி..! என்னை இந்த இடத்துல பார்த்ததும் உங்களுக்கு ஆச்சர்யமாய் இருந்து இருக்கும்!''

''ம்... நான் எதிர்பார்க்கலை... இப்படி ஒரு



கூட்டணியை நான் நினைச்சு கூட பார்க்கலை...''

''என்ன பண்றது தம்பி..! என்னோட வாழ்க்கை என்கிற பாதையில் ஹேர்பின் பெண்ட்ஸும், யூ டர்ன்களும் அதிகம். அதனால் தான் உங்க முன்னாடி இப்படி திடுதிப்ன்னு வந்து நிக்க வேண்டியதாயிருச்சு... இருந்தாலும் உங்களுக்கு என்னுடைய பாராட்டுக்கள்''

''எதுக்கு பாராட்டு..?''

''கமிஷனர்... அதான் தம்பி... என்னோட மருமகன் உங்களைப்பத்தி பெருமையா சொன்னார். நீங்க ரொம்ப கெட்டிக்காரராம். ஸ்காட்லாண்ட் போலீஸ்கிட்ட போய் ட்ரெய்னிங் எடுத்துட்டு வந்தவங்களாம். கேஸ் எவ்வளவு சிக்கலாய் இருந்தாலும் நீட்டா ஹேண்டில் பண்ணி குற்றவாளிக்கு முன்னாடி போய் நின்னு 'ஹலோ' சொல்வீங்களாம். என் கிட்டே ஒரு கெட்ட பழக்கம் தம்பி... யாராவது ஒருத்தரை திறமைசாலின்னு சொன்னா நான் அவங்களுக்கு ஒரு பரீட்சை வைக்கிறது வழக்கம். அப்படித்தான் என்னோட வெற்றிலைச்சீவல் பெட்டியில் உங்களுக்கு ஒரு பரீட்சை வைச்சேன். **பணத்தோட்டம். 50 கிலோ மீட்டர். பைத்தியக்கார மனிதன். 11 சைபர் செல்போன் நெம்பர்.** உங்களால இதைக் கண்டுபிடிக்க முடியாதுன்னு நினைச்சு இந்த பரீட்சையை வெச்சேன். என்னோட மருமகன் கூட பயப்பட்டார். என்னோட கைகளைப் பிடிச்சுட்டு 'வேண்டவே வேண்டாம்'ன்னு கெஞ்சினார். நான்தான் உங்களால கண்டுபிடிக்க முடியாதுன்னு நினைச்சு பரீட்சையை வெச்சேன். பரீட்சையை வெச்ச நான் ஃபெயில். நீங்க பாஸ் தம்பி. நீங்க பாஸாகியும் பிரயோஜனம் இல்லை. என்னா 'மன்மாட்'டில் இருக்கிற என்னோட இடத்தையும் என்னால கடத்தப்பட்ட ஆறுபேரையும் வேற இடத்துக்கு நான் மாத்திட்டேன். நான் கொடுத்த அந்த செல்போன் நெம்பர் என்னோட குழுவில் இருக்கிற செக்யூர்ட்டி ஒருத்தனோட நெம்பர். இனி நீங்களும் உங்க சகாவும் ஃபளைட் பிடிச்சு புனே போறதும், அங்கிருந்து நாசிக் போறதும், நாசிக்கிலிருந்து மன்மாட் போறதும் அங்கே போய் போலீஸ் உதவி கேட்கிறதும் வேஸ்ட்...''

விவேக் கோபமாய் கமிஷனரைப் பார்த்தான்.

''ஸார்...! உங்களோட இன்னொரு முகம் இப்படி

இருக்கும்ன்னு நான் எதிர்பார்க்கலை."

கமிஷனர் தன் கையில் இருந்த சிகரெட்டின் சாம்பலை ஆஷ்ட்ரேயில் தட்டிவிட்டு அண்ணாந்து சிரித்தார்.

"மிஸ்டர் விவேக்..! நானும் என்னோட மாமனாரும் பண்ணிட்டிருக்கிறது சட்ட விரோதமாய் தெரிஞ்சாலும் இது ஒரு பிசினஸ். எங்களால கடத்தப்பட்ட அந்த ஆறுபேரும் இப்போ நல்ல ஆரோக்கியத்தோடு இருக்காங்க. நாங்க அவங்களை எதுவும் பண்ணிடலை; பண்ணவும் மாட்டோம். ஏன்னா அவங்க எங்களுக்கு பொன் முட்டையிடும் வாத்துக்கள். நான் என்ன சொல்ல வர்றேன்னு உங்களுக்குப் புரிஞ்சிருக்கும். அந்த ஆறு பேரும் கோடிக்கணக்கான ரூபாய்களுக்கு சொந்தக்காரர்கள். ஸ்விஸ் வங்கிகளில் கறுப்புப் பணத்தைக் கொண்டு போய் முடக்கிவிட்டு ராத்திரிகளில் தூக்கத்தை தொலைத்தவர்கள். முதலில் இந்த ஸ்விஸ் வங்கி கறுப்பு ஆடுகளை வெளியுலகத்துக்கு தோலுரித்துக் காட்டத்தான் ஒரு இயக்கமாய் செயல்பட்டோம். அதுக்கப்புறம்தான் இது ஒரு பணம் கொட்டுகிற தொழில்ன்னு தெரிஞ்சுது. நாங்க அவங்களை மிரட்டின போது விஷயத்தை வெளியே சொல்லாமே இருக்கிறதுக்காக சில கோடிகள் லஞ்சமா தர்றதா சொன்னாங்க. 'அட இப்படியும் பணம் சம்பாதிக்க வழி இருக்கா'ன்னு ஆச்சர்யப்பட்டோம். அதுக்காக ஸ்விஸ் வங்கிகளில் பணத்தைக் கொண்டு போய் கொட்டுகிற பேர்வழிகள் யார் யார்ன்னு கண்டுபிடிக்க டெல்லியில் இருக்கிற பேங்க் ஆஃப் ஸ்விஸ்ஸில் ஃபாரின் எக்சேஞ்ச் பிரிவில் வேலை செய்யற கதிர் என்கிற நபரை வேற ஒரு தெரிஞ்ச நபர் மூலமா காண்டாக்ட் பண்ணிப் பேசிப் பார்த்தோம். அந்த கதிர் வழிக்கு வர்லை. அதுக்கப்புறம்தான் அவனைக் கடத்தினோம். அவன் எங்களை அடையாளம் தெரிஞ்சு நாளைக்கு வெளியே போலீஸில் சொல்லிடக்கூடாதுங்கிறதுக்காக கதிரின் கண்களை கறுப்புத்துணியால் கட்டி வெச்சுத்தான் பேசினோம். அவனைச் சித்ரவதை பண்ணியே தகவல்களை வாங்கினோம். அவன் கொடுத்த லிஸ்ட்படி தமிழ்நாட்ல மட்டும் நூற்றுக்கும் மேற்பட்ட தொழிலதிபர்கள் ஸ்விஸ் பேங்க்குகளில் பணத்தைக் கொண்டு போய் கொட்டியிருப்பதை தெரிஞ்சுகிட்டோம். இது எல்லாத்தைக் காட்டிலும் இன்னொரு விஷயத்தை



அந்த கதிர்கிட்டேயிருந்து தெரிஞ்சுகிட்டோம். அது, இந்தியா முழுவதும் எங்களை மாதிரியான குழுக்கள் ஒருங்கிணைந்து செயல்பட்டு ஸ்விஸ் பேங்கில் பணம் போட்டு இருக்கும் கறுப்புப் பண முதலைகளை வேட்டையாடிகிட்டும் பணம் பறிச்சுட்டும் இருக்காங்களாம். இது தொடர்பாய் பதினொரு பேர் கொலை செய்யப்பட்டிருக்கிறதாய் க்ரைம் அக்கரன்ஸ் ரிப்போர்ட் சொல்லுது. நாங்க கடத்தியிருக்கிற ஆறுபேரையும் உடல்ரீதியாய் நாங்க துன்புறுத்தவே இல்லை. எங்களை அவங்க அடையாளம் தெரிஞ்சுக்கக்கூடாதுங்கிறதுக்காக கண்களை மட்டும் கட்டி வெச்சிருக்கோம். நாங்க சில கோடிகளைக் கேட்டிருக்கோம். செல்போன்கள் மூலமாய் அந்த ஆறுபேரோட மனைவிகள் கிட்டேயும் போலீஸுக்குத் தெரியாமே பேச்சு வார்த்தை நடந்திட்டிருக்கு. பணம் கைக்கு வந்ததும் அவங்களுக்கு விடுதலை..."

கதிர்மதியோன் குறுக்கிட்டார்.

"ஆனா... தம்பி..! உங்க ரெண்டு பேருக்கு மட்டும் விடுதலை கிடையாது. எங்களை அடையாளம் தெரிஞ்சுகிட்ட யாரையும் நாங்க உயிரோடு விட்டது இல்லை. கதிரை தீர்த்துக்கட்ட ஹாஸ்பிட்டலுக்கே ஒரு ஆளை அனுப்பி வெச்சோம். அந்த முயற்சியை நீங்க முறியடிச்சதால அவன் ட்ரான்ஸ்பார்மர்ல ஏறி உயிரை விட்டான். ஆனா மறுபடியும் கதிரைத் தீர்த்துக்கட்ட சரியான ஆளை அனுப்புவோம். உங்க ரெண்டு பேரையும் தீர்த்துக்கட்டற பொறுப்பை வடநாட்டில் இருக்கிற ஒரு இயக்கத்துகிட்டே ஒப்படைக்கப் போறோம். நாளைக்குக் காலையில் உங்க கார் ஒரு ஹைவேஸ் ரோட்டில் அநாதையாய் நின்னுட்டிருக்கும். உங்களை யாரோ கடத்திட்டுப் போயிட்டதாய் என்னோட மருமகன் கமிஷனர் பத்திரிக்கைகளுக்கும் டி.வி.க்கும் பேட்டி கொடுப்பார்."

விவேக் சிரித்தான்.

"இதுவரைக்கும் நீங்க ரெண்டு பேரும் மாத்தி மாத்தி பேசினீங்க... இனி நாங்க பேசலாமா?"

"பேசறதுக்கு என்ன இருக்கு?"

"நிறைய இருக்கு.! டேய்.. விஷ்ணு... நீ மொதல்ல பேசு..!"

"உத்தரவு பாஸ்..." தொண்டையைக் கனைத்துக்

தொண்ட விஷ்ணு பொதுக்கூட்டத்தில் ஏதோ ஒரு அரசியல்வாதி பேசுவது போல் பேச ஆரம்பித்தான்.

''பெருமதிப்புக்கும் மரியாதைக்கும் உரிய 'இன்றைய இந்தியா' பத்திரிக்கையின் ஆசிரியர் கதிர்மதியோன் அவர்களே! தமிழக காவல் துறையின் கண்ணியத்தை கைமா உருண்டை பண்ணிவிட்ட கமிஷனர் பரதவாஜ் அவர்களே! மற்றும் இந்த வீட்டின் இண்டு இடுக்குகளில் ஒளிந்து கொண்டிருக்கும் கரப்பான் பூச்சிகளே...! என் தலைக்கு மேலே பறந்து கொண்டு இருக்கும் கொசுக்களே! காற்றில் பரவியிருக்கும் பன்றிக் காய்ச்சல் வைரஸ்களே...! உங்கள் அனைவர்க்கும் இந்த விஷ்ணுவின் ராத்திரி வணக்கம்.

என்னையும் என்னுடைய பாஸ் விவேக் அவர்களையும் ஒரு வடநாட்டு இயக்கத்திடம் ஒப்படைக்கப் போகிறார்களாம். அதற்கு முன்னால் அவர்கள் ஒன்றைச் சிந்தித்து பார்க்க வேண்டும். மாமனாரும் மருமகனும் கூட்டணி அமைத்துக் கொண்டு ஸ்விஸ் பேங்கில் பணம் போட்டு இருக்கும் பணமுதலைகளை வேட்டையாடி கோடி கோடியாய் பணம் பறிப்பார்களாம். அதற்குத் தடையாய் இருப்பவர்களைக் கொலை செய்வார்களாம். அதை நாங்கள் பாப்கார்ன் சாப்பிட்டபடி பார்த்துக் கொண்டு இருக்க வேண்டுமாம். மாமனாரும் மருமகனும் ஒரு கூட்டணி அமைத்துக் கொள்ளும் போது நாங்கள் மட்டும் சும்மா இருப்போமோ என்ன...? நாங்களும் ஒரு கூட்டணி அமைத்துள்ளோம். அந்த கூட்டணியில் யார் இருக்கிறார்கள் என்று தெரிந்தால் எல்லோரும் ஆடிப்போவீர்கள்...''

விஷ்ணு பேசப் பேச கமிஷனர் கோபமாய் எழுந்தார்.

''கூட்டணியா..? என்ன உளர்றே?''

விவேக் கமிஷனரைப் பார்த்து சொடுக்கு போட்டான். ''ஸார்..! அவன் உளறலை. உண்மையைத்தான் சொல்லிட்டிருக்கான். எங்க் கூட்டணியில் இருக்கிற நபர் யார்ன்னு தெரிஞ்சா உங்களுக்கு மட்டும் இல்லை. இந்த தமிழ்நாட்டுக்கே அதிர்ச்சியாய் இருக்கும். அந்த நபர் யார்ன்னு தெரிஞ்சுக்க நீங்க ஆசைப்பட்டா போய் வாசல் கதவைத் திறந்து பாருங்க. அங்கே நின்னுட்டு இருப்பாங்க..!''



கமிஷனரின் முகமும் கதிர்மதியோனின் முகமும் பயத்தில் வெளுத்தது. வியர்த்தது.

''மாப்ளே..! போகாதீங்க... இந்த ரெண்டு பேரும் நம்மை ஏமாத்தப் பார்க்கிறாங்க. மொதல்ல இவங்களைப் போட்டுத் தள்ளணும்.'' பதட்டத்தோடு தன் கையில் இருந்த பிஸ்டலை உயர்த்தினார் கதிர்மதியோன்.

கமிஷனர் தடுத்தார். ''வேண்டாம் மாமா...! இவங்களை நாம தீர்த்துக்கட்டினா அது பிரச்னையாயிடும். இன்னும் ஒரு மணி நேரத்துக்குள்ளே அந்த வடநாட்டு இயக்கத்துகிட்டே இவங்களை ஒப்படைக்கப் போறோம். அவங்க இவங்களைப் பார்த்துக்குவாங்க. இப்ப கதவுக்கு வெளியே இருக்கிற அந்த பார்ட்னர் யார்ன்னு பார்க்கலாம்.''

''வேண்டாம்... மாப்ளே..! எனக்கு பயம்மாயிருக்கு.''

''இதோ... பாருங்க மாமா... நான் போலீஸ் கமிஷனர். நீங்க எதுக்கும் பயப்பட வேண்டியது இல்லை. என் கையிலேயும் பிஸ்டல் இருக்கு... நான் போய் கதவைத் திறக்கிறேன். நீங்க இந்த ரெண்டு பேரையும் கண் கொத்தி பாம்பாய்ப் பார்த்துட்டிருங்க... ஏதாவது விபரீதம் நடக்கிற மாதிரி உங்க மனசுக்குப்பட்டா ரெண்டு பேரையும் தயவு தாட்சண்யம் பார்க்காமே சுட்டுக் தள்ளுங்க,'' சொன்னவர் தன் இடுப்பில் இருந்த துப்பாக்கியை எடுத்துக் கொண்டு ஜாக்கிரதை உணர்வோடு கதவை நெருங்கினார். தாழ்ப்பாளை மெல்ல விலக்கி கதவைத் திறந்தார்.

வெளியே - அரையிருட்டில் ஒரு பெண்ணின் உருவம்.

''யா...யாரது...?''

சற்று பயத்தோடு கேட்டுக் கொண்டே உருவத்தை உற்றுப் பார்த்தவர் திடுக்கிட்டார்.

''தேவசேனா...' நீ... நீயா?'' கேட்ட கமிஷனர்க்குப் பின்னால் விஷ்ணுவின் குரல் கேலியாய் ஒலித்தது.

''என்ன கமிஷனர் ஸார்... மிரண்டு போயிட்டீங்க, மேடம் உங்களுக்கு நெருங்கின உறவு! ஒய்ஃப், மனைவி, பாரியா, பீவி, பத்தினி, பெண்டாட்டி...''

கமிஷனரின் கையில் இருந்த பிஸ்டல் தாழ்ந்தது தேவசேனா- கண்ணீரோடு புன்னகைத்தாள். ''என்னை நீங்க எதிர்பார்த்திருக்க மாட்டீங்க. ரெண்டு நாளைக்கு முன்னாடி பெங்களூரில் இருக்கிற

என்னோட அக்கா வீட்டுக்கு புறப்பட்டுப் போறதாய் உங்ககிட்டே நான் சொன்னது பொய். இதே சென்னையில் என் ஃப்ரண்டோட வீட்டில்தான் இருந்தேன்.''

"தேவசேனா...நீ...நீ... எப்படி...இவங்களோட....?''

அவள் சிரித்தாள்.

''என்னங்க இது...! அதர்மத்தின் மொத்த உருவமாய் இருக்கிற எங்கப்பாவோடு நீங்க பார்ட்னர்ஷிப் போட்டுக்கலாம். நான், நியாயத்துக்கும் நேர்மைக்கும் பிரதிநிதியாய் இருக்கிற விவேக்கோடு பார்ட்னர்ஷிப் போட்டுக்கக்கூடாதா..? எனக்கு வீட்ல சமைக்கிற வேலை மட்டும் இல்லீங்க... நீங்க காக்கி சட்டையைப் போட்டுகிட்டு சரியான ரூட்ல போறீங்களா இல்லையான்னு பார்க்கிற வேலையும்தான். நீங்க ரெண்டு பேரும் பண்ணின - பண்ணப்போற எல்லா தப்பையும் போலீஸ்ல சொல்லிட்டேன்.'' - தேவசேனா பேசிக்கொண்டிருக்கும்போதே-

வெளியே கமிஷனரின் வீட்டு வாசலில் சி.பி.சி.ஐ.டி போலீஸாரின் சிவப்பு விளக்கு சுழலும் ஜீப்கள் இரண்டு சத்தம் இல்லாமல் வந்து நின்றன. 'எல்லாம் திட்டம் போட்டு செய்திருக்கிறார்கள்.' கமிஷனர் ஸ்தம்பித்து போய் நிற்க, எழெட்டு அதிகாரிகள் புடைசூழ பூட்ஸ் சத்தங்களோடு ஜீப்பினின்றும் இறங்கி உள்ளே வந்தார்கள். எல்லோருமே உயர் அதிகாரிகள். மௌனமான விநாடிகளில் கமிஷனர் கைக்கும் கதிர்மதியோன் கைக்கும் கைவிலங்குகள் ஏறிக் கொண்டிருக்க-

சி.பி.சி.ஐ.டி. தலைவர் ரீகவேந்திரன் விவேக்கை நெருங்கினார் ''மிஸ்டர் விவேக்..! நீங்க கொடுத்த தகவல்களை வெச்சு மஹாராஷ்ட்ரா ஸ்டேட்டில் 'மன்மாட்' டுக்கு பக்கத்தில் இருந்த ஒரு கிராமத்து வீட்டில் சிறை வைக்கப்பட்டு இருந்த சென்னை முத்துகிருஷ்ணன், கோவை பன்சிலால், மதுரை செல்வ பாண்டியன், திருச்சி அமுதபாரதி, சேலம் தனபாலன், பாண்டிச்சேரி கிரிஸ்டோபர் எல்லோரையும் மீட்டுட்டோம். ஆல் ஆர் ஸேஃப்...''

''தட்ஸ் குட்...''

''அந்த ஆறுபேரும் உங்ககிட்டே ஒரு தகவலைத் தெரிவிக்க சொன்னாங்க.''

''என்ன..?''



''அந்த ஆறுபேரும் ஸ்விஸ் பேங்கில போட்டு வெச்சு இருக்கிற கோடிக்கணக்கான கருப்புப் பணத்தை இந்திய அரசுக்கு முறைப்படி கொடுத்துடப் போறாங்களாம்.''

''வெரி நைஸ்..! இந்த மாதிரி எல்லாரும் ஸ்விஸ் பேங்கல பணம் போட்டு வெச்சிருக்கிற எல்லோர்க்கும் வந்துட்டா உலக வங்கிக்கே நாம கடன் தரலாமே...?'' விவேக் சொல்ல - அதிகாரி சிரித்தார்.

''இது யோசிக்க வேண்டிய விஷயம் மிஸ்டர் விவேக். பட் சம்பந்தப்பட்டவங்க யோசிப்பாங்களா?''

''யோசிக்க ஆரம்பிச்சுட்டாங்க. நம்ம தமிழ்நாட்டைச் சேர்ந்த 6 பேர் அதுக்கான பிள்ளையார் சுழியையும் போட்டுட்டாங்க. இது இனி தொடரும்...! நாளைக்கு பாருங்களேன் - எல்லா பேப்பர்களிலேயும் இதுதான் தலைப்புச் செய்தி!''

''பாஸ்...'' என்றான் விஷ்ணு.

''என்னடா?''

''இந்த இடத்துல எனக்கு ஒரு தத்துவம் சொல்லணும் போல் தோணுது...! மூளையில் ஒரே அரிப்பு...''

''சொல்லுடா... கேட்போம்.''

தொண்டையைக் கனைத்து விட்டு விஷ்ணு சொன்னான்.

''கசப்பான அனுபவங்கள் இல்லையென்றால் இனிமையான வாழ்க்கையை உணர முடியாது. அதனால...''

''அதனால...?''

''தினசரி ரெண்டு பாகற்காய் சாப்பிடணும்..! எப்படி நம்ம தத்துவம்...?''

.......

**முற்றும்.**